ஓட்டுநருக்குரிய அடிப்படை மற்றும் இறுதி விளக்கத் தேர்வுகளை எழுத நீங்கள் விண்ணப்பிக்கும்போது, முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற நீங்கள் விரும்புவீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். இருப்பினும், இரு தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றால், வாகனம் ஓட்டும் நேடைமுறைச் சோதனை எடுக்கும் அடுத்த கட்டத்திற்கு நீங்கள் செல்ல முடியும். நீங்கள் கற்ற விளக்கங்களை சாலையில் ஓட்டும்போது "பயன்படுத்த வேண்டும்". சாலை நிலவரக்கள் மாறிக் கொண்டே இருக்கும். நீக்கள் சந்திக்கும் நூற்றுக்கணக்கான மாறுபட்ட சூழ்நிலைகளில் இவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல், வாகனம் ஓட்டும் நடைமுறைச் சோதனையில் நீங்கள் தேர்ச்சி பெற உதவும்.

உங்களுக்கு உதவியாக, விளக்கத் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு அப்பால் ஆழமான புரிந்துணர்வைப் பெற இந்தப் புத்தகம் விரிவான கேள்விகளை வழங்குகிறது. உங்கள் புரிந்துணர்வின் ஆழத்தைச் சோதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கேள்விகள், புதிய நெடுஞ்சாலை விதிகள் புத்தகம் 1 அல்லது 2ல் காணப்படும் பகுதிகளை உள்ளடக்குகின்றன. தேர்ந்தெடுக்கக்கூடிய சாத்தியமான விடைகள் ஓரளவு ஒத்திருப்பதால், உங்கள் அறிவாற்றலுக்கு உண்மையான சோதனையாக அமையும். பெரும்பாலான கேள்விகளுக்குக் கூடுதல் விளக்கக் குறிப்புகள் உள்ளன. விடையை வலியுறுத்த அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட விடை ஏன் சரியானது என்பதை விளக்க அவை உதவும். மேலும், ஒவ்வொரு கேள்விக்கும் விளக்க நூலில் கவனிக்கவேண்டிய பக்க எண்ணும் குறிப்பிடப்படுவதால், நீங்கள் சீக்கிரமாக மறுவுறுதிப்படுத்தலாம் அல்லது ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள மீண்டும் படித்துப் பார்க்கலாம்.

Mighty Minds விளக்கநூல், கேள்வி நூல் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன்வழி நீங்கள் வெறும் ஓட்டுநராக மட்டுமல்லாது, வாகனம் ஓட்டும் அனுபவத்தின்வழி "பாதுகாப்பான, நல்ல ஓட்டுநராக" உருவாவீர்கள் என நாங்கள் நம்புகிறோம்.



## பகுதி 1 - ஓட்டுனர் உரிமம் தகவல்

Page


- அறிமுகம் — 3
- ஓட்டுனர் உரிமம் — 3
- உரிமங்கள் பிரிவுகள் — 3
- உரிமம் விண்ணப்பித்தல் — 4
- வெளிநாட்டு ஓட்டுனர் உரிமத்தை மாற்றுதல் — 6
- சோதனைக் காலம் (புதிய) ஓட்டுநர்கள் — 6
- ஓட்டுநர் முன்னேற்ற புள்ளிகள் அமைப்பு (DIPS) — 8
- காலாவதியான ஓட்டுனர் உரிமம் — 14
- மருத்துவ பரிசோதனை — 14


## பகுதி 2 - போக்குவரத்து குறிகளும், விளக்கு சமிக்ஞைகளும் மற்றும் சாலை அடையாளங்களும்


- போக்குவரத்து குறிகளும் மற்றும் விளக்கு சமிக்ஞைகளும் — 15
- குறிகள் — 15
- கட்டாய குறிகள் — 15
- தடையுத்தரவு குறிகள் — 19
- எச்சரிக்கை குறிகள் — 22
- ஒழுங்குமுறை குறிகள் — 31
- தகவல் குறிகள் — 32
- பாதசாரிகள் கடக்கும் குறிகள் — 36
- சுரங்கங்களில் போக்குவரத்து குறிகள் — 36
- திசை குறிகள் — 38
- வசதி குறிகள் — 39
- வேறு குறிகள் — 39
- முக்கியமான இடங்களின் குறிகள் — 40
- வேலை மண்டல குறிகள் — 40
- எலக்ட்ரானிக் குறிகள் - EMAS — 42
- வாகன அடையாளங்கள் — 46
- சாலை அடையாளங்கள் — 47
- போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் — 59
- வேறு சமிக்ஞை விளக்குகள் — 60
- போலீஸ் அதிகாரி காட்டும் கை சமிக்ஞைகள் — 61
- வாகனம், மோட்டார்சைக்கிள், மற்றும் சைக்கிள் ஓட்டிகள் காட்டும் கை சமிக்ஞைகள் — 63


## பகுதி 3 - போக்குவரத்து விதிகளும் ஒழுங்குமுறை கட்டளைகளும்


- இடப்பக்கம் செல்லுக விதி — 65
- சாலைத்தட ஒழுங்குமுறை — 65
- தாண்டிச்செல்லுதல் — 66
- வேக கட்டுப்பாடுகள் — 68
- போக்குவரத்தை மட்டுப்படுத்துதல் — 68
- சாலை சந்திப்புக்களில் "வழி விடுக" விதி — 68
- இடப்பக்கம் திரும்புதலும் வலப்பக்கம் திரும்புதலும் — 69
- "U" வளைவுகள் — 71
- வட்டச்சுற்று வழி — 72

- மஞ்சள் பெட்டி சந்திப்புகள் 72
- நிறுத்துதலும் நிறுத்தி வைத்தலும் 73
- இருக்கை வார்கள் 74
- வாகன விளக்குகள் 75
- இலகுரக சரக்கு வாகனங்கள் 78
- மதுபானம் 78
- வாகனம் ஓட்டும் போது கைத்தொலைபேசி பயன்படுத்துதல் 79
- உயர கட்டுப்பாடு 79

பகுதி 4 - சாலை நடத்தை விதிகள்

- புறப்பட்டுச் செல்லுதல் 80
- கண்ணாடிகளும் சமிக்ஞைகளும் 80
- சாலையில் ஓட்டிச்செல்லுதல் 81
- நெருங்கிப் பின்தொடர்தல் 82
- பாதுகாப்பான தூரத்தை நிலைநாட்டுதல் 83
- இரண்டு-விநாடி விதிமுறை 83
- நிறுத்துதற்குரிய தூரம் 85
- பின்பக்கமாக ஓட்டுதல் 86
- நடையர்களின் பாதுகாப்பு 87
- அவசரகால வாகனங்கள் 89
- சாலையில் பாதுகாப்பான ஓட்டுத்தல் மற்றும் சாலை மரியாதை 89
- ஓட்டுநர் மற்றும் ஓட்டும் சுற்றுச்சூழல் 93
- ஓட்டுநரின் நிலை 94
- வானிலை நிலைமைகள் 97
- ஒளி நிலைமைகள் 102
- சாலை நிலைமைகள் 107
- போக்குவரத்து நிலைமைகள் 111
- நிற்கும்போதும் ஓட்டிச் செல்லும்போதும் செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும் 112
- சாலையில் செல்லும் தகுதி 115
- வேலை மண்டலங்களில் சாலை பயனர்கள் 117
- பள்ளி மண்டலங்களில் ஓட்டுதல் 118
- சுரங்கங்கள் ஓட்டுதல் 119

பகுதி 5 - காரின் பாகங்கள் மற்றும் கட்டுப்பாடுகள்

- பாகங்கள் 121
- செயற்பாட்டுக் கருவிகள் 123
- வாகனக் கட்டுப்பாட்டுக் கருவிகள் 124

பகுதி 6 – திருட்டை தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் 126

பகுதி 7 - பார்க்கிங் குறிகள் மற்றும் அடையாளங்கள் 127

பகுதி 8 - மோட்டார் கோரிக்கை கட்டமைப்பு 128






**1. நீங்கள் எதற்காக ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவேண்டும்? ஏனெனில்**

(A) உரிமம் இல்லாமல் ஓட்டுவது ஒரு குற்றமாகும்.
(B) அனைவருக்கும் ஓட்டம் திறன் இருக்காது.
(C) போக்குவரத்து போலீஸ் ஓட்டுநர்களின் பதிவினை வைத்து இருப்பது தேவைப்படுகிறது.

விடை: (A). *குறிப்பு: சாலையில் செல்வதற்குமுன் ஒவ்வொரு ஓட்டுநருக்கும் வாகனம் ஓட்டுவதற்குரிய அறிவும் அடிப்படைத் திறன்களும் அத்துடன் விதிகள் மற்றும் சட்டங்கள் இருப்பதை உறுதிப்படுத்தவே ஓட்டுநர் உரிமம் பெறும் நடைமுறை உள்ளது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 3)*

**2. எந்த வாக்கியம் உண்மையானது?**

(A) வகுப்பு 3A உரிமம் வைத்திருப்பவர் கையேடு மற்றும் தானியங்கி வாகனங்கள் ஓட்ட அனுமதி உள்ளது.
(B) வகுப்பு 3 உரிமம் வைத்திருப்பவர் கையேடு மற்றும் தானியங்கி வாகனங்கள் ஓட்ட அனுமதி உள்ளது.
(C) வகுப்பு 3 உரிமம் வைத்திருப்பவர் கையேடு வாகனங்கள் மட்டும் ஓட்ட அனுமதி உள்ளது.

விடை: (B). *குறிப்பு: வகுப்பு 3A உரிமம் வைத்திருப்பவர்கள் கையேடு கியர் டிரான்ஸ்மிஷன் கொண்ட வாகனங்கள் ஓட்ட அனுமதி இல்லை. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 4)*

**3. வகுப்பு 3 மற்றும் 3A உரிமம் வைத்திருப்பவர்கள் மோட்டார் வாகனத்தை ஓட்ட மேற்படாத பாரம் ஏற்றாத எடை**

(A) 1,500 கிலோ
(B) 2,000 கிலோ
(C) 3,000 கிலோ

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 4)*

**4. வகுப்பு 3 மற்றும் 3A உரிமம் வைத்திருப்பவர்கள் ஒரு மோட்டார் வாகனத்தில் _______ எடுத்து செல்லலாம்**

(A) ஓட்டுநர் உட்பட 7 பயணிகள்
(B) ஓட்டுநர் தவிர்த்து 7 பயணிகள்
(C) ஓட்டுநர் தவிர்த்து 8 பயணிகள்

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 4)*

**5. பாரம் ஏற்றாத எடை 2,500 கிலோவிற்கு மேற்பட்ட மோட்டார் வாகனத்தை ஓட்ட அல்லது ஒரு சுமை மற்றும் பயணிகளை அழைத்து செல்ல, நீங்கள் பெற்றிருக்க வேண்டும்**

(A) வகுப்பு 3 உரிமம்.
(B) வகுப்பு 4 உரிமம்.
(C) வகுப்பு 4A உரிமம்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 4)*

**6. ஓட்டுநருக்குரிய அடிப்படைச் சோதனை (BTT) எதில் உங்களது அறிவாற்றலைச் சோதிக்கிறது**

(A) சாலைகளில் ஓட்டுவதற்குரிய விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள்.
(B) வெவ்வேறு போக்குவரத்துக் குறிகள், சமிக்ஞைகள், அடையாளக் குறிகள்.
(C) மேற்காணும் (A) மற்றும் (B) இரண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 6)*

**7. பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையானது?**

(A) ஓட்டுநருக்குரிய அடிப்படைச் சோதனையில் (BTT) முதலில் தேர்ச்சி பெறாமல் நீங்கள் சாலைகளில் ஓட்டுநர் பயிற்சி பெறமுடியாது.
(B) ஓட்டுநருக்குரிய இறுதிச் சோதனையில் (FTT) தேர்ச்சி பெறாமல் நீங்கள் சாலைகளில் ஓட்டமுடியாது.
(C) வாகனம் ஓட்டுதற்குரிய அடிப்படைத் திறன்கள் உங்களிடம் இருந்தால் நீங்கள் சாலைகளில் ஓட்டலாம்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 7)*

**8. இதில் நீங்கள் தேர்ச்சி பெற்றால்தான் இடைக்கால ஓட்டுநர் உரிமம் (PDL) வழங்கப்படும்**

(A) ஓட்டுநருக்குரிய இடைக்காலச் சோதனை.
(B) அடிப்படை விளக்கத் தேர்வு.
(C) இறுதி விளக்கத் தேர்வு.

விடை: (B). *குறிப்பு: உடல் உறுதிமிக்க 18 வயது முதலானோருக்கு மட்டுமே PDL வழங்கப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 7)*





**9. இடைக்கால ஓட்டுநர் உரிமம் (PDL) எவ்வளவு காலம் செல்லுபடியாகும்**

(A) 6 மாதங்கள்.
(B) 12 மாதங்கள்.
(C) 18 மாதங்கள்.

விடை: (A). *குறிப்பு: ஒவ்வொரு முறையும் மேலும் ஆறு மாதங்களுக்குப் புதுப்பிக்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 7)*

**10. ஓட்டுநர் பயிற்சி பெறுபவர் PDL உரிமத்துடன்**

(A) தகுதிபெற்ற ஓட்டுநருடன் எந்தவொரு பொதுச் சாலையிலும் ஓட்டலாம்.
(B) பயிற்றுவிப்பாளருடன் ஓட்டுநர் பயிற்சியிடத்தில் மட்டுமே ஓட்டலாம்.
(C) தகுதிபெற்ற பயிற்றுவிப்பாளர் பக்கத்தில் இருக்கும்போது மட்டுமே ஓட்டலாம்.

விடை: (C). *குறிப்பு: ஓட்டுநர் பயிற்சி பெறுபவர் எப்போதும் தகுதிபெற்ற பயிற்றுவிப்பாளர் உடனிருக்கவேண்டும், தகுதிபெற்ற ஓட்டுநர்கள் இருப்பது போதாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 7)*

**11. ஓட்டுநர் பயிற்சி பெறுபவர் தகுதிபெற்ற பயிற்றுவிப்பாளருடன் பொதுச் சாலைகளில் ஓட்டலாம்,**

(A) ஆனால் எவ்வேளையிலும் விரைவுச்சாலைகளில் ஓட்டக்கூடாது.
(B) வாரநாட்களில் மட்டும்.
(C) ஞாயிற்றுக்கிழமைகள், பொது விடுமுறை நாட்களில் ஓட்டக்கூடாது.

விடை: (A). *குறிப்பு: ஓட்டுநர் பயிற்சி பெறுபவர் எந்த வேளையிலும் எந்தவொரு விரைவுச்சாலையிலும் குறிப்பிட்ட வேறு சில சாலைகளிலும் ஓட்டுநர் பயிற்சி பெற அனுமதிக்கப்படாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 7)*

**12. ஓட்டுநர் பயிற்சி பெறுபவர் தான் ஓட்டும் காரின் முன்பக்கமும் பின்பக்கமும் இடைக்கால ஓட்டுநர் உரிமத்தின் "L" தகடுகளை எப்போது மாட்டவேண்டும்**

(A) அவர் தனியாக ஓட்டும்போது.
(B) பயிற்றுவிப்பாளர் உடனிருக்கும்போது.
(C) எல்லா வேளைகளிலும்.

விடை: (C). *குறிப்பு: பயிற்சி ஓட்டுநர் சாலைகளில் ஓட்டும் போது, 'L' தட்டுகள் எப்போதும் காட்சியில் இருக்க வேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 7)*

**13. மற்ற வாகன ஓட்டுநர்களுக்கு எத்தகைய எச்சரிக்கை விடுப்பதற்காக "L" தகடுகள் மாட்டப்படுகின்றன**

(A) ஓட்டுநர் பயிற்சி பெறுபவருக்கு எப்போதும் வழிவிடவும்.
(B) ஓட்டுநர் பயிற்சி பெறுபவரிடம் சாலையில் கவனமாக இருக்கவும்.
(C) ஓட்டுநர் பயிற்சி பெறுபவரை ஒருபோதும் தாண்டிச்செல்லக்கூடாது.

விடை: (B). *குறிப்பு: ஓட்டும்போது எப்போதும் கவனமாக இருப்பது நல்லப் பழக்கம். அது விபத்துகளைத் தவிர்க்கும். ஓட்டுநர் பயிற்சி பெறுபவர் திறமையுள்ள ஓட்டுநராகத் திகழ நல்லப் பழக்கங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 7)*

**14. சிங்கப்பூரர்களும் நிரந்தர குடியிருப்பாளர்களும் ஒரு வருடம் மற்றொரு நாட்டில் தங்கி ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால், அவர்களால் அதை சிங்கப்பூர் உரிமம்மாக மாற்ற ____________.**

(A) முடியும்
(B) முடியாது
(C) வேண்டும்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 9)*

**15. வகுப்பு 2B, 3 அல்லது 3A உரிமம் பெறப்பட்ட ஒரு நபர் கட்டாயமாக**

(A) 'L' தகடு காட்சியில் இருக்க வேண்டும்
(B) சோதனைக் காலம் தகடு காட்சியில் இருக்க வேண்டும்
(C) அதிவேக நெடுஞ்சாலை ஓட்ட கூடாது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*

**16. சோதனைக் காலம் ஓட்டுநர்கள், சோதனைக் காலம் தகடு கண்டிப்பாக காட்சியில் இருக்க வேண்டிய காலம்**

(A) ஆறு மாதங்களுக்கு உறுதியாக எந்த போக்குவரத்து குற்றங்கள் இல்லாதிருந்தால்.
(B) ஒரு வருடம் மட்டுமே.
(C) ஒரு வருடம் உறுதியாக எந்த போக்குவரத்து குற்றங்கள் இல்லாதிருந்தால்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*





**17. சோதனைக் காலம் ஓட்டுநர்கள், சோதனைக் கால தகடு காட்சியில் வைக்காதிருந்தால்**

(A) ஓட்டுநர்களுக்கான பரீட்சையை மறுபடியும் எடுக்கவேண்டும்
(B) ஒரு கூடுதல் ஆண்டு அதை காட்சியில் வைக்க வேண்டும்
(C) அபராதம் மற்றும் திரும்ப குற்றம் செய்பவர்களுக்கு தங்கள் உரிமம் ரத்து செய்யப்படும்

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*

**18. புதிதாகத் தகுதிபெற்ற ஓட்டுநர் கண்காணிப்பு (ப்ரொபெஷன்) தகடுகளை தனது காரின் முன், பின் காற்றுத்தடுப்பு கண்ணாடிகளில் எவ்வளவு காலம் மாட்டி வைத்திருக்கவேண்டும்?**

(A) 6 மாதங்கள்
(B) 1 வருடம்
(C) 2 வருடங்கள்

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*

**19. புதிதாகத் தகுதிபெற்ற ஓட்டுநர் "ப்ரொபெஷன்" தகடை மாட்டத் தவறினால், முதல்முறை என்ன தண்டனை விதிக்கப்படும்?**

(A) அபராதம்
(B) இடைநீக்கம்
(C) உரிமம் ரத்து

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*

**20. புதிதாகத் தகுதிபெற்ற ஓட்டுநர் "ப்ரொபெஷன்" தகடை மாட்டத் தவறியதற்காக இரண்டாம் முறை பிடிபட்டால், அதற்குத் தண்டனையாக**

(A) அபராதம் கட்டவேண்டும்.
(B) மேலும் 12 மாதங்கள் தகடை மாட்டி வைத்திருக்கவேண்டும்.
(C) ஓட்டுநரின் உரிமம் ரத்து செய்யப்படும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*

**21. பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?**

(A) சோதனைக் காலம் ஓட்டுநர்கள் 12 மாத காலத்திற்குள் 13 அல்லது அதற்கு மேற்பட்ட குற்றப்புள்ளிகள் குவிக்கப்பட்டால் தங்கள் உரிமத்தை ரத்து செய்யப்படும்.

(B) சோதனைக் காலம் ஓட்டுநர்கள் குற்றப்புள்ளிகள் முறையில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

(C) சோதனைக் காலம் ஓட்டுநர்களுக்கு குற்றப்புள்ளிகள் கொடுக்கப்படும் முன் ஒரு வாய்ப்பு வழங்கப்படும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*

**22. ஓட்டுநர் முன்னேற்ற புள்ளிகள் முறை எதை அடையாளம் கண்டறிய உதவுகிறது**

(A) வாகனம் ஓட்டும் குறைந்த அனுபவமுள்ள ஓட்டுநர்கள்.

(B) ஆபத்துடன் ஓட்டும் ஓட்டுனர்கள் மற்றும் திரும்ப குற்றம் செய்பவர்களுக்கு.

(C) ரத்து செய்யப்பட்ட ஓட்டுனர்கள்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*

**23. ஓட்டுநர் முன்னேற்ற புள்ளிகள் முறையின் கீழ் ___________ குவித்தால் வாகன ஓட்டுனர்கள் இடைநீக்கம் செய்யப்படுவார்.**

(A) 24 தொடர்ச்சியான மாதங்களுக்குள் 24 புள்ளிகள்.

(B) 24 தொடர்ச்சியான மாதங்களுக்குள் 12 புள்ளிகள்.

(C) 12 தொடர்ச்சியான மாதங்களுக்குள் 24 புள்ளிகள்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 11)*

**24. ஏற்கனவே இடைநீக்கம் செய்யப்பட்ட ஓட்டுநர் எத்தனை குற்றப்புள்ளிகள் பெற்றால் மீண்டும் இடைநீக்கம் செய்யப்படுவார்?**

(A) 24 தொடர்ச்சியான மாதங்களுக்குள் 12 புள்ளிகள்.

(B) 12 தொடர்ச்சியான மாதங்களுக்குள் 11 புள்ளிகள்.

(C) 12 தொடர்ச்சியான மாதங்களுக்குள் 12 புள்ளிகள்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 11)*





**25. ஓட்டுநர் முன்னேற்றப் புள்ளிகள் முறையின்கீழ் (DIPS), முதல் இடைநீக்கம் எத்தனை மாதங்கள் நீடிக்கும்?**

(A) 12 வாரங்கள்

(B) 24 வாரங்கள்

(C) ஒரு வருடம்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 11)*

**26. மீண்டும் குற்றம் புரிவோர், அதாவது ஏற்கனவே இடைநீக்கம் செய்யப்பட்டவர்கள் எத்தனை காலம் வரை இடைநீக்கம் செய்யப்படலாம்?**

(A) 9 மாதங்கள்

(B) 1 ஆண்டு

(C) 3 ஆண்டுகள்

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 11)*

**27. ஓட்டுநர் ஒருவர் ________ குற்றப்புள்ளிகள் எதுவும் பெறாமல் இருந்தால், அதற்குமுன் அவர் பெற்ற குற்றப்புள்ளிகள் அனைத்தும் நீக்கப்பட்டுவிடும்.**

(A) 6 மாத காலம்

(B) 9 மாத காலம்

(C) 12 மாத காலம்

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 12)*

**28. முதல் முறையாக இடைநீக்கப்பட்டுள்ள வாகன ஓட்டுநருக்கு இன்னொரு வாய்ப்பு எப்பொழுது வழங்கப்படும்**

(A) ஓட்டுநர்களுக்கான நடைமுறை பரீட்சை மீண்டும் எழுதினால்

(B) மறுபயிற்சியில் தேர்ச்சியடைந்தால்

(C) அடிப்படை கோட்பாடு மற்றும் இறுதி கோட்பாட்டின் சோதனையில் தேர்ச்சியடைந்தால்

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 11)*

**29.** **கீழ்கண்ட குற்றங்கள் புரியாமல் இருந்தால் இடைநீக்கப்பட்டுள்ள வாகன ஓட்டுநருக்கு மட்டுமே இன்னொரு வாய்ப்பு வழங்கப்படும்**
(A) குடித்து ஓட்டுதல்
(B) வாகனம் ஓட்டும் போது மொபைல் தொலைபேசி பயன்படுத்துவது
(C) ஒரு போக்குவரத்து விபத்து

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 11)*

**30.** **மறுபயிற்சியும், மறுவாயிப்பும் கீழ்கண்ட இடைநீக்கப்பட்டுள்ள வாகன ஓட்டுநருக்கு வழங்கப்படாது**
(A) இரண்டாவது முறையாக
(B) மூன்றாவது முறையாக
(C) மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது முறையாக

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 11)*

**31.** **ஒரு பள்ளி மண்டலத்தில் ஒரு சிவப்பு போக்குவரத்து சமிக்ஞையை முந்திச்சென்றால் அபராதமும் மற்றும் __________ அடங்கும்.**
(A) 12 குற்றப்புள்ளிகள்
(B) 13 குற்றப்புள்ளிகள்
(C) 18 குற்றப்புள்ளிகள்

விடை: (B). *வேறு பகுதிகளில் செய்த குற்றங்களைக் காட்டிலும் பள்ளி பகுதிகளில் செய்த அதே குற்றத்திற்காக ஒப்பிடும்போது ஒரு கூடுதல் குற்றப்புள்ளி அதிகரிக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 16)*

**32.** **ஒரு பள்ளி மண்டலத்துக்குள் 1 அல்லது 20km வரை சாலையின் வேக வரம்பை மீறியிருந்தால், ஓட்டுநருக்கு __________ குற்றப்புள்ளிகள் வழங்கப்படும்.**
(A) ஐந்து
(B) ஆறு
(C) ஏழு

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 14)*





**33.** **ஒரு பள்ளி மண்டலத்தில் வாகனம் கவனக்குறைவாக ஓட்டினால் நீங்கள் __________ குற்றப்புள்ளிகள் பெறுவீர்.**
(A) 6
(B) 7
(C) 8

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 15)*

**34.** **தகுந்த காரணமின்றி விரைவுச்சாலையில் வாகனத்தைப் பின்பக்கம் செலுத்தியதற்கான தண்டனை**
(A) 6 குற்றப்புள்ளிகள்
(B) 8 குற்றப்புள்ளிகள்
(C) 12 குற்றப்புள்ளிகள்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 15)*

**35.** **போக்குவரத்து சிவப்பு விளக்கு சமிக்ஞைகளுக்கு உட்படத் தவறினால் அபராதமும்**
(A) 6 குற்றப்புள்ளிகளும் விதிக்கப்படும்.
(B) 12 குற்றப்புள்ளிகளும் விதிக்கப்படும்.
(C) 18 குற்றப்புள்ளிகளும் விதிக்கப்படும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 16)*

**36.** **ஓட்டுநரான நீங்கள் இருக்கை வார் அணியத் தவறினால் ----------- விதிக்கப்படும்.**
(A) 3 குற்றப்புள்ளிகள்
(B) 4 குற்றப்புள்ளிகள்
(C) அபராதம் மட்டும்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 13)*

**37. வாகனம் ஓட்டும்போது கைத்தொலைபேசி பயன்படுத்தினால்**
(A) 12 குற்றப்புள்ளிகள் விதிக்கப்படும்.
(B) 18 குற்றப்புள்ளிகள் விதிக்கப்படும்.
(C) 24 குற்றப்புள்ளிகள் விதிக்கப்படும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 16)*

**38. சாலையின் அல்லது வாகனத்தின் வேக வரம்பை மணிக்கு 60 கிலோமீட்டருக்கும் அதிகமாக மீறுவதற்கான தண்டனை**
(A) அபராதமும் 12 குற்றப்புள்ளிகளும்
(B) அபராதமும் 18 குற்றப்புள்ளிகளும்
(C) 24 குற்றப்புள்ளிகளும் நீதிமன்றக் குற்றச்சாட்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 16)*

**39. கீழ்க்காணும் மூன்றில் ஆகக் கடுமையான குற்றம் எது?**
(A) சிவப்பு போக்குவரத்து விளக்கைத் தாண்டி ஓட்டிச்செல்லுதல்.
(B) நடையர்கள் கடக்கக் காத்திருக்கும் வரிக்குதிரை கடப்பில் நிறுத்தத் தவறுதல்.
(C) அக்கறையின்றி தாறுமாறாக ஓட்டுதல்.

*விடை: (C). குறிப்பு: அக்கறையின்றி தாறுமாறாக ஓட்டுவது மிகவும் கடுமையான குற்றமாகும். உங்களுக்கு 24 குற்றப்புள்ளிகள் விதிக்கப்படுவதோடு, நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 16)*

**40. ஓட்டுநரின் உரிமம் எப்போது ரத்து செய்யப்படும்?**
(A) அவர் 12 குற்றப்புள்ளிகளுக்கும் அதிகமாகச் சேர்த்திருந்தால்.
(B) DIPS முறையின்கீழ் அவர் மூன்றாம்முறை இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தால்
(C) அவர் மோசமான விபத்தில் சம்பந்தப்பட்டிருந்தால்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 12)*





**41. ஓட்டுநரின்உரிமம்ரத்துசெய்யப்பட்டிருந்தால்,மீண்டும்வாகனம்ஓட்டஅனுமதிக்கப்படுவதற்குமுன் அவர் என்ன செய்யவேண்டும்?**
(A) எழுத்துத் தேர்வுகளில் தேர்ச்சிபெறவேண்டும்.
(B) ஓட்டுநர், சோதனைத் தேர்வில் அடிப்படை மற்றும் இறுதி கோட்பாட்டில் தேர்ச்சிபெறவேண்டும்
(C) மேற்காணும் (A), (B) இரண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 11)*

**42. கண்காணிப்புலுள்ள ஓட்டுநர் எத்தனை குற்றப் புள்ளிகள் பெற்றால் அவரது உரிமம் ரத்து செய்யப்படும்?**
(A) 12 மாதங்களுக்குள் 13 அல்லது அதைவிட அதிக குற்றப்புள்ளிகள்
(B) 12 மாதங்களுக்குள் 24 அல்லது அதைவிட அதிக குற்றப்புள்ளிகள்
(C) 12 மாதங்களுக்குள் 13 குற்றப்புள்ளிகளுக்கும் குறைவாக

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*

**43. உங்கள் உரிமம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. மறுபடியும் எழுத்துத் தேர்வும் ஓட்டுநர் சோதனையும் எடுக்க நீங்கள் எப்போது விண்ணப்பிக்க முடியும்?**
(A) ரத்துசெய்யப்பட்ட தேதியில் இருந்து 1 ஆண்டுக்குப் பின்னர்
(B) ரத்துசெய்யப்பட்ட தேதியில் இருந்து 2 ஆண்டுகளுக்குப் பின்னர்
(C) ரத்துசெய்யப்பட்ட தேதியில் இருந்து 3 ஆண்டுகளுக்குப் பின்னர்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 10)*

**44. ஓட்டுநர் முன்னேற்றம் புள்ளிகள் அமைப்பின் கீழ் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் உரிமம் ரத்து செய்யப்பட்ட ஓட்டுநர்கள் மீண்டும் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு**
(A) அடிப்படை கோட்பாடு சோதனை தேர்ச்சிப்பெற வேண்டும்.
(B) அடிப்படை கோட்பாடு சோதனை மற்றும் இறுதி கோட்பாடு சோதனை தேர்ச்சிப்பெற வேண்டும்.
(C) அடிப்படை கோட்பாடு சோதனை, இறுதி கோட்பாடு சோதனை மற்றும் நடைமுறை ஓட்டுநர் சோதனைகள் தேர்ச்சிப்பெற வேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 11)*

**45. ஒரு ஓட்டுநர் உரிமம் செல்லுபடியாக**

(A) மூன்று ஆண்டுகள் மற்றும் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் புதுப்பிக்கப்பட வேண்டும்.
(B) 65 வயது வரை மற்றும் அதன் பிறகு புதுப்பிக்க, நிபந்தனையின் பேரில் ஒரு மருத்துவ தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
(C) வாழ்நாள் முழுவதும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 16)*

**46. வேலை பாஸ் வைத்திருக்கும் வெளிநாட்டவருக்கு வழங்கப்பட்ட சிங்கப்பூர் ஓட்டுநர் உரிமம் செல்லுபடியாகுவது**

(A) ஐந்து ஆண்டுகள் மட்டும்.
(B) ஐந்து ஆண்டுகள் வரை மட்டுமே.
(C) ஐந்து ஆண்டுகள் வரை மற்றும் வேலை பாஸ் நீட்டிக்கப்பட்டுள்ளது என்றால் புதுப்பிக்கப்படும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 16)*

**47. வகுப்பு 3 அல்லது 3A உரிமம் வைத்திருப்பவர் _____ வயதை அடைந்தால் அவர்களின் உரிமம் செல்லாது.**

(A) 60
(B) 65
(C) 70

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 17)*

**48. 3 மற்றும் 3A உரிமம் வைத்திருப்பவர் 65 வயதை அடையும் போதும் தொடர்ந்து ஓட்ட வேண்டும் என்றால்**

(A) அவர்கள் கடந்த 3 ஆண்டுகளில் எந்த குற்றப்புள்ளிளும் இல்லாமல் இருக்க வேண்டும்.
(B) தங்கள் வேலையின் நிமித்தம் அவர்களுக்கு வாகனம் ஓட்ட தேவைப்படுகிறது.
(C) அவர்கள் ஒரு மருத்துவ சோதனைக்கு சென்றபின்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 17)*





**49. 4, 4A மற்றும் 5 உரிமம் வைத்திருப்பவர் 65 முதல் 69 வயதை வரை தொடர்ந்து ஓட்ட வேண்டும் என்றால்**

(A) அவர்கள் ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கும் ஒருமுறை மருத்துவ சோதனைக்கு செல்வது.
(B) மருத்துவ பரிசோதனை ஒவ்வொரு ஆண்டும் மற்றும் ஒரு திறமை டிரைவிங் சோதனையும் மேற்கொள்ளவும்.
(C) ஒவ்வொரு ஆண்டும் மருத்துவ சோதனைக்கு செல்வது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 17)*

**50. போக்குவரத்துக் குறிகளும் விளக்குச் சமிக்ஞைகளும் எந்த நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன**

(A) சரளமான போக்குவரத்தை ஒழுங்குபடுத்திட.
(B) பயனுள்ள தகவலும் வழிகாட்டுதலும் வழங்கிட.
(C) மேற்காணும் (A) மற்றும் (B) இரண்டும்.

விடை: (C). *குறிப்பு: (A) மற்றும் (B) தவிர, போக்குவரத்துக் குறிகளும் விளக்குச் சமிக்ஞைகளும் மற்ற ஓட்டுநர்களுக்கும் சாலையை உபயோகிக்கும் மற்றவர்களுக்கும் அபாயங்களை எச்சரிக்கவும் பயன்படுகின்றன. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 18)*

**51. வெவ்வேறு நோக்கங்கள் கொண்ட வெவ்வேறு வகை போக்குவரத்துக் குறிகள் உள்ளன. கட்டளைக் குறிகள் தரும் வழிகாட்டுதல் எப்போதும்**

(A) கடைப்பிடிக்கவேண்டும், இல்லாவிட்டால் அது குற்றமாகும்.
(B) வட்ட வடிவில் இருக்கும்.
(C) போக்குவரத்து இருக்கும்போது மட்டுமே கடைப்பிடிக்கவேண்டும்.

விடை: (A). *குறிப்பு: சில குறிகள் தவிர்த்து, பெரும்பாலான கட்டளைக் குறிகள் வட்ட வடிவில், நீல நிறப் பின்னணியும் வெண்ணிற கரையும் கொண்டிருக்கும். (Mighty Minds அடிப்படை விளக்க நூல் 1 - பக்கம் 18)*

**52. இந்தக் குறியைப் பார்க்கும்போது நீங்கள்**



(A) வேகத்தைக் குறைத்து எதிரிலுள்ள கோட்டில் நிறுத்தவேண்டும்.
(B) நேராக மட்டுமே செல்லவேண்டும். வலப்பக்கமோ இடப்பக்கமோ திரும்ப முடியாது.
(C) எதிரில் ஒருவழிப் போக்குவரத்தை எதிர்நோக்கவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 28)*

**53. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) எதிரில் ஒருவழிப் போக்குவரத்து உள்ளது.
(B) நீங்கள் நேராக மட்டுமே செல்லவேண்டும். வலப்பக்கமோ இடப்பக்கமோ திரும்ப முடியாது.
(C) நீங்கள் வேகத்தைக் குறைத்து எதிரிலுள்ள கோட்டில் நிறுத்தவேண்டும்.

விடை: (B). *குறிப்பு: கேள்விகள் 13 மற்றும் 14 இரண்டுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைக் கவனிக்கவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 18)*

**54. இந்தக் குறியைப் பார்க்கும்போது நீங்கள்**



(A) இடப்பக்கம் மட்டுமே திரும்பவேண்டும்.
(B) நீங்கள் செல்லும் சாலையில் இடப்பக்கமாக இருக்கவேண்டும்.
(C) தொடர்ந்து செல்வதற்குமுன் இடப்பக்கம் பார்க்கவேண்டும்.

விடை: (A). *குறிப்பு: அம்புக்குறி வலப்பக்கம் காட்டினால், நீங்கள் வலப்பக்கம் மட்டுமே திரும்பவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 18)*

**55. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) எதிரில் கிளைச் சாலை உள்ளது.
(B) எதிரில் முக்கிய சாலை உள்ளது.
(C) எதிரிலுள்ள இடப்பக்கத் திருப்பத்தில் நீங்கள் கண்டிப்பாகத் திரும்பவேண்டும்.

விடை: (C). *குறிப்பு: அதேபோல, அம்புக்குறி வலப்பக்கம் காட்டினால், எதிரிலுள்ள திருப்பத்தில் நீங்கள் கண்டிப்பாக வலப்பக்கம் திரும்பவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 18)*



பகுதி 2 போக்குவரத்து குறிகளும், விளக்கு சமிக்ஞைகளும் மற்றும் சாலை அடையாளங்களும்
கட்டாய குறிகள்

**56. இந்தச் சாலைக் குறியைப் பார்த்தால், நீங்கள்**



(A) சாலையோரமாகச் செல்லவேண்டும்.
(B) இடப்பக்கம் செல்லவேண்டும்.
(C) சட்டென இடப்பக்கம் திரும்பவேண்டும்.

விடை: (B). *குறிப்பு: அம்புக்குறி வலப்பக்கம் காட்டினால் நீங்கள் வலப்பக்கமாகச் செல்லவெண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 18)*

**57. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) சாலையின் இருபக்கங்களும் சாலைப் பணிகள் நடைபெறுகின்றன.
(B) போக்குவரத்து பிளவுபடுவதால், நீங்கள் ஏதாவதொரு பக்கமாகச் செல்லலாம்.
(C) சாலையின் இரு பக்கங்களில் இருந்து வரும் போக்குவரத்து ஒன்றுசேர்கிறது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 19)*

**58. இந்தக் குறியைக் கண்டால் நீங்கள்**




(A) நின்றுவிட்டுப் பிறகு தொடர்ந்து செல்லவேண்டும்.
(B) வெள்ளை கோட்டிற்கு முன்பாக நின்றுவிட்டு, பிறகு தொடர்ந்து செல்ல வேண்டும்.
(C) வெள்ளை கோட்டிற்கு முன்பாக நின்றுவிட்டு, தொடர்ந்து செல்வதற்கு முன் வலமிருந்தும் இடமிருந்தும் வரும் போக்குவரத்து வழி விடவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 19)*

**59. "STOP CHILDREN" எனும் இந்தக் குறி எதற்குரியது**




(A) சிறுவர்களும் மற்ற நடையர்களும் சாலையைக் கடப்பதற்கானது.
(B) சிறுவர்களும் மற்ற நடையர்களும் சாலையைக் கடக்காமல் நிறுத்துவதற்குரியது.
(C) எதிரில் வாகனங்கள் வருவதாக சிறுவர்களை எச்சரிப்பதற்குரியது.

விடை: (A). *குறிப்பு: பொதுவாக, பள்ளிகள் அமைந்துள்ள இடங்களில் பள்ளி வார்டர்கள்/ தொண்டூழியர்கள் இந்தக் குறியை ஏந்தி இருப்பார்கள். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 19)*

**60. நீங்கள் எதைச் செய்யவேண்டும் என்று இந்தக் குறி கூறுகிறது**




(A) தேவையானபோது மட்டுமே வழிவிடவும்.
(B) வேகத்தைக் குறைத்து, தேவையானால் வாகனத்தை நிறுத்தி, முக்கிய சாலையின் போக்குவரத்துக்கு வழிவிடவும்.
(C) நடையர்களுக்கும் வாகனமற்ற போக்குவரத்துக்கும் மட்டுமே வழிவிடவும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 19)*

**61. போக்குவரத்து விளக்கில் சிவப்பு விளக்கு எரிகிறது, நீங்கள் வெள்ளை கோட்டில் நிற்கிறீர்கள், ஆனால் இந்தக் குறி தென்படுகிறது. நீங்கள் என்ன செய்யவேண்டும்?**




(A) குறியில் உள்ளபடி உடனடியாக இடப்பக்கம் திரும்பவேண்டும்.
(B) பாதை காலியாகவும், திரும்புவதற்குப் பாதுகாப்பாகவும் இருக்கும்போது மட்டுமே இடப்பக்கம் திரும்பவேண்டும்.
(C) இடப்பக்கமிருந்து வரும் போக்குவரத்துக்கு வழிவிட்டபிறகு இடப்பக்கம் திரும்பவும்.

விடை: *(B). குறிப்பு: சிவப்பு விளக்கு எரியும்போது இடப்பக்கம் திரும்புவதற்கு முன்பாக, உங்கள் வலப்பக்கமிருந்து வரும் போக்குவரத்துக்கு நீங்கள் வழிவிடவேண்டும். அதோடு, நீங்கள் ஓட்டிச் செல்வதற்கு முன்பாக, சாலை சந்திப்பை நடையர்கள் கடந்து செல்லவிடவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 19)*

**62. நீங்கள் எதைச் செய்ய வேண்டும் என்று இந்த குறி கூறுகிறது.**




(A) பேருந்துகள் பேருந்து தளத்திலிருந்து வெளியேற வழிவிடவும்.
(B) பேருந்துகள் பேருந்து தளத்திலிருந்து வெளியேற கிழமை நாட்களில் மட்டும் வழிவிடவும்.
(C) ஒரு பேருந்து மட்டும் பேருந்து தளத்திலிருந்து வெளியேற வழிவிட்டு தொடர்ந்து வாகனம் ஓட்டவும்.

விடை: (A). *குறிப்பு: முக்கோண சின்னத்தை அனுகும் போது மெதுவாக வாகனத்தை செலுத்தி கோடிட்ட குறிகள் முன்பு நின்று, எல்லா பேருந்துகளும் சென்றபின் தொடர்ந்து செல்லவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 19)*





**63. இந்தத் தடை குறியின் அர்த்தம்**



(A) இந்தக் குறி காணப்படும் சாலைக்குள் எந்தவொரு வாகனமும் நுழையக்கூடாது.
(B) இந்தக் குறி காணப்படும் சாலையில் நுழைவது குற்றமாகும்.
(C) மேற்காணும் (A) மற்றும் (B) இரண்டும்.

விடை: (C). *குறிப்பு: இந்த வகை குறிகள் பெரும்பாலும் சிவப்பு கரையுடன் வட்டமாக இருக்கும். சில குறிகளின் அடியில், தடை எந்த நாட்களில் எந்த நேரத்தில் நடப்பிலிருக்கும் போன்ற கூடுதல் விவரங்களும் இருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 20)*

**64. இந்தத் தடை குறி எதனைக் குறிக்கிறது**



(A) எந்த நேரத்திலும் நிற்கக்கூடாது.
(B) பயணிகளை இறக்கிவிடுவது தவிர வேறு எதற்காகவும் நிற்கக்கூடாது.
(C) எந்நேரமும் நீங்கள் காரில் இருந்தாலொழிய நிற்கக்கூடாது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 20)*

**65. இந்தக் குறியைப் பார்த்தால் நீங்கள்**



(A) எந்த நேரத்திலும் காரை நிறுத்தி காத்திருக்கக்கூடாது.
(B) பயணிகளை ஏற்றிக்கொள்ள அல்லது இறக்கிவிடுவது தவிர வேறு எதற்காகவும் காத்திருக்கக்கூடாது.
(C) சரக்கு ஏற்றவோ இறக்கவோ காத்திருக்கக்கூடாது.

விடை: (B). *குறிப்பு: எந்த நாட்களில் எந்த நேரங்களில் காத்திருக்கக்கூடாது, சரக்கு ஏற்றவோ/இறக்கவோ கூடாது போன்ற கட்டுப்பாடுகளின் விவரங்களைக் குறிப்பிடும் தகடு இந்தக் குறியுடன் இணைக்கப்பட்டிருக்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 20)*

**66. இந்தக் குறியின் விளக்கம்**



(A) வலப்பக்கம் திரும்பக்கூடாது.
(B) வலப்பக்கம் திரும்பக்கூடாது, இடப்பக்கம் மட்டுமே திரும்பலாம்.
(C) குறிப்பிட்ட நேரங்களில் வலப்பக்கம் திரும்பக்கூடாது.

விடை: (A). *குறிப்பு: வளைந்த கறுப்பு கோட்டின் முனை இடப்பக்கம் காட்டினால், எந்த நேரத்திலும் இடப்பக்கம் திரும்பக்கூடாது. குறிப்பிட்ட சில நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் திரும்பக்கூடாது என்ற கட்டுப்பாடு இந்தக் குறிக்குக் கீழே இணைக்கப்பட்டிருக்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 20)*




**67. மேற்காணும் மூன்று தடை குறிகளும், இடமிருந்து வலமாக, எதனைக் குறிக்கின்றன**

(A) முறையே உயரம், அகலம் மற்றும் வேக வரம்புகள்.
(B) முறையே உயரம், அகலம் மற்றும் எடை வரம்புகள்.
(C) முறையே அகலம், உயரம் மற்றும் எடை வரம்புகள்.

விடை: (B). *குறிப்பு: மூன்று குறிகளும் பக்கத்துப் பக்கத்தில் இருந்தால், உங்கள் வாகனம் 4.5 மீட்டர் உயரத்திற்கு மேல் போகாமல், 2.3 மீட்டர் அகலத்திற்கு மேல் இல்லாமல், 26 டன் எடைக்கு மேல் போகாமல் இருக்கவேண்டும் என்று பொருள்படும். உங்கள் வாகனத்தில் சரக்கு உள்ளதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தும். உயரம், அகலம், எடை கட்டுப்பாடுகள் இடத்திற்கு இடம் வேறுபடும். பெரும்பாலான இடங்களில் ஒரே ஒரு குறி மட்டுமே இருக்கும். மூன்று குறிகளும் ஒன்றாக இருப்பது அரிது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 21)*

**68. இந்தக் குறியில் காணப்படும் எண் எதனைக் குறிக்கிறது?**




(A) அந்தச் சாலையில் அனுமதிக்கப்படும் வாகனங்களின் எடை வரம்பைக் குறிக்கிறது.
(B) கிலோமீட்டர் கணக்கில் செல்லக்கூடிய தூரத்தைக் குறிக்கிறது. இது தொலைவைக் காட்டும் குறியீடு.
(C) அந்தச் சாலைப் பகுதியின் வேக வரம்பைக் (km/h) குறிக்கிறது.

விடை: (C). *குறிப்பு: குறிப்பிட்ட சாலைகளின் வேக வரம்பைப் பொறுத்து எண் மாறுபடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 21)*



பகுதி 2 போக்குவரத்து குறிகளும், விளக்கு சமிக்ஞைகளும் மற்றும் சாலை அடையாளங்களும்
தடையுத்தரவு குறிகள்

**69. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) எந்த நேரத்திலும் உங்கள் வாகனத்தின் எச்சரிக்கை ஒலியை ஹார்ன் ஒலிக்கக்கூடாது.
(B) விபத்தைத் தடுப்பதாக இருந்தாலொழிய உங்கள் வாகனத்தின் எச்சரிக்கை ஒலியை ஒலிக்கக்கூடாது.
(C) அருகில் ஆம்புலன்ஸ் செல்வதைப் பார்த்தால் உங்கள் வாகனத்தின் எச்சரிக்கை ஒலியை ஒலிக்கக்கூடாது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 21)*



**70. மேற்காணும் அனைத்தும் “நுழையக்கூடாது” (நோ என்ட்ரி) குறிகளாகும். எவை நுழையக்கூடாது என்பதை அவை குறிக்கின்றன (இடமிருந்து வலம்)?**

(A) மோட்டார்சைக்கிள்கள், மோட்டார்சைக்கிள்கள் & மிதிவண்டிகள், லாரிகள்.
(B) மோட்டார்சைக்கிள்கள், இரு சக்கர வாகனங்கள், லாரிகள்.
(C) மிதிவண்டிகள், இரு சக்கர வாகனங்கள், லாரிகள்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 22)*

**71. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) அனைத்து கார்களும் நுழையக்கூடாது.
(B) முந்திச் செல்லக்கூடாது.
(C) பக்கத்துப் பக்கத்தில் நிறுத்தக்கூடாது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 21)*

**72. இந்த குறி எதனை குறிக்கிறது.**



(A) காலை 7 முதல் மாலை 7 வரை வாகனத்தை திருப்பி ஓட்டக்கூடாது.
(B) இந்த குறி உள்ள இடத்தில் வாகனத்தை திருப்பி ஓட்டக்கூடாது. ஆனால் இந்த குறி இல்லாத இடத்தில் வாகனத்தை திருப்பி ஓட்டலாம்.
(C) இந்த குறி உள்ள இடத்தில் வாகனத்தை திருப்பி ஓட்டக்கூடாது. ஆனால் இந்த குறியில் தடை கோடு இல்லாத இடத்தில் வாகனத்தை திருப்பி ஓட்டலாம்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 21)*

**73. இந்த சின்னம் எந்த தடையை காட்டுகிறது.**



(A) எல்லா வித லாரிகளுக்கும்.
(B) 3 அச்சாணி உள்ள லாரிகளுக்கும்.
(C) மேல் கூரை அற்ற வாகனங்களுக்கு மட்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 22)*

**74. அனைத்து எச்சரிக்கை குறிகளும் சிவப்பு கரையுடன் முக்கோண வடிவில் இருக்கும். இதுபோன்ற குறியைப் பார்த்ததும் நீங்கள் வழக்கமாக எதை முதலில் செய்யவேண்டும்?**

(A) முன்விளக்குகளைப் பளிச்சிடவேண்டும்.
(B) எச்சரிக்கை ஒலியை ஒலிக்கவேண்டும்.
(C) உங்கள் வாகனத்தின் வேகத்தைக் குறைக்கவேண்டும்.

விடை: (A). *குறிப்பு: எதிரிலுள்ள ஆபத்துகள் மற்றும் வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளைப் பற்றி வாகன ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை குறிகள் எச்சரிக்கின்றன. சூழ் நிலையை எதிர் நோக்கி பொதுவாக செல்வது மாற்று ஓட்டும் உபாயங்களுக்கு சந்தர்ப்பம் தரும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 23)*

**75. இந்தக் குறி எதனை எச்சரிக்கிறது**



(A) வேகத்தைக் குறைக்கவும், எதிரில் இடப்பக்க வளைவு இருக்கிறது.
(B) எதிரில் இடப்பக்கம் திரும்பும் போக்குவரத்துக்காக வேகத்தைக் குறைக்கவும்.
(C) வேகத்தைக் குறைத்து, இடப்பக்கம் திரும்புவதற்காக வலப்பக்கம் செல்லவும்.

விடை: (A). *குறிப்பு: இடப்பக்கமாகச் செல்வதோடு, வளைவில் செல்லும்போது நீங்கள் முந்திச் செல்லவோ, U வளைவு செய்யவோ, வளைவில் வாகனத்தை நிறுத்தவோ அல்லது நிறுத்தி வைக்கவோ கூடாது. இந்தக் குறியின் முனை வலப்பக்கம் காட்டினால், எதிரில் வலப்பக்க வளைவு இருப்பதாகக் குறிக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 23)*

**76. கீழ்க்காணும் எச்சரிக்கை குறி எதனைக் குறிக்கிறது**



(A) எதிரில் திருப்பங்கள் கொண்ட சாலை.
(B) எதிரில் அடுத்தடுத்து வளைவுகள்.
(C) S- திருப்பங்கள்.

விடை: (B). *குறிப்பு: அடுத்தடுத்து வரும் வளைவுகளில் செல்வதற்குமுன் எப்போதுமே வேகத்தைக் குறைக்கவேண்டும். கேள்வி 75த் குறிப்பையும் பார்க்கவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 23)*






**77. இங்குள்ள குறி எதனைக் குறிக்கிறது?**



(A) திருப்பங்கள் கொண்ட சாலை அல்லது எதிரில் பற்பல வளைவுகள்.
(B) எதிரில் பந்தயத் தடம்.
(C) எதிரில் பற்பல S-திருப்பங்கள்.

விடை: (A). *குறிப்பு: கேள்வி 75த் குறிப்பைப் பார்க்கவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 23)*

**T-சந்திப்பு, Y-சந்திப்பு, குறுக்குச் சந்திப்பு போன்ற பற்பல வடிவங்களிலான சந்திப்புகளையும் நீங்கள் அணுகும்போது எச்சரிக்கை குறிகள் தென்படும். கீழ்க்காணும் எச்சரிக்கை குறிகளின் எண்களைப் பயன்படுத்தி கேள்விகள் 76 முதல் 86 வரை பதிலளிக்கவும்.**




**78. வேகத்தைக் குறைத்து, இடமிருந்தும் வலமிருந்தும் வரும் போக்குவரத்துக்கு வழிவிடுமாறு எச்சரிக்கும் குறி எது?**

(A) WS 1.
(B) WS 2.
(C) WS 3.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 23)*

**79.** **வேகத்தைக் குறைத்து, வலமிருந்து வரும் போக்குவரத்தைக் கவனித்து விழிப்புடன் செல்லுமாறு எச்சரிக்கும் குறி எது?**
(A) WS 1.
(B) WS 2.
(C) WS 3.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 23)*

**80.** **வேகத்தைக் குறைத்து, சந்திப்பை நெருங்கும் போக்குவரத்தைக் கவனித்து விழிப்புடன் செல்லுமாறு எச்சரிக்கும் குறி எது? ஜங்சன் என்பதற்கு மறுபெயர் இன்டர் செக்சன்.**
(A) WS 3.
(B) WS 4.
(C) WS 5.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 23)*

**81.** **வேகத்தைக் குறைத்து, இடமிருந்தும் வலமிருந்தும் சேரும் போக்குவரத்தையும் இடமிருந்து அல்லது வலமிருந்து மட்டும் சேரும் போக்குவரத்தையும் கவனிக்கவேண்டிய Y-சந்திப்பைக் குறிக்கும் எச்சரிக்கை குறிகள் யாவை?**
(A) WS 5, WS 6 மற்றும் WS 7.
(B) WS 5, WS 6 மற்றும் WS 8.
(C) WS 6, WS 7 மற்றும் WS 8.

விடை: (A). *குறிப்பு: WS 8 என்பது "Y"-சந்திப்பு அல்ல. அது தலைகீழ் "Y" ஆகும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 23)*

**82.** **மாறுபட்ட சந்திப்பு எனும் இதனை அணுகும்போது, நீங்கள் வேகத்தைக் குறைத்து, முதலில் இடமிருந்தும் பிறகு வலமிருந்தும் வரும் போக்குவரத்தைக் கவனிக்கவேண்டும். இதற்குரிய குறி எது?**
(A) WS 3.
(B) WS 5.
(C) WS 9.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 24)*





**83.** **ஒன்றிணையும் போக்குவரத்தைக் குறிக்கும் இரண்டு குறிகள் யாவை?**
(A) WS 5 மற்றும் WS 12.
(B) WS 7 மற்றும் WS 14.
(C) WS 8 மற்றும் WS 15.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 24)*

**84.** **எதிரில் சாலை குறுகுவதைக் குறிக்கும் குறிகள் யாவை?**
(A) WS 11, WS 12 மற்றும் WS 13.
(B) WS 12, WS 13 மற்றும் WS 14.
(C) WS 13, WS 14 மற்றும் WS 15.

விடை: (B). ***குறிப்பு: இந்தக் குறிகள் காணப்படும்போது, வேகத்தைக் குறைக்கவும். முந்திச் செல்லவோ அல்லது U வளைவு செய்யவோ கூடாது. உங்கள் வாகனத்தை நிறுத்தவோ அல்லது நிறுத்தி வைக்கவோ கூடாது.*** *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 24)*

**85.** **WS 16 தலைகீழ் Y சந்திப்பு என்றும் அழைக்கப்படுமா?**
(A) ஆமாம். Y-சந்திப்பின் கட்டுப்பாடுகள் உண்டு.
(B) இல்லை. இது ஒன்றிணையும் போக்குவரத்தைக் குறிக்கிறது.
(C) இல்லை. இது இரட்டைப் பாதையின் முடிவைக் குறிக்கிறது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 24)*

**86.** **எதிரில் வட்டச்சுற்று இருப்பதைக் காட்டும் குறி எது? நீங்கள் அங்கே என்ன செய்யவேண்டும்?**
(A) WS 17. வேகத்தைக் குறைத்து அல்லது தேவையானால் நிறுத்தி, வலப்பக்கமுள்ள போக்குவரத்துக்கு வழி விடவும்.
(B) WS 17. வேகத்தைக் குறைத்துவிட்டு தொடர்ந்து செல்லவும். ஓட்டுரிமையைப் பயன்படுத்தவும்.
(C) WS 17. வட்டச்சுற்றில் உடனடியாக நிறுத்தவும். வேகமாகச் செல்லும் வாகனங்களுக்கு வழி விடவும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 24)*

**87. இந்த எச்சரிக்கை குறி எதனைக் குறிக்கிறது**



(A) வேகத்தைக் குறைத்து எதிரிலுள்ள விளக்குச் சமிக்ஞையில் நிறுத்தவும்.
(B) வேகத்தைக் குறைத்து, விளக்குச் சமிக்ஞை பச்சையாக இருந்தால் வேகத்தைக் கூட்டவும்.
(C) வேகத்தைக் குறைத்து, எதிரிலுள்ள விளக்குச் சமிக்ஞையில் மாற்றங்களை எதிர்பார்த்துத் தயாராக இருக்கவும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 25)*

**88. இந்த குறி எச்சரிக்கிறது**



(A) முதியவர்கள் சாலையை கடக்கும் போது, மெதுவாக மற்றும் கவனமாக ஓட்டவும்.
(B) வரிக்குதிரை கடப்பு முன்னே. மெதுவாக மற்றும் கவனமாக ஓட்டவும்.
(C) முன்னே சாலையை கடக்கும் பாதசாரிகள்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 25)*

**89. இந்தக் குறியைப் பார்த்ததும், நீங்கள் வேகத்தைக் குறைத்து**



(A) நடையர் கடப்புக்கு அருகில் எச்சரிக்கை ஒலியை ஒலிக்கவேண்டும்.
(B) வாகனத்தை நிறுத்தத் தயாராகி, முன்விளக்குகளைப் பளிச்சிடவேண்டும்.
(C) கடப்பில் நடையர்களுக்காக நிறுத்தத் தயாராகவேண்டும்.

விடை: (C). *குறிப்பு: எப்போதுமே நடையர் கடப்பில் வேகத்தைக் குறைத்து நிறுத்தத் தயாராகவேண்டும். கடப்பில் நடையர் எவரேனும் (குறிப்பாகப் பிள்ளைகள்) சாலையின் குறுக்கே ஓடினால் நீங்கள் சட்டென செயல்பட முடியும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 25)*

**90. இந்தக் குறியைப் பார்த்ததும் நீங்கள்**



(A) வேகத்தைக் குறைத்து கவனமாக ஓட்டவேண்டும். சாலை வழுக்கலானது.
(B) இடப்பக்கமாக முந்திச் சென்று பாதையை மறைக்காமல் செல்லவேண்டும்.
(C) முந்திச் செல்வதற்குமுன் வேகத்தைக் குறைக்கவேண்டும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 25)*



**91. இந்த குறியைப் பார்த்தால் நீங்கள்**



(A) பள்ளி குழந்தைகள் அழைக்க வரும் வாகனங்கள் நிறுத்துவதை கவனிக்க வேண்டும்.
(B) வேகத்தை குறைத்து குழந்தைகள் சாலையை கடப்பதை ஜாக்கிரதையாக கவனிக்க.
(C) முன்னே பள்ளி மண்டலம் இருப்பதால் தீவிர எச்சரிக்கையுடன் ஓட்டவும்.

விடை: (B). *குறிப்பு: இந்த குறிப்பு பொதுவாக பள்ளி மண்டலங்கள் அருகில் தோன்றும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 25)*

**92. இந்தக் குறி எதனைத் தெரிவிக்கிறது**



(A) எதிரில் சுரங்கப்பாதை இருக்கிறது.
(B) எதிரில் தடங்கல் இருக்கிறது.
(C) எதிரில் கனத்த கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன.

விடை: (A). *குறிப்பு: சுரங்கப்பாதையில் நுழையும்போது முன் எச்சரிக்கை விளக்குகளைப் போடவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 25)*

**93. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) எதிரில் விரைவுச்சாலை.
(B) விரைவுச்சாலை தொடங்குகிறது.
(C) விரைவுச்சாலை முடிவடைகிறது.

விடை: (A). *குறிப்பு: சிலவகை வாகனங்கள் விரைவுச்சாலைகளில் அனுமதிக்கப்படமாட்டா. எ.கா. மிதிவண்டிகள், ரிக்ஷாக்கள். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 25)*

**94. இந்தக் குறி குறிப்பது:**



(A) கீழ்நோக்கிய செங்குத்தான சரிவு எதிரில், இடப்பக்கம் சென்று, குறைந்த கியருக்கு மாற்றவும்.
(B) சாலை மேடு எதிரில், இடப்பக்கம் சென்று, வேகத்தைக் குறைக்கவும்.
(C) லேசான சாய்வுப்பாதை எதிரில், வேகத்தைக் குறைத்து, நிறுத்தத் தயாராகவும்.

விடை: (A). *குறிப்பு: சரிவின் அடியில் அல்லது குறிக்குப் பிறகு நீங்கள் முந்திச் செல்லவோ, U வளைவு செய்யவோ அல்லது உங்கள் வாகனத்தை நிறுத்தி வைக்கவோ கூடாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 26)*

**95. இந்தக் குறி தென்பட்டால், நீங்கள்**



(A) மேல்நோக்கிய செங்குத்தான பாதையில் செல்ல வேகத்தைக் கூட்டவேண்டும்.
(B) இடப்பக்கம் சென்று, குறைந்த கியருக்கு மாற்றவேண்டும்.
(C) வேகத்தைக் குறைத்து, உயர்வான கியருக்கு மாற்றவேண்டும்.

விடை: (B). *குறிப்பு: சரிவின் அடியில் அல்லது குறிக்குப் பிறகு நீங்கள் முந்திச் செல்லவோ, U வளைவு செய்யவோ அல்லது உங்கள் வாகனத்தை நிறுத்தி வைக்கவோ கூடாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 26)*

**96. இந்தக் குறி என்ன எச்சரிக்கை விடுக்கிறது**



(A) சீரில்லாத சாலை எதிரில்.
(B) மேலும் கீழும் செல்லும் சரிவு எதிரில்.
(C) சாலை மேடு எதிரில்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 26)*

**97. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) இரட்டை சாலை மேடு எதிரில்.
(B) அடுத்தடுத்து சாலை மேடுகள் எதிரில்.
(C) சீரில்லாத சாலை எதிரில்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 26)*

**98. இந்தக் குறியை எங்கு காணமுடியும்? இது எதனைக் குறிக்கிறது?**




(A) கட்டுப்பாடுள்ள வட்டாரங்கள் அனைத்திற்கும் அருகில். அங்கீகாரம் பெற்ற வாகனங்கள் மட்டுமே நுழையலாம்.
(B) பாதுகாக்கப்படும் வளாகங்களின் வாயில் கம்பிகளில். அங்கீகாரம் பெற்ற வாகனங்கள் மட்டுமே நுழையலாம்.
(C) அனைத்து ERP நுழைவாயில்கள் மட்டுமே. குறிப்பிட்ட நேரங்களில் தடை மண்டலங்களில் நுழைவதற்கு கட்டணம் வசூலிக்கப்படும்.

விடை: (C). *குறிப்பு: ERP- மின்னியல் சாலைக் கட்டணம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 26)*



பகுதி 2 போக்குவரத்து குறிகளும், விளக்கு சமிக்ஞைகளும் மற்றும் சாலை அடையாளங்களும்
எச்சரிக்கை குறிகள்

**99. இந்தக் குறி என்ன எச்சரிக்கை விடுக்கிறது**



(A) எதிரிலுள்ள சாலை படகுத்துறை, ஆற்றங்கரை அல்லது கடலுக்கு இட்டுச்செல்கிறது.
(B) எதிரில் செங்குத்தான சரிவு இருக்கிறது.
(C சாலை முடிவில் ஆறு இருக்கிறது.

விடை: (A). *குறிப்பு: இந்தக் குறியைப் பார்த்தால், நீங்கள் வேகத்தைக் குறைத்து, சாலை முடிவுக்கு வருவதைக் கவனிக்கவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 26)*

**100. இந்த குறி எதனைக் குறிக்கிறது**



(A) எச்சரிக்கை, பிரதான சந்திப்பு முன்னே.
(B) எச்சரிக்கை, அபாயம் முன்னே.
(C) எச்சரிக்கை, விபத்து பகுதி முன்னே.

விடை: (B). *குறிப்பு: மெதுவாக மற்றும் கவனமாக ஓட்டவும். இந்த குறி ஒரு துணைக் குறியுடன் தோன்றும். எ.கா., முன்னே விலங்குகள். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 26)*

**101. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) கூர் திருப்பம் எதிரில். வேகத்தைக் குறைத்து கவனமாக ஓட்டவும்.
(B) வழுக்கலான சாலை எதிரில். வேகத்தைக் குறைத்து கவனமாக ஓட்டவும்.
(C) விபத்து நிகழக்கூடிய பகுதி எதிரில். வேகத்தைக் குறைத்து கவனமாக ஓட்டவும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 25)*

**102. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) முதியோர் அல்லது பார்வையற்றோர் (குருடர்) சாலையைக் கடக்கிறார்கள்.
(B) சாலையின் குறுக்கே மக்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.
(C) காயமடைந்த மக்கள் சாலையை கடக்கிறார்கள்.

விடை: (A). *குறிப்பு: நீங்கள் எப்போதுமே சாலையைக் கடக்கும் முதியோர் அல்லது பார்வையற்றோருக்காக வேகத்தைக் குறைத்து, தேவையானால் வாகனத்தை நிறுத்தவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 27)*

**103. இங்குள்ள குறி எதனைக் குறிக்கிறது?**



(A) அபாயம்! அருகில் நெருங்கவேண்டாம்.
(B) வேகத்தைக் குறைக்கவும். பழுதடைந்த வாகனம் எதிரில்
(C) வழி விடவும்.

விடை: (B). *குறிப்பு: இந்தக் குறி பொதுவாக நகர்த்தக்கூடியதாகவும், ஒளிரும் பொருளில் செய்யப்பட்டதாகவும் இருக்கும். பழுதடைந்த வாகனத்தின் பின்னாலிருந்து குறைந்தது 20 மீட்டர் தொலைவில் இது வைக்கப்பட்டிருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 27)*

**104. இந்தக் குறியின் விளக்கம் என்ன?**



(A) குதிரைப் பந்தயத் தடம் எதிரில் உள்ளது.
(B) வேகத்தைக் குறைக்கவும், குதிரைகளும் விலங்குகளும் சாலையைக் கடக்கின்றன.
(C) வேகத்தைக் குறைக்கவும், விலங்குகளைக் கவனித்துச் செல்லவும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 27)*

**105. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) புறப்பட்டுச் செல்லும் விமானத்தை ஜாக்கிரதையாக கவனிக்கவும்.
(B) தாழ்வாகப் பறக்கும் விமானங்கள் எழுப்பும் திடீர் இரைச்சலைக் கவனிக்கவும்.
(C) அனைத்துலக விமான நிலையம் அருகில் இருக்கிறது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 27)*

**106. இந்தக் குறி தென்பட்டால், எதிரில் ரயில்வே கடப்பு இருப்பதாக அர்த்தம். நீங்கள்**



(A) வேகத்தைக் குறைத்து, அணுகும் ரயிலைக் கவனித்துச் செல்லவேண்டும்.
(B) வேகத்தைக் குறைத்து, தடுப்பில்லாத கடப்பை அணுகும் ரயிலைக் கவனித்துச் செல்லவேண்டும்.
(C) வேகத்தைக் குறைத்து, காத்திருக்கவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 26)*





**107. இந்தக் குறிக்கு என்ன அர்த்தம்**



(A) முன்னே U வளைவு, திரும்ப காத்திருக்கும் வாகனங்களை கவனிக்கவும்.
(B) U வளைவு திரும்ப முன்னே வரும் வாகனங்களை கவனிக்கவும்.
(C) இரு திசைகளில் இருந்து U வளைவு திரும்பும் வாகனங்களை கவனிக்கவும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 27)*

**108. இந்தக் குறியைப் பார்த்தால், நீங்கள்**



(A) வேகத்தைக் குறைத்து, கம்பித்தடுப்பு அல்லது தடைக்கழி இறங்குவதைக் கவனிக்கவேண்டும்.
(B) வேகத்தைக் குறைத்து, தடத்தில் ரயில் வருவதைக் கவனிக்கவேண்டும்.
(C) வேகத்தைக் குறைத்து, போக்குவரத்து போலிசார் கட்டுப்படுத்தும் கம்பித்தடுப்பைக் கவனிக்கவேண்டும்.

விடை: (A). *குறிப்பு: தரைமட்டத்தில் கம்பித்தடுப்புடன் கடப்பு இருப்பதை இந்தக் குறி குறிக்கிறது. சில இடங்களில், கம்பித்தடுப்புக்குப் பதிலாக தடைக்கழி உபயோகிக்கப்படுகிறது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 26)*

**109. இந்த குறியைப் பார்த்து நீங்கள் வேகத்தைக் குறைக்கவும்**



(A) முன்னே ஒரு ரவுண்டானாவின் காரணமாக.
(B) முன்னே சாலை வேலைகள் காரணமாக.
(C) முன்னே ஒரு கூர்மையான விலகல் காரணமாக.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 29)*

**110. வளைவு சீரமைப்பு குறியீடுகள் குறிக்கின்றன**



(A) எவ்வளவு கூர்மையான ஒரு வளைவு உள்ளது.
(B) சாலையில் தொடர்ச்சியான விலகல்கள்.
(C) போக்குவரத்து திசையை.

விடை: (A). *இவை வளைவில் போடப்பட்டிருக்கும். அறிகுறிகள் எவ்வளவு நெருக்கமாக உள்ளதோ அவ்வளவு கூர்மையாக வளைவுகள் இருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 29)*

**111. இந்த குறிகள் எதற்காக போடப் பட்டிருகின்றன**



(A) சாலை வேலைகள்.
(B) மிக குறைந்த வேக வரம்பு உள்ள சாலைகள்.
(C) தடுப்புக்கள் அல்லது அபாயங்கள்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 29)*

**112. அலை கோடுகள் சில இடங்களில் வளைவு சீரமைப்பு குறிப்பான்களுக்குப் பதிலாக பயன்படுத்தப்படுகின்றன**



(A) ஏனெனில் இது பிரகாசமாகவும் மற்றும் தெளிவாகவும் குறிப்பாக சுரங்கங்களில் புலப்படும்.
(B) எங்கு சாலை பிரிப்பு இல்லையோ அல்லது சாலை பிரிப்பு மிகவும் சிறியதாக உள்ளதோ.
(C) எங்கே சாலையில் ஒருங்கிணைந்த வளைவு மற்றும் கீழ் சரிவு உள்ளதோ.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 29)*

**113. இந்தக் குறி எதனைக் காட்டுகிறது**



(A) நீங்கள் நேராகச் செல்லலாம், இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் திரும்பலாம்.
(B) நீங்கள் இடப்பக்கமோ வலப்பக்கமோ திரும்பக்கூடாது, நேராக மட்டுமே செல்லலாம்.
(C) தொடர்ந்து செல்லக்கூடிய சாலையில் நீங்கள் வேகத்தைக் கூட்டலாம்.

விடை: (A). *குறிப்பு: இது "ஒருவழிப் போக்குவரத்து" குறியாகும். எனவே, நீங்கள் இந்த ஒருவழிச் சாலையில் செல்லும்போது வலப்பக்கமோ இடப்பக்கமோ திரும்பலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 28)*

**114. இந்தத் தகவல் குறி எதனைக் காட்டுகிறது**



(A) எதிரிலுள்ள சாலையின் முடிவில் கட்டுப்பாடுள்ள இடம் இருக்கிறது.
(B) எதிரிலுள்ள சாலையின் முடிவில் ஆபத்தான இடம் இருக்கிறது.
(C) நீங்கள் செல்லும் சாலை எதிரில் முடிவடைகிறது. தொடர்ந்து செல்ல வழியில்லை.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 30)*





**115. இந்தத் தகவல் குறி எதனைக் குறிக்கிறது**



(A) விரைவுச்சாலையின் தொடக்கம்.
(B) விரைவுச்சாலையின் முடிவு.
(C) மேம்பாலத்தின் முடிவு.

விடை: (B). *குறிப்பு: விரைவுச்சாலையிலிருந்து வெளியேறும்போது மறக்காமல் நீங்கள் செல்லும் சாலையின் வேக வரம்பைக் கவனிக்கவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 30)*

**116. இந்தக் குறியைப் பார்க்கும்போது, உங்களுக்குப் புரிவது**



(A) எதிரிலுள்ள இடப்பக்கத் திருப்பம் முடிவடையும் சாலைக்கு இட்டுச் செல்லும்.
(B) அடுத்த இடப்பக்கத் திருப்பத்தில் கட்டுப்பாடுள்ள இடம் இருக்கிறது.
(C) எதிரிலுள்ள இடப்பக்கச் சாலையில் வெளியேற்றம் இருக்கிறது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 30)*

**117. இந்தத் தகவல் குறி எதனைக் குறிக்கிறது**



(A) எதிரில் கூர் வளைவு திசைதிருப்பம் உள்ளது.
(B) எதிரில் U வளைவு உள்ளது.
(C) எதிரில் அடுத்தடுத்து வளைவுகள் உள்ளன.

விடை: (B). *குறிப்பு: நீங்கள் U-வளைவுக் குறி இல்லாத இடங்களில் U-வளைவு செய்யக்கூடாது. குறி இருக்கும் இடங்களில், குறிக்கு முன்பாக அல்லாது குறிக்குப் பின்பாக மட்டுமே U-வளைவு செய்யலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 30)*

**118. இந்தக் குறியைப் பார்த்தால், உங்களுக்குப் புரிவது**



(A) விரைவுச்சாலையின் தொடக்கம்.
(B) விரைவுச்சாலையின் முடிவு.
(C) மேம்பாலத்தின் தொடக்கம்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 30)*

**119. நீங்கள் இந்த குறியை பார்க்கும் போது என்ன செய்ய வேண்டும்?**




(A) துணைச் சாலையில் திரும்பிவரும் வாகனங்களை கவனிக்கவும்.
(B) துணைச் சாலையில் மறைந்து நிற்கும் வாகனங்களை கவனிக்கவும்.
(C) வேகத்தைக் குறைத்து மற்றும் தெளிவு இல்லாத வெளியேறும் சாலையில் இருந்து வெளியே வரும் வாகனங்களை கவனிக்கவும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 30)*

**120. இந்தத் தகவல் குறி எதனைக் குறிக்கிறது**



(A) எதிரிலுள்ள இடமும் இடப்பக்க இடமும் மழை பெய்யும்போது அதிக ஈரமாகிவிடக்கூடும்.
(B) மோட்டார் சைக்கிளோட்டிகள் மழையில் ஒதுங்குமிடம்.
(C) அனைத்து வாகனக்களும் மழையில் ஒதுங்குமிடம்.

விடை: (B). *குறிப்பு: மோட்டார் சைக்கிளோட்டிகள் மழையிலிருந்து ஒதுங்குமிடங்கள் பெரும்பாலும் விரைவுச்சாலைகளின் மேஞ்சாலைகளுக்குக் கீழே அமைந்திருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 31)*

**121. நீங்கள் இந்த குறியைக் காணும் போது**




(A) நிறுத்தத்தில் நுழைய வரும் பேருந்துக்களுக்கு வழி கொடுக்கவும்.
(B) நிறுத்தத்தில் இருந்து வெளியேறும் பேருந்துக்களுக்கு வழி கொடுக்கவும்.
(C) "Give Way" குறிப்பில் நிறுத்தி, நிறுத்தத்தில் இருந்து வெளியேறும் பேருந்துக்களுக்கு வழி கொடுக்கவும்.

விடை: (C). *இந்த குறி காட்டப்படும் இடத்தில், அதை பார்த்து நிறுத்தாமல் மற்றும் பேருந்துக்களுக்கு வழி கொடுக்காவிட்டால் குற்றமாகும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 32)*






**122. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) கிளைச் சாலை எதிரில் இரண்டு முக்கிய சாலைகளுடன் இணைகிறது.
(B) இடப்பக்கம் திரும்பும் பிரத்யேகத் தடமும் இடப்பக்கம் திரும்பும் பகிர்வுத் தடமும் எதிரில்.
(C) பிளவுபடும் போக்குவரத்துத் தடம் எதிரில்.

விடை: (B). *குறிப்பு: இந்தக் குறி பொதுவாக விரைவுச்சாலைகளில் காணப்படும். இடப்பக்கமுள்ள போக்குவரத்து இடப்பக்கம் திரும்பவேண்டும். வலப்பக்கமுள்ள போக்குவரத்து இடப்பக்கம் திரும்பலாம் அல்லது நேராகச் செல்லலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 34)*

**123. இந்தக் குறியைப் பார்த்தால், உங்களுக்குப் புரிவது**



(A) வலமுள்ள மூன்று தடங்களும் வலப்பக்கம் திரும்பும் தடங்கள்.
(B) இந்தச் சாலை ஐந்து தட விரைவுச்சாலையாகும்.
(C) எதிரில் பலத்த போக்குவரத்து, குறிப்பாக வலப்பக்கம் திரும்புமிடத்தில்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 34)*

**124. இந்த குறியில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்**




(A) இடப்பட்ட வேகம் வரம்பு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வேக வரம்பு.
(B) இடப்பட்ட வேகம் வரம்பு மற்றும் சராசரி வேகம் வரம்பு.
(C) இடப்பட்ட வேகம் வரம்பு மற்றும் நீங்கள் பயணம் செய்யும் வேகம்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 34)*

**125. இந்தத் "தாறுமாறான நடை" குறியின் விளக்கம்**




(A) குறிப்பிட்டுள்ள நேரங்களில், சாலை கடப்பு அல்லாத இடங்களிலும் நடையர்கள் தங்கள் விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம்.

(B) குறிப்பிட்டுள்ள நேரங்களில், நடையர்கள் எந்தத் திசையிலும், குறிப்பாக குறுக்குவாக்கில் சாலைகளைக் கடக்கக்கூடாது.

(C) குறிப்பிட்டுள்ள நேரக்களில், நடையர்கள் எந்தத் திசையிலும், குறிப்பாக குறுக்குவாக்கிலும் நடையர்கள் சாலை சந்திப்பைக் கடக்கலாம்.

விடை: (C). *குறிப்பு: "பச்சை மனிதன்" எரியும்போது மட்டுமே நடையர்கள் கடக்கலாம். சிவப்பு சமிக்ஞை விதிகள் அனைத்தும் பொருந்தும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 35)*

**126. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**




(A) நடையர் மேம்பாதை அல்லது மேம்பாலம்.

(B) மேஞ்சாலைக்கு இட்டுச்செல்லும் நடையர் படிக்கட்டு.

(C) சுரங்கப்பாதையில் அவசர வெளியேற்றப் பாதைக்கு இட்டுச்செல்லும் நடையர் படிக்கட்டு.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 35)*

**127. இந்தக் குறிகள் எதை அடையாளம் காட்டுகின்றன**



(A) நடையர் கடப்புகளில் நுழையக்கூடாது என்ற கட்டுப்பாடு.

(B) நடையர்கள் நடக்கக்கூடாத இடங்கள்.

(C) நடையர்கள் சாலையைக் கடக்கக்கூடாத மண்டலங்கள்.

விடை: (C). *குறிப்பு: நடையர்கள் சாலையைக் கடக்க உபயோகிக்கக்கூடாத மண்டலங்களை கறுப்பு அம்புக்குறிகள் காட்டுகின்றன. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 35)*

**128. இந்த குறியின் விளக்கம்**



(A) முன்னே ஒரு விரைவு சாலை உள்ளது.

(B) முன்னே ஒரு சுரங்கப்பாதை உள்ளது.

(C) முன்னே ஒரு பாலம் உள்ளது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 36)*





**129. இந்த குறி வாகன ஓட்டுநருக்கு விளக்கிறது**




(A) அவசரத்திற்கு அவர்கள் விளக்குகள் மற்றும் FM ரேடியோவை இயக்கவும்.

(B) வாகனம் பழுதடைந்தால், அவர்கள் விளக்குகள் மற்றும் FM ரேடியோவை இயக்கவும்.

(C) ஒரு சுரங்கப்பாதையில் நுழையும் போது தங்கள் விளக்குகள் மற்றும் FM ரேடியோவை இயக்கவும்.

விடை: (C). *குறிப்பு: இந்த குறி பொதுவாக சாலை சுரங்கங்கள் நுழைவாயிலின் முன் காணப்படும். வாகன ஓட்டுநர்கள் தங்களது வாகனத்தை மேலும் புலப்படும் செய்ய தங்கள் விளக்குகளை இயக்கி FM ரேடியோ மூலம் சுரங்கப்பாதை அவசர நிலைமைகளின் தகவல் பெறலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 36)*

**130. தடத்திற்கு மேலே காணப்படும் இந்தச் சிவப்பு நிற மின்னியல் குறி எதைத் தெரிவிக்கிறது**



(A) அந்தத் தடம் போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது.

(B) அந்தத் தடத்தில் விபத்து நிகழ்ந்துள்ளது.

(C) விளக்குச் சமிக்ஞைகள் பழுதடைந்துள்ளன.

விடை: (A). *குறிப்பு: இந்தக் குறி பொதுவாக சுரங்கச்சாலையின் நுழைவாயிலிலும் இடையிடையிலும் கூரையிலிருந்து தொங்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 36)*

**131. தடத்திற்கு மேலே விட்டுவிட்டு எரியும் இந்த மஞ்சள் குறி எதனைக் குறிக்கிறது**



(A) சுரங்கச்சாலையின் மற்ற சமிக்ஞைகள் பழுதடைந்துள்ளன.

(B) அந்தத் தடத்தில் ஏதேனும் தடை இருக்கக்கூடும்.

(C) அந்தத் தடத்தில் விபத்து நிகழ்ந்துள்ளது.

விடை: (B). *குறிப்பு: ஆனாலும் இந்தத் தடத்தில் போக்குவரத்து செல்லமுடியும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 36)*

**132. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) வெடிபொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் சுரங்கச்சாலைக்குள் செல்லக்கூடாது.

(B) டாங்கர் வாகனங்கள் சுரங்கச்சாலைக்குள் செல்லக்கூடாது.

(C) ஆபத்தான பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் சுரங்கச்சாலைக்குள் செல்லக்கூடாது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 36)*

**133. தடதின் மீதான பச்சை அம்புக்குறி என்றால்**



(A) அந்த பாதை மட்டும் பயன்படுத்த வேண்டும்.
(B) அந்த பாதை அதிக வேகம் எல்லை உண்டு.
(C) அந்த பாதை பயன்படுத்த தடையில்லை.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 36)*


**134. இது ஒரு ------------------------------ திசைகாட்டிக் குறி**




(A) உறுதிப்படுத்தும் திசைகாட்டிக் குறி
(B) முன்கூட்டியே வழிகாட்டும் திசைகாட்டிக் குறி
(C) வழக்கமான திசைகாட்டிக் குறி

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 40)*

**135. இங்கு காணப்படுவது ---------------------- திசைகாட்டிக் குறி**




(A) வழக்கமான திசைகாட்டிக் குறி
(B) முன்கூட்டியே வழிகாட்டும் திசைகாட்டிக் குறி
(C) உறுதிப்படுத்தும் திசைகாட்டிக் குறி

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 40)*

**136. இது உறுதிப்படுத்தும் திசைகாட்டிக் குறி**




(A) சரி.
(B) தவறு.
(C) இடத்தைப் பொறுத்தது.

விடை: (A). *குறிப்பு: உறுதிப்படுத்தும் குறிகளில் இடத்தின் திசையைக் காட்டும் (உறுதிப்படுத்தும்) செவ்ரான் வடிவம் (அம்புக்குறி) இருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 40)*





**137. இந்தக் குறி -------------------------- எனப்படும்.**




(A) பயனுள்ள இடத்தின் குறி
(B) வட்டார வழிகாட்டிக் குறி
(C) நுழைவாயில் குறி

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 40)*


**138. கீழ்க்காணும் குறி ------------------------ குறியாகும்.**




(A) பயனுள்ள இடத்தின்
(B) அமைவிடக் (இருப்பிட)
(C) சமூகக்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 41)*

**139. இந்தக் குறி ---------------------- எனப்படும்.**




(A) டாக்சி குறி
(B) பயணிகள் வரிசை குறி
(C) பயனுள்ள இடத்தின் குறி

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 41)*

**140. இந்தக் குறி ---------------------------------- குறிக்கிறது.**




(A) விரைவு சாலையின் தொலைவை
(B) சிங்கப்பூரின் கிழக்கு முனையிலிருந்து கிலோமீட்டர் தொலைவை
(C) அந்த சாலையின் தொலைவை

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல்) 1 - பக்கம் 42)*

**141. இந்த குறி சிங்கப்பூர் பதிவு செய்த வாகன ஓட்டுநர்களுக்கு எதை நினைவூட்டுகிறது**




(A) சிங்கப்பூர் விட்டு போகும் போது தங்கள் வாகனத்தின் எரிபொருள் தொட்டி குறைந்தது 3/4 முழு இருக்க வேண்டும்.
(B) சிங்கப்பூர் நுழையும் போது தங்கள் வாகனத்தின் எரிபொருள் தொட்டி 3/4 க்கு மேல் இருக்கக்கூடாது.
(C) சிங்கப்பூர் விட்டு போகும் போது தங்கள் வாகனத்தின் எரிபொருள் தொட்டி முழு 3/4 மட்டுமே இருக்க வேண்டும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 43)*

**142. இந்தக் குறி எந்த இடத்திற்கு வழிகாட்டுகிறது**




(A) "Johore" மாநிலம் செல்லும் வழி.
(B) ஜோகூரிலுள்ள சுவாரஸ்யமான இடம்.
(C) சுற்றுலாத் தளம்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 43)*

**143. இந்தக் குறியின் விளக்கம்**



(A) கனரக வாகனத்திற்கு ஓட்டுரிமை உண்டு.
(B) எதிரில் சாலைப் பணிகள் நடைபெறுகின்றன.
(C) எதிரில் சாலைத் துப்புரவு பணிகள் நடைபெறுகின்றன.

*விடை: (B). குறிப்பு: இப்பகுதியைக் கடந்து செல்லும்போது கனரக சாதனங்கள், தொழிலாளர்களைக் கவனிக்கவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 44)*

**144. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**





(A) 200 மீட்டர் எதிரில் சாலைப்பணிகள், வேகத்தைக் குறைத்து, தடங்கல் அல்லது திசைதிரும்பும் பாதையைக் கவனித்துச் செல்லவும்.
(B) 200 மீட்டர் எதிரில் சாலைப்பணிகள், இப்பகுதியை முழுமையாகத் தவிர்க்கவும்.
(C) 200 மீட்டர் எதிரில் சாலைப்பணிகள், திசைதிரும்பும் பாதையில் செல்ல U வளைவு திரும்பவும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 44)*





**145. இந்தக் குறிகளின் விளக்கம் என்ன?**



(A) வேகத்தைக் குறைக்கவும், வலப்பக்கம் செல்லவும் அல்லது வலப்பக்கம் பாதை மாறவும்.
(B எதிரில் வலப்பக்கம் மட்டுமே திரும்பவும்.
(C) வலப்பக்கமாகச் சென்று, வலப்பக்கம் மட்டுமே முந்திச் செல்லவும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 44)*

**146. இந்த குறி எதனைக் குறிக்கிறது**



(A) அபாயம் முன்னே.
(B) மாற்றுப்பாதை முன்னே.
(C) வேலை மண்டலம் முன்னே.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 44)*

**147. இந்தத் தற்காலிக எச்சரிக்கை குறி எதனைக் குறிக்கிறது**




(A எதிரில் சாலைப்பணிகள், மெதுவாகவும் கவனமாகவும் ஓட்டிச் செல்லவும்.
(B) எதிரிலுள்ள சாலையில் கனரக வாகனங்கள் மட்டுமே செல்லலாம்.
(C) கனரக வாகனங்கள் நுழையும் வெளியேறும் பணியிடம் எதிரில். வேகத்தைக் குறைக்கவும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 45)*

**148. இந்தக் குறி எதனைக் காட்டுகிறது**



(A) இருதட தற்காலிகச் சாலை எதிரில்.
(B) மூன்று தடச் சாலையில் இரண்டு தடச் சாலை கட்டப்படுகிறது.
(C) இடக்கோடித் தடம் நடுத்தடத்துடன் இணைகிறது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 45)*

**149. இந்தத் தற்காலிகக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) எதிரில் இரட்டை வளைவுள்ள திசைதிருப்பம்.
(B) எதிரில் அடுத்தடுத்து வளைவுகள்.
(C) எதிரில் வலப்பக்கம் முந்திச்செல்லும் தடம்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 45)*

**150. இந்தக் குறியைப் பார்த்ததும் உங்களுக்குப் புரிவது**



(A) எதிரில் அடுத்தடுத்து வளைவுகள் உள்ளன.
(B) எதிரில் இடப்பக்க வளைவு உள்ளது.
(C) எதிரில் கூர் திருப்பம் உள்ளது.

விடை: (B). *குறிப்பு: அம்புக்குறி வலப்பக்கம் காட்டினால், வளைவு வலப்பக்கம் இருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 45)*

**151. இந்த குறி ஒரு வேலை மண்டலத்தில் இருந்தால்**



(A) இரண்டு பாதைகள் மட்டுமே போக்குவரத்துக்கு திறந்திருக்கும்.
(B) மையத்தில் இருக்கும் தடம் மூடப்பட்டிருக்கும்.
(C) மையத் தடத்தில் தடையாக இருக்கும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 45)*

**152. இந்த மின்னனு குறி எப்படி பயன்படுகிறது**




(A) அனைத்து வகையான போக்குவரத்து தகவல்.
(B) சாலை மூடல் தகவல்.
(C) போக்குவரத்து நெரிசல் தகவல்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 47)*





**153. இது ஒரு சாலையோர மாற்று செய்தி குறி (RVMS) ஆகும். இது _______ பற்றி வாகன ஓட்டுநர்களுக்கு தெரிவிக்க பயன்படுத்தப்படுகிறது.**




(A) முக்கிய சாலைகளில் போக்குவரத்து சூழ்நிலைகள்.
(B) விரைவு நெடுஞ்சாலைகள் மற்றும் பிரதான முக்கிய சாலைகளில் போக்குவரத்து சூழ்நிலைகள்.
(C) முக்கிய சாலைகளில் போக்குவரத்து சூழ்நிலைகள்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 47)*

**154. இது ஒரு மின்னனு கட்டுப்பாட்டு குறி (ERS) ஆகும். இது பயன்படுத்துவது**



(A) குறிப்பிட்ட காலத்தில் தடை செய்யப்பட்ட திருப்பு இயக்கங்களை காண்பிக்க பிரதிபலிக்கும்.
(B) சட்டவிரோத திருப்பங்களை செய்யும் ஓட்டுநர்களை கண்காணிக்க.
(C) வாகன ஓட்டிகளுக்கு முன்னே திருப்பமுடியாது என்பதை ஞாபகப்படுத்துகிறது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 48)*

**155. இந்த மின்னியல் குறி எதனைக் குறிக்கிறது**



(A) சாலை பெருக்கும் லாரி எதிரில்.
(B) டிராக்டர்கள் போன்ற கனரக வாகனங்கள் நுழையக்கூடாது.
(C) சாலைப்பணிகள் எதிரில்.

விடை: (C). *குறிப்பு: எப்போதும் போலவே, நீங்கள் வேகத்தைக் குறைத்து, இப்பகுதியில் தொழிலாளர்களையும் சாலைப்பணிகளையும் கவனித்துச் செல்லவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 48)*

**156. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது?**



(A) எதிரில் வாகனம் கவிழ்ந்து கிடக்கிறது.
(B) எதிரில் விபத்து நிகழ்ந்துள்ளது.
(C) எதிரில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 48)*

**157. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) எதிரில் போக்குவரத்து நெரிசல், அதிகப் போக்குவரத்து அல்லது மெதுவடைந்த போக்குவரத்து.
(B) பல வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்து.
(C) இந்தப் பல தட சாலையில் முந்திச் செல்லக்கூடாது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 48)*

**158. இந்தக் குறி உங்களிடம் தெரிவிப்பது**



(A) எதிரிலுள்ள சாலையில் பராமரிப்புப் பணிகள் நடைபெறுவதால் எச்சரிக்கையாக இருக்கவும்.
(B) நிச்சயமில்லா சூழ்நிலையால் எதிரிலுள்ள சாலையைத் தவிர்க்கவும்.
(C) எதிரில் வழக்கத்திற்கு மாறான சாலை சூழ்நிலை காரணமாக எச்சரிக்கையாக இருக்கவும்.

விடை: (C). *குறிப்பு: எதிரிலுள்ள சாலையில் சாலைத்தடக் குறிகள் இல்லாதிருக்கலாம், அல்லது குப்பைக்கூளம் கொட்டிக் கிடக்கலாம் அல்லது ஏதேனும் ஒருவகை பொருள் சிந்திக் கிடக்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 48)*

**159. வேகக் கட்டுப்பாடு எதுவென்று இந்தக் குறி தெரிவிக்கிறது**




(A) மணிக்கு 60 கிலோமீட்டருக்கு மேல்.
(B) மணிக்கு 60 கிலோமீட்டருக்குக் குறைவு.
(C) மணிக்கு 60 கிலோமீட்டர்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 48)*

**160. இந்த மின்னியல் குறியின் விளக்கம்**



(A) தடம் 1 மற்றும் 2 போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது.
(B) தடம் 1 மற்றும் 2 தடைபட்டிருப்பதால் கடந்து செல்ல இயலாது.
(C) தடம் 1 மற்றும் 2ன் நடுவழியில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

விடை: (C). *குறிப்பு: தட எண்ணிக்கை வலப்பக்கமிருந்து தொடங்கும். மெதுவாக ஓட்டி, தடம் மாறத் தயாராகும்படியும் இந்தக் குறி எடுத்துச் சொல்கிறது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 49)*





**161. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) தடம் 2 மற்றும் 3ல் தடங்கல் உள்ளது அல்லது ஓட்டுவதற்கு ஆபத்தாக உள்ளது.
(B) தடம் 2 மற்றும் 3 எதிரில் முடிவடைகின்றன.
(C) தடம் 1 மற்றும் 2 நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன.

விடை: (A). *குறிப்பு: இந்தக் குறியும் இதே போன்ற மற்றவையும் "தடம் குறைப்பு" குறிகள் என்றழைக்கப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 49)*

**162. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது?**



(A) இந்தக் குறிக்குப் பிறகு தடம் 4 தடம் 3-உடன் முழு வழியும் இணைகிறது.
(B) தடம் 4ல் எதிரில் தடங்கல் உண்டு, தடம் மாறத் தயாராகவும்.
(C) தடம் 4ல் அவசரகால வாகனங்கள் மட்டுமே செல்லமுடியும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 49)*

**163. இந்தக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) சாலையில் தீயணைப்பு வண்டி.
(B) சாலையில் இழுவை லாரி.
(C) சாலையில் நீண்ட வாகனம்.

விடை: (A). *குறிப்பு: இந்தக் குறியில் அம்புலன்ஸ் அல்லது வேறு அவசரகால வாகனங்களும் காட்டப்படலாம். அந்நிலையில் நீங்கள் வழிவிடத் தயாராக இருக்கவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 50)*

**164. இந்தக் குறிகள் குறிப்பவை**




(A) ஈரமான அல்லது உலர்வான சாலை எதிரில்.
(B) சாலையோரமாக செடிகளும் மரங்களும் பராமரித்தல் அல்லது நடுதல்.
(C) பூமலை அல்லது பூங்கா எதிரில்.

விடை: (B). *குறிப்பு: சாலையோரத்தில் தொழிலாளர்களைக் கவனித்துச் செல்லுமாறு இந்தக் குறிகள் எச்சரிக்கின்றன. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 50)*

**165. இந்தக் குறி உங்களிடம் தெரிவிப்பது**



(A) எதிரிலுள்ள சாலையில் வாகனம் பழுதுபார்க்கப்படுகிறது.
(B) எதிரிலுள்ள சாலையில் வாகனம் பழுதடைந்துள்ளது.
(C) எதிரிலுள்ள சாலையில் வாகனம் பழுதுபார்க்கும் இடமுள்ளது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 49)*

**166. இந்தச் சாலைக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) எதிரிலுள்ள சாலையில் பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெறுகின்றன.
(B) எதிரிலுள்ள சாலை அகலமாக்கப்படுகிறது.
(C) எதிரிலுள்ள சாலையில் சாலை பெருக்கும் பணி நடைபெறுகிறது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 49)*

**167. இந்தக் குறி எதனை எச்சரிக்கிறது**



(A) வழுக்கலான சாலை எதிரில்.
(B) வளைந்து செல்லும் சாலை எதிரில்.
(C) விபத்து எதிரில்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 49)*

**168. இந்தக் குறிகள் எங்கு காணப்படும்**




(A) அனைத்து அவசரகால வாகனங்களிலும்.
(B) அனைத்து நீண்ட, கனரக வாகனங்களிலும்.
(C) ஆபத்தான சரக்குகளை ஏற்றிச்செல்லும் அனைத்து வாகனங்களிலும்.

விடை: (B). *குறிப்பு: இந்தக் குறிகள் பொதுவாக வாகனங்களின் பக்கவட்டிலும் பின்பகுதியிலும் காணப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 52)*





**169. இந்தத் தகடை மாட்டி வைத்திருக்க வேண்டியவர்கள்**



(A) பயிற்றுவிப்பாளருடன் ஓட்டுநர் பயிற்சி பெறுபவர்கள்.
(B) தகுதிபெற்ற ஓட்டுநர் உரிமத்தைப் புதிதாகப் பெற்ற ஓட்டுநர்.
(C) பயிற்றுவிப்பாளர் இல்லாமல் ஓட்டுநர் பயிற்சி பெறுபவர்கள்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 52)*

**170. நீங்கள் ஓட்டும் சாலையின் நடுவில் இடைவிட்ட கோடு இருக்கிறது.**



(A) எனவே நீங்கள் கூடுமானவரை கோட்டுக்கு அருகில் ஓட்டவேண்டும்.
(B) எனவே நீங்கள் கோட்டுக்கு இடப்பக்கம் ஓட்டவேண்டும்.
(C) எனவே நீங்கள் நடுக்கோட்டில் (டிவைடெர்) ஓட்டவேண்டும்.

விடை: (B). *குறிப்பு: இது இருவழிச் சாலையைப் பிரிக்கும் கோடாகும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 53)*

**171. ஓட்டிச் செல்லும்போது, இருவழிச் சாலையின் நடுவில் இடைவிடாத வெள்ளை கோடு இருந்தால், நீங்கள்**



(A) கோட்டிற்கு இடப்பக்கமாக ஓட்டவேண்டும். சாலையின் இரு பக்கங்களிலும் வாகனத்தை நிறுத்தி வைக்கக்கூடாது.
(B) கோட்டிற்கு இடப்பக்கமாக ஓட்டவேண்டும். சாலையின் எந்தவொரு பக்கமும் வாகனத்தை நிறுத்தி வைக்கலாம்.
(C) கோட்டிற்கு இடப்பக்கமாக ஓட்டவேண்டும். இரவில் மட்டுமே வாகனத்தை நிறுத்தி வைக்கலாம்.

விடை: (A). *குறிப்பு: நடுவிலுள்ள கோடு "டிவைடெர்" என்றும் அழைக்கப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 53)*

**172. சாலையின் நடுவில் காணப்படும் இடைவிடாத இரட்டைக் கோடுகள் பரல்லெல் லைன்ஸ் எதைக் குறிக்கின்றன?**



(A) எந்த நேரத்திலும் முந்திச் செல்லலாம்.
(B) இடப்பக்கம் மட்டுமே முந்திச் செல்லலாம்.
(C) முந்திச் செல்லக்கூடாது.

விடை: (C). *குறிப்பு: சாலையின் இரு பக்கங்களிலும் வாகனங்களை நிறுத்தி வைக்கவும் கூடாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 53)*

**173. சாலையோரத்தில் ஒரே ஒரு மஞ்சள் கோடு தென்படுகிறது. இது எதைக் குறிக்கிறது?**



(A) எந்த நேரத்திலும் அச்சாலையின் ஓரத்தில் வாகனத்தை நிறுத்தி வைக்கலாம்.
(B) வார நாட்களில் அச்சாலையின் ஓரத்தில் வாகனத்தை நிறுத்தி வைக்கக்கூடாது.
(C) ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர்த்து மற்ற நாட்களில் காலை 7.00 மணிக்கும் இரவு 7.00 மணிக்கும் இடையில் அச்சாலை ஓரத்தில் வாகனத்தை நிறுத்தி வைக்கக்கூடாது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 53)*

**174. சாலையோரத்தில் காணப்படும் ஒற்றை வெள்ளை நிற குறுக்கு நெடுக்கு கோடு**



(A) எதிரில் மிக அருகில் நடையர் கடப்பு இருப்பதாக முன்கூட்டியே எச்சரிக்கிறது.
(B) எதிரில் கட்டாய நிறுத்தம் இருப்பதாக முன்கூட்டியே எச்சரிக்கிறது.
(C) குறுக்கு நெடுக்கு கோட்டிலிருந்து நடையர் கடப்பு வரை கடப்பு இருப்பதாக முன்கூட்டியே எச்சரிக்கிறது.

விடை: (A). *குறிப்பு: குறுக்கு நெடுக்கு கோடு காணப்படும் சாலைப் பகுதியில் நடையர்கள் சாலையைக் கடக்கக்கூடாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 54)*






**175. சாலையோரத்தில் காணப்படும் இரட்டை மஞ்சள் நிற குறுக்கு நெடுக்கு கோடுகள் எதனைக் குறிக்கின்றன**



(A) கட்டுப்பாடுள்ள நடையர் கடப்பு அருகில் இருக்கிறது.
(B) பயணிகளை ஏற்றிக் கொள்வது, இறக்கு விடுவது உட்பட எந்த நேரத்திலும் சாலையின் அப்பகுதியில் வாகனத்தை நிறுத்தக்கூடாது.
(C) சாலையின் அப்பகுதியில் மட்டுமே பயணிகளை இறக்கி விடவும் ஏற்றிக் கொள்ளவும் அனுமதிக்கப்படும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 54)*

**176. சாலையோரத்தில் காணப்படும் ஒற்றை மஞ்சள் நிற குறுக்கு நெடுக்கு கோடு எதனைக் குறிக்கிறது**



(A) கட்டுப்பாடற்ற நடையர் கடப்பு அருகில் இருக்கிறது.
(B) உடனடியாகப் பயணிகளை ஏற்றிக் கொள்வது அல்லது இறக்கிவிடுவது தவிர்த்து, சாலையின் அப்பகுதியில் எந்த நேரத்திலும் வாகனத்தை நிறுத்தி வைக்கக்கூடாது.
(C) பயணிகளை ஏற்றிக் கொள்ள அல்லது இறக்கிவிட அல்லது அவர்கள் வருவதற்காகக் காத்திருக்க, வாகனத்தை நிறுத்தி வைத்து காத்திருக்கலாம்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 54)*

**177. சாலையோரத்தில் காணப்படும் இரட்டை வெள்ளை நிற குறுக்கு நெடுக்கு கோடுகள் எதனைக் குறிக்கின்றன**



(A) எதிரிலுள்ள கடப்பில் நடையர்கள் யாரும் கடக்காவிட்டாலும் கடக்கக் காத்திருக்காவிட்டாலும் ஓட்டுநர்கள் வாகனத்தை நிறுத்தவேண்டும்.
(B) பயணிகளை ஏற்றிக்கொள்ள அல்லது இறக்கிவிட பாதுகாப்பான இடம்.
(C) மேற்காணும் எதுவும் இல்லை.

விடை: (C). *குறிப்பு: இதுபோன்ற அடையாளம் கிடையாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 54)*

**178. சாலையோரத்தில் இரண்டு இடைவிடாத மஞ்சள் கோடுகள் (பெரலெல் லைன்ஸ்) காணப்பட்டால் நீங்கள் என்ன செய்யக்கூடாது?**



(A) பகலோ இரவோ எந்த நேரத்திலும் வாகனத்தை நிறுத்தி வைக்கவோ காத்திருக்கவோ கூடாது.
(B) பயணிகளை ஏற்றிக் கொள்வதற்காக மட்டுமே வாகனத்தை நிறுத்தி வைக்கலாம்.
(C) ஞாயிற்றுக்கிழமை, பொது விடுமுறை நாட்கள் தவிர்த்து மற்ற நாட்களில் நிறுத்தி வைக்கவோ நிற்கவோ கூடாது.

விடை: (A). *குறிப்பு: இருக்கையில் ஓட்டுநர் இருக்க, வாகன இன்ஜின் ஓடிக் கொண்டிருந்தாலும், வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவே கருதப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 54)*

**179. அகலமான இடைவிட்ட கோடு எதனைக் குறிக்கிறது?**



(A) பக்கத்துச் சாலைக்கு இட்டுச் செல்லும் சாலையோரப் பகுதியைக் காட்டுகிறது.
(B) பக்கத்துச் சாலையின் முடிவைக் காட்டுகிறது. முந்திச் செல்லக்கூடாது.
(C) பக்கத்துச் சாலையின் தொடக்கத்தைக் காட்டுகிறது. முந்திச் செல்லக்கூடாது.

விடை: (A). *குறிப்பு: பக்கத்துச் சாலைக்குள் நுழையும் வாகனங்கள் வேகத்தைக் குறைக்கவேண்டும். பக்கத்துச் சாலை "வேகக்குறைப்பு தடம்" என்றும் அழைக்கப்படும். பக்கத்துச் சாலை பெரிய சாலையுடன் இணையும் பகுதி "வேகத்தைக் கூட்டும் தடம்" எனப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 55)*

**180. நீங்கள் சாலையில் பல இடைவிட்ட கோடுகளைக் காணலாம். இவைக் குறிப்பவை**




(A) நீங்கள் எந்த நேரத்திலும் தடம் மாறக்கூடாது.
(B) நீங்கள் தடம் 4ல் இருந்தால் மட்டுமே எந்தவொரு வாகனத்தையும் முந்திச் செல்லலாம்.
(C) முந்திச் செல்வதாக இருந்தாலொழிய கூடுமானவரை தடத்திலேயே இருக்கவேண்டும்.

விடை: (C). *குறிப்பு: வலக்கோடித் தடம் தடம் 1 என்றும், அதையடுத்த தடங்கள் தடம் 2, 3, 4 என்றும் வகுக்கப்பட்டுள்ளன. தடம் 4க்கு இடப்பக்கம் அமைந்துள்ள ஓரத்தடம் (SH) அகலமான இடைவிடாத வெள்ளை நிறக் கோட்டால் காட்டப்படுகிறது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 55)*





**181. சாலையின் இரு பக்கங்களிலும் காணப்படும் அகலமான இடைவிடாத வெள்ளை கோடுகள் எதைக் குறிக்கின்றன?**



(A) சாலை எவ்வளவு அகலமாக இருக்கிறது என்பதைக் காட்டுகின்றன.
(B) சாலையோரங்களில் எந்த நேரத்திலும் வாகனத்தை நிறுத்தி வைக்கக்கூடாது என்பதைக் காட்டுகின்றன.
(C) சாலையின் ஓரங்களைக் காட்டுகின்றன. இவை ஓரக் கோடுகள் என்றும் அழைக்கப்படும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 54)*


**182. "விப்ரா" கோடுகள் ஒரு வாகனத்தை நடுங்க செய்து ஒரு இரைச்சல் சத்தத்தை ஏற்படுத்தும். இவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது**



(A) முன்னேரும் வழியில் அபாயம் உள்ளதை காட்டுகிறது.
(B) வாகனத்தை வேகம் குறைக்க வைக்கும்.
(C) வாகன ஓட்டுநர் தடத்தை விட்டு பிரியாமல் செய்கிறது.

விடை: (C). *குறிப்பு: இந்த (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 55)*


**183. இடது படத்தில் காணப்படும் சாலை அடையாளம் "செவ்ரான்" என்றும் வலது படத்தில் காணப்படும் அடையாளம் "தனியமைவு" (கூப்லஷெட் ஐலண்ட்) என்றும் அழைக்கப்படும். இவை எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன?**



(A) கான்கிரீட் முனைகளுக்குப் பதிலாக இவை பயன்படுத்தப்படுகின்றன.
(B) போக்குவரத்தைப் பிரித்துவிட இவை பயன்படுத்தப்படுகின்றன.
(C) இதை வெறும் பாதுகாப்பு அடையாளங்கள் ஆகும்.

விடை: (B). *குறிப்பு: அவை, போக்குவரத்து பாதுகாப்பாக எங்கே பிரிந்து செல்ல தேவையோ அங்கு உதவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 55)*

**184. துணைச் சாலையில் காணப்படும் வெள்ளை நிற முக்கோணக் குறி**



(A) இடப்பக்கமிருந்து வலப்பக்கம் போக்குவரத்துக்கு வழிகாட்ட உதவுகிறது.
(B) சாலையின் இப்பகுதியில் உள்ள வாகனங்கள் பெரிய சாலையில் செல்லும் வாகனங்களுக்கு வழிவிட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.
(C) போக்குவரத்துத் தீவைக் குறிக்கிறது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 56)*

**185. சாலையில் இரண்டு பகுதிகள் செங்கல் சிவப்பு நிறத்தில் வகுத்து காணப்படுகின்றன. ஏன்?**




(A) சாலையை போடும் பொருட்கள் சோதிக்கப்படுவதால் இவ்வாறு சாயமடிக்கப்பட்டுள்ளது.
(B) இவை பள்ளி மண்டலத்தைக் குறிக்கின்றன.
(C) எதிரில் வழுக்கலான சாலை இருப்பதாகக் குறிக்கின்றன.

விடை: (B). *குறிப்பு: இந்த அடையாளங்கள் பள்ளி மண்டலத்திற்குள், பள்ளியின் நுழைவாயில் அல்லது வெளிவாயிலுக்கு மிக அருகில் காணப்படும். நீங்கள் வேகத்தைக் குறைத்து, பள்ளிச் சிறுவர்களைக் கவனித்துச் செல்லவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 56)*

**186. இந்த சாலை குறி எதனைக் குறிக்கிறது**



(A) முன்னே குறுகிய சாலை உள்ளது.
(B) முன்னே ஒரு கூர்மையான வளைவு உள்ளது.
(C) முன்னே ஒரு வரிக்குதிரை கடப்பு உள்ளது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 56)*

**187. செவ்வக வடிவ மஞ்சள் பெட்டி**



(A) டாக்சி நிறுத்தம்.
(B) பேருந்து நிறுத்தம்
(C) பழுதடைந்த வாகனம் நிறுத்தும் பெட்டி.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 57)*






**188. நீள்வாக்கு மஞ்சள் கோடும் அகலமான குறுக்குவாக்கு மஞ்சள் கோடுகளும்**




(A) மஞ்சள் பெட்டி சந்திப்பைக் குறிக்கின்றன.
(B) விரைவுச்சாலையின் ஓரத்தடத்தைக் குறிக்கின்றன.
(C) பேருந்து தடத்தைக் குறிக்கின்றன.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 57)*


**189. சிவப்பு கோட்டுடன் காணப்படும் நீள்வாக்கு மஞ்சள் கோடு**




(A) முழுநாள் பேருந்து தடத்தைக் குறிக்கிறது.
(B) மிக நீளமான வளைந்த பேருந்துகளின் பேருந்து தடத்தைக் குறிக்கிறது.
(C) கட்டுப்பாடுள்ள சாலையைக் குறிக்கிறது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 57)*


**190. திங்கள் முதல் வெள்ளி வரை வழக்கமான பேருந்து தடத்தின் நேரம்**




(A) காலை 7.00 முதல் 9.30 வரையும் மாலை 4.30 முதல் இரவு 7.30 வரை.
(B) காலை 7.30 முதல் 9.30 வரையும் மாலை 5.00 முதல் இரவு 8.00 வரை.
(C) காலை 7.30 முதல் 9.00 வரையும் மாலை 4.30 முதல் இரவு 7.30 வரை.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 57)*


**191. முழு நாள் பேருந்து தடத்தின் நேரம்**




(A) திங்கள் முதல் சனிக்கிழமை - காலை 7.30 முதல் மாலை இரவு 11:00 வரை.
(B) திங்கள் முதல் வெள்ளி - காலை 7.30 முதல் மாலை இரவு 8.00 வரை.
(C) திங்கள் முதல் சனிக்கிழமை - காலை 7.30 முதல் மாலை இரவு 7.30 வரை.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 57)*

**192. வரைபடத்தில் உள்ள அடையாளங்கள் கண்டு, வாகன ஓட்டிகள்**





(A) பேருந்து தடச் சாலையை, பக்க சாலையில் இருந்து உள்ளே அல்லது வெளியே திரும்ப பயன்படுத்த முடியும்.

(B) பக்க சாலையில் இருந்து பேருந்து தடச் சாலைக்கு உள்ளே திரும்பலாம் ஆனால் பேருந்து தடச் சாலையில் இருந்து பக்க சாலைக்கு வெளியே திரும்ப முடியாது.

(C) பேருந்து தடச் சாலையை பக்க சாலைக்கு உள்ளே திரும்ப பயன்படுத்த முடியும் ஆனால் பேருந்து தடச் சாலையை பக்க சாலைக்கு வெளியே திரும்ப பயன்படுத்த முடியாது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 58)*

**193. சாலையில் காணப்படும் வரிக்கோடுகள்**





(A) நடையர்களுக்குரிய பற்பல கடப்புகளைக் குறிக்கின்றன.

(B) வேகத்தைத் தடுக்கின்றன. நீங்கள் வேகத்தைக் குறைக்கவேண்டும்.

(C) எதிரில் கூர் திருப்பங்கள் இருப்பதைக் காட்டுகின்றன.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 59)*

**194. படத்தில் ஒரு பேருந்து நிறுத்தத்தில் சாலை அடையாளங்களை காட்டுகிறது. எங்கு இந்த அடையாளங்கள் "Give Way" தோன்றுமோ, நீங்கள் வரிசையில் காத்திருக்க வேண்டும்**





(A) பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகள் இல்லாத வரை.

(B) நிறுத்தத்தில் காத்திருந்த அனைத்து பேருந்துகளும் வெளியேறும் வரை.

(C) மற்றும் ஒரு பேருந்தை மட்டும் நிறுத்தத்தில் இருந்து வெளியேற அனுமதிக்கவும் நீங்கள் தொடர்வதற்கு முன்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 58)*

**195. படத்தில் உள்ளபடி சாலையின் குறுக்கே அல்லது சாலையின் ஒரு பகுதியில் காணப்படும் ஒற்றை வெள்ளை கோடு எதனைக் குறிக்கிறது**



(A) கட்டாய நிறுத்தக் கோடு.

(B) ஒருவழி அல்லது இருவழிச் சாலை.

(C) முக்கிய சாலையின் நடையர் கடப்பு.

விடை: (A). *குறிப்பு: நீங்கள் நிறுத்தக் கோட்டுக்கு அருகில் அல்லது சற்றே முன்னதாக நிறுத்தவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 59)*





**196. இந்தச் சூழ்நிலையில் யார் வழிவிடவேண்டும்?**



(A) பெரிய சாலையில் செல்லும் போக்குவரத்துக்கு நீங்கள் வழிவிடவேண்டும்.

(B) நீங்கள் முதலில் செல்லலாம், உங்களுக்கு முதலுரிமை.

(C) உங்களுக்கோ அல்லது மஞ்சள் லாரிக்கோ முதலுரிமை கிடையாது. எல்லாம் சூழ்நிலையைப் பொறுத்தது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 59)*

**197. படத்தில் காணப்படும் இணையொத்த வெள்ளை கோடுகள்**



(A) பாதுகாப்பு மண்டலங்கள் ஆகும்.

(B) சாலையைப் பிரிக்கும் குறிகளாகும்.

(C) பச்சை/சிவப்பு மனிதன் உள்ள நடையர் சமிக்ஞை கடப்புகள் ஆகும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 60)*

**198. படத்தில் காணப்படும் வலப்பக்கம் திரும்பும் பகுதிகள் (சாலை சந்திப்பின் மத்தியில் உள்ள இடைவிட்ட கோடுகள்)**



(A) குறித்த நேரத்தில் திரும்ப இயலாத வாகனங்கள் நிற்பதற்குரியவை.

(B) திரும்புவதற்காகக் காத்திருக்கும் வாகனங்கள் இருக்கவேண்டிய இடத்தைக் காட்டும் வழிகாட்டிகள்.

(C) மேற்காணும் எதுவும் இல்லை.

விடை: (B). *குறிப்பு: திரும்புவதற்காகக் காத்திருக்கும் ஓட்டுநர்கள் பாதுகாப்பான இடத்திற்குள் இருக்க வலப்பக்கம் திரும்பும் பகுதிகள் உதவுகின்றன. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 60)*


**199. வளைந்த இடைவிட்ட கோடு**



(A) சாலையின் குறுக்கே கடக்கும் நடையருக்குரிய பாதுகாப்புப் பகுதி.
(B) வாகனங்கள் நிறுத்தக்கூடாத பகுதி.
(C) ஓட்டுநர்கள் துல்லியமாகவும் பாதுகாப்பாகவும் திரும்ப வழிகாட்டும் கோடு.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 60)*

**200. இந்த சாலை அடையாளங்கள்**



(A) முன்னே சாலை குறுகுகிறது என்று குறிக்கிறது.
(B) முன்னே ஒரு குறுகலான சாலை விளைவு உருவாகுகிறது என்று பொருள்.
(C) முக்கோணங்கள் தொகுப்பு இடையே உள்ள சாலை, மற்ற சாலை நீட்டிப்புகளை விட குறுகி இருக்கும் என்று குறிப்பிடுகின்றன.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 61)*

**201. இந்தப் படத்தில் இருப்பது**



(A) விளக்குள்ள வரிக்கோடு கடப்பு.
(B) கூடுதல் முன்னெச்சரிக்கையுள்ள வரிக்கோடு கடப்பு.
(C) உயர்த்தப்பட்ட வரிக்கோடு கடப்பு.

விடை: (C). *குறிப்பு: உயர்த்தப்பட்ட வரிக்கோடு கடப்பு நடையர் கடப்பாகவும் வேகத்தைக் கட்டுப்படுத்தும் மேடாகவும் பயன்படுகிறது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 61)*

**202. இந்தப் படத்தில் இருப்பது**



(A) மற்றொரு வகை வரிக்கோடு கடப்பு.
(B) வேகத்தைக் கட்டுப்படுத்தும் மேடு.
(C) கடப்பும் மேடும் சேர்ந்தது.

விடை: (B). *குறிப்பு: மேட்டைக் கடப்பதற்குமுன் ஓட்டுநர்கள் வேகத்தைக் குறைப்பதை உறுதிப்படுத்த மேடுகள் அமைக்கப்படுகின்றன. இது பாதுகாப்பு ஏற்பாடாகும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 61)*





**203. படத்தில் காணப்படும் சாயமடிக்கப்பட்ட சதுக்கம் மஞ்சள் பெட்டி சந்திப்பாகும். இதில்**



(A) ஓட்டுநர்கள் ஓட்டிச்சென்று நிறுத்தக்கூடாது.
(B) ஓட்டுநர்கள் தங்கள் பாதையில் தடங்கல் நீங்கும்வரை காத்திருக்கலாம்.
(C) பச்சை விளக்கு எரியும்போது மட்டுமே ஓட்டுநர்கள் போகலாம்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 62)*

**204. படத்தில் காணப்படும் பெட்டி**



(A) பேருந்து நிறுத்தம்.
(B) காத்திருக்கக்கூடாத பகுதி.
(C) மஞ்சள் பெட்டி சந்திப்பு.

விடை: (C). *குறிப்பு: நெரிசலாக இருக்கும்போது கிளைச் சாலையிலிருந்து பெரிய சாலைக்கு வாகனங்கள் திரும்புவதற்கு வசதியாக ஒரே ஒரு தடத்தில் மட்டும் இந்த மஞ்சள் பெட்டி அடையாளம் காணப்படுகிறது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 62)*

**205. இந்தப் படம் காட்டுவது**



(A) எதிரில் ஒருவழிச் சாலை.
(B) சாலை ஒரே தடமாக இணைகிறது.
(C) எதிரில் வலம் மற்றும் இடப்பக்கத் திருப்பங்கள்.

விடை: (B). *குறிப்பு: வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒரே தடத்திற்குள் இணையவேண்டும் என்பதை அம்புக்குறி காட்டுகிறது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 62)*

**206. இந்தக் குறியைப் பார்த்தால்,**



(A) நீங்கள் நேராக மட்டுமே செல்லவேண்டும்.
(B) நீங்கள் நேராகச் செல்ல பரிந்துரைக்கப்படுகிறது.
(C) எந்த நேரத்திலும் நேராகச் செல்லும் உரிமை உங்களுக்கு உண்டு.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 62)*


**207. இந்தச் சாலைக் குறி எதனைக் குறிக்கிறது**



(A) நீங்கள் எந்நேரமும் இடப்பக்கம் செல்லவேண்டும்.
(B) நீங்கள் இடப்பக்கம் திரும்பவேண்டும்.
(C) நீங்கள் தேவையானால் நேராகச் செல்லலாம் அல்லது இடப்பக்கம் திரும்பலாம்.

விடை: (B). *குறிப்பு: வலப்பக்கம் காட்டும் அம்புக்குறி தென்பட்டால் நீங்கள் வலப்பக்கம் மட்டுமே திரும்பவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 62)*

**208. இந்த அம்புக்குறிகள் என்ன சொல்கின்றன?**



(A) நீங்கள் நேராகச் செல்கையில் வலப்பக்கமாக இருக்கவேண்டும்.
(B) நீங்கள் வலப்பக்கம் திரும்பி, பின்னால் வரும் வாகனங்கள் நேராகச் செல்ல வழிவிடலாம்.
(C) நீங்கள் வலப்பக்கம் திரும்பலாம் அல்லது நேராகச் செல்லலாம்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 62)*

**209. ஒன்று வலப்பக்கமும் மற்றொன்று இடப்பக்கமும் காட்டும் இந்த அம்புக்குறிகள் எதனைக் குறிக்கின்றன?**



(A) எதிரில் பிளவுபடும் போக்குவரத்து.
(B) நீங்கள் சாலையின் வலப்பக்கம் அல்லது இடப்பக்கமாகச் செல்லவேண்டும்.
(C) நீங்கள் வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் திரும்பவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 62)*

**210. இந்தச் சாலை அடையாளக் குறியின் விளக்கம்**



(A) நீங்கள் நேராகச் செல்லலாம், வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் திரும்பலாம்.
(B) நேராகச் செல்கையில் உங்களது வலப்பக்கமும் இடப்பக்கமும் போக்குவரத்தைக் கவனிக்கவேண்டும்.
(C) நீங்கள் நேராகச் செல்லலாம், உங்களுக்குப் பின்னாலுள்ள வாகனங்கள் இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் திரும்பவேண்டும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 62)*





**211. மஞ்சள் விளக்கு விடுக்கும் எச்சரிக்கை என்ன?**



(A) வேகத்தைக் கூட்டத் தயாராகவும்.
(B) வேகத்தைக் குறைத்து வாகனத்தை நிறுத்தத் தயாராகவும்.
(C) விளக்குகள் பழுதடைந்திருப்பதால் வேகத்தைக் குறைக்கவும்.

விடை: (B). *குறிப்பு: மஞ்சள் விளக்கு விட்டுவிட்டு எரிந்தால், விளக்குகள் பழுதடைந்திருப்பதாக அர்த்தம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 64)*

**212. விட்டுவிட்டு எரியும் பச்சை சமிக்ஞை விளக்கு எதனைக் குறிக்கிறது?**



(A) நீங்கள் வேகத்தைக் கூட்டி, விரைவாக வலப்பக்கம் திரும்பவேண்டும்.
(B) நிறுத்தக்கோட்டை இன்னும் தாண்டாவிட்டால், நீங்கள் நிறுத்தியாகவேண்டும்.
(C) நீங்கள் இருக்கும் இடத்தில் நிறுத்தவேண்டும்.

விடை: (B). *குறிப்பு: விளக்குகள் மாறப்போவதை விட்டுவிட்டு எரியும் பச்சை சமிக்ஞை விளக்கு குறிக்கிறது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 64)*

**213. படத்திலுள்ள விளக்குகள் எதைக் குறிக்கின்றன?**




(A) அனைத்தும் நிற்கவேண்டும், தீயணைப்பு வாகனங்கள் தவிர்த்து.
(B) அனைத்தும் நிற்கவேண்டும், பெரிய வாகனங்கள் தவிர்த்து.
(C) அனைத்தும் நிற்கவேண்டும், பொதுப் போக்குவரத்து பேருந்துகள் தவிர்த்து.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 64)*

**214. மஞ்சள் அம்புக்குறி தென்பட்டால், அதன் அர்த்தம்**



(A) வலப்பக்கம் திரும்பும் வாகனங்கள் நிற்கவேண்டும், பாதுகாப்பாக நிறுத்த முடியாத அளவுக்கு நிறுத்தக் கோட்டிற்கு மிக அருகில் இருந்தால் மட்டுமே விதிவிலக்கு.
(B) வலப்பக்கம் திரும்பும் வாகனங்கள் வேகமாகத் திரும்பவேண்டும்.
(C) வாகனங்கள் வலப்பக்கம் திரும்பலாம். விளக்குகள் பழுதடைந்துள்ளன.

விடை: (A). *குறிப்பு: விட்டுவிட்டு எரியும் மஞ்சள் விளக்கு மட்டுமே விளக்குகள் பழுதடைந்திருப்பதைக் குறிக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 65)*

**215. போக்குவரத்து விளக்குகளும் குறிகளும் இவ்வாறு ஒருங்கே அமைந்திருப்பதை எங்கு காணலாம்?**




(A) வளைவில் அல்லது ஓட்டுநர்களின் பார்வையில் எளிதில் படாத இடங்களில் போக்குவரத்து விளக்குகள் அமைந்திருக்கும் இடங்களில்.
(B) அடிக்கடி பழுதடையும் போக்குவரத்து விளக்குகள் அமைந்திருக்கும் இடங்களில்.
(C) அடிக்கடி விபத்துகள் நிகழும் இடங்களில்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 65)*

**216. பச்சை விளக்கும் சிவப்பு அம்புக்குறியும் தென்பட்டால், அதன் அர்த்தம்**



(A) வலப்பக்கம் திரும்பும் ஓட்டுநர்கள் கவனமாகச் செல்லவேண்டும்.
(B) வலப்பக்கம் திரும்பும் ஓட்டுநர்கள் நிற்கவேண்டும்.
(C) நேராக அல்லது வலப்பக்கம் திரும்பும் ஓட்டுநர்கள் செல்லலாம்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 65)*

**217. பச்சை விளக்கும் மஞ்சள் அம்புக்குறியும் தென்பட்டால், அதன் அர்த்தம்**



(A) அனைத்து ஓட்டுநர்களும் கவனமாகச் செல்லலாம்.
(B) விளக்குகள் பழுதடைந்திருப்பதால் அனைத்து ஓட்டுநர்களும் நிற்கவேண்டும்.
(C) நேராகச் செல்வோர் தவிர்த்து, மற்ற அனைத்து ஓட்டுநர்களும் நிறுத்தக் கோட்டிற்கு முன்னால் நிற்கவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 65)*

**218. இதுபோன்ற கையடக்கமான மஞ்சள் நிற சுழல் விளக்குகளைக் காண்கிறீர்கள். இவை**



(A) விபத்து குறித்து உங்களை எச்சரிக்கும் போக்குவரத்து போலிஸ் சமிக்ஞைகள்.
(B) சாலைப் பணிகள், இதர தடங்கல்கள் போன்ற அபாயங்கள் குறித்து எச்சரிக்கின்றன.
(C) பழுதடைந்த போக்குவரத்து விளக்குகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுபவை.

விடை: (B). *குறிப்பு: இழுவை லாரிகள் மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட தடங்களை அடைத்துக் கொண்டிருக்கும் மிக அகலமான வாகனங்கள் போன்ற அபாயங்களைக் குறிக்க இதுபோன்ற ஒன்று அல்லது பல விளக்குகள் பயன்படுத்தப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 66)*





**219. படத்தில் இருப்பது**



(A) மற்றொரு வகை மஞ்சள் நிற சுழல் விளக்கு.
(B) போக்குவரத்து விளக்கு சமிக்ஞையாகப் பயன்படும் கையடக்கமான மஞ்சள் நிற விளக்கு.
(C) வேலைத்தளங்கள் மற்றும் சாலை திசைதிருப்பங்கள் ஆகியவற்றை அடையாளம் காட்டப் பயன்படும் விட்டுவிட்டு எரியும் மஞ்சள் நிற வழிகாட்டி விளக்கு.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 66)*

**220. இந்தப் படம் சாலையில் பதிக்கப்பட்ட விளக்குகளை காட்டுகிறது. இவை எங்கு காணப்படுகின்றன**



(A) அனைத்து பாதசாரி கடப்புகள்.
(B) பள்ளிகள் அருகில் பாதசாரி கடப்புகள்.
(C) அந்த சாலையில் போக்குவரத்து திருப்பு கொண்ட பாதசாரி கடப்பு.

விடை: (C). *குறிப்பு: பாதசாரிகள் இருப்பதை அந்த சாலைக்கு திருப்பும் வாகன ஓட்டுநருக்கு பச்சை மனிதன் ஒளி ஒளிரும் போது இவை மினிரும் எச்சரிக்கை. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 66)*

**221. போக்குவரத்து போலிஸ் அதிகாரி காட்டும் சமிக்ஞை என்ன?**



(A) அவருக்கு வலப்பக்கமுள்ள ஓட்டுநர்கள் நிறுத்தவேண்டும், மற்றவர்கள் செல்லலாம்.
(B) அவருக்கு முன்னாலும், பின்னாலும் வலப்பக்கமும் உள்ள ஓட்டுநர்கள் நிறுத்தவேண்டும்.
(C) அவருக்கு வலப்பக்கமுள்ள ஓட்டுநர்கள் மட்டும் செல்லலாம்.

விடை: (B). *குறிப்பு: அவருக்கு இடப்பக்கமுள்ள ஓட்டுநர்கள் செல்லலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 67)*

**222. போக்குவரத்து போலிஸ் அதிகாரி காட்டும் சமிக்ஞை என்ன?**



(A) அனைத்து வாகனங்களும் நிறுத்தவேண்டும்.
(B) அவருக்கு முன்னாலும் பின்னாலும் உள்ள வாகனங்கள் செல்லலாம்.
(C) அவருக்கு முன்னாலும் பின்னாலும் உள்ள வாகனங்கள் நிறுத்தவேண்டும்.

விடை: (C). *குறிப்பு: அவருக்கு வலப்பக்கமும் இடப்பக்கமும் உள்ள வாகனங்கள் செல்லலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 67)*

**223. போக்குவரத்து போலிஸ் அதிகாரி காட்டும் சமிக்ஞை என்ன?**



(A) அனைத்து ஓட்டுநர்களும் கவனமாகச் செல்லவேண்டும்.
(B) அவருக்கு இடப்பக்கமும் வலப்பக்கமும் வரும் ஓட்டுநர்கள் நிறுத்தவேண்டும்.
(C) அனைத்து திசைகளிலும் வரும் ஓட்டுநர்கள் நிறுத்தவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 67)*

**224. போக்குவரத்து போலிஸ் அதிகாரி அனைவருக்கும் காட்டும் சமிக்ஞை என்ன?**



(A) அவருக்கு முன்னால் இருக்கும் மற்றும் வலப்பக்கம் திரும்பக் காத்திருக்கும் வாகனங்கள் தவிர்த்து மற்ற வாகனங்கள் நிறுத்தவேண்டும்.
(B) அவருக்கு முன்னால் வலப்பக்கம் திரும்பும் வாகனங்கள் தவிர்த்து மற்ற வாகனங்கள் செல்லலாம்.
(C) அவருக்கு இடப்பக்கம் இருப்பவை தவிர்த்து மற்ற வாகனங்கள் செல்லலாம்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 68)*

**225. போக்குவரத்து போலிஸ் அதிகாரி காட்டும் சமிக்ஞை என்ன?**



(A) அவருக்கு இடப்பக்கமுள்ள ஓட்டுநர்கள் நிறுத்தவேண்டும், மற்ற அனைத்து ஓட்டுநர்களும் செல்லலாம்.
(B) அவருக்கு முன்னாலும் பின்னாலும் இடப்பக்கமும் உள்ள ஓட்டுநர்கள் நிறுத்தவேண்டும்.
(C அவருக்கு வலப்பக்கமுள்ள ஓட்டுநர்கள் நிறுத்தவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 68)*

**226. போக்குவரத்து போலிஸ் அதிகாரி காட்டும் சமிக்ஞை என்ன?**



(A) அவருக்கு இடப்பக்கமுள்ள வாகனங்கள் நிறுத்தவேண்டும்.
(B) அவரது இடப்பக்கம் அணுகும் வாகனங்கள் செல்லலாம்.
(C) அவருக்கு முன்னாலும் பின்னாலும் அணுகும் வாகனங்கள் நிறுத்தவேண்டும்.

விடை: (C). *குறிப்பு: அவருக்கு வலப்பக்கமுள்ள வாகனங்கள் செல்லலாம், இடப்பக்கமுள்ளவை நிறுத்தத் தயாராகவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 68)*





**227. கார் ஓட்டுநர் தெரிவிப்பது என்ன?**



(A) அவர் இடப்பக்கம் திரும்ப அல்லது நகரவிருக்கிறார்.
(B) அவர் வேகத்தைக் குறைக்கவிருக்கிறார்.
(C) அவர் வேகத்தைக் குறைத்து வலப்பக்கம் திரும்பவிருக்கிறார்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 69)*

**228. ஓட்டுநரின் கை காரின் சன்னலுக்கு வெளியில் இருந்தால்,**



(A) அவர் வேகத்தைக் குறைக்கவிருக்கிறார்.
(B) அவர் வலப்பக்கம் நகர அல்லது திரும்பவிருக்கிறார்.
(C) நீங்கள் அவரை முந்திச்செல்லவேண்டும் என்கிறார்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 69)*

**229. படத்தில் உள்ளபடி ஓட்டுநர் தனது கையை வைத்திருக்கிறார். இது எதைக் குறிக்கிறது?**



(A) நீங்கள் அவரை முந்திச்செல்லவேண்டும் என்கிறார்.
(B) அவர் வேகத்தைக் குறைக்கவிருக்கிறார்.
(C) அவர் நிறுத்தவிருக்கிறார்.

விடை: (C). *(Mighty Minds அடிப்படை விளக்க நூல் - பக்கம் 60)*

**230. ஓட்டுநர் தனது கையை மேலும் கீழும் அசைத்தால்,**



(A) அவர் இடப்பக்கம் நகரவிருக்கிறார்.
(B) அவர் வலப்பக்கம் நகரவிருக்கிறார்.
(C) அவர் வேகத்தைக் குறைக்கவிருக்கிறார்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 69)*

**231. மோட்டார் சைக்கிளோட்டி தனது இடது கையை நீட்டுவது எதற்காக?**



(A) அவர் இடப்பக்கம் நகர அல்லது திரும்பப்போவதாகத் தெரிவிக்கிறார்.
(B) அவர் நிறுத்துவதற்காக வேகத்தைக் குறைக்கிறார்.
(C) நீங்கள் இடப்பக்கமாக அவரை முந்திச்செல்லவேண்டும் என்கிறார்.

விடை: (A). *குறிப்பு: அவரது கை வலப்பக்கம் நீட்டியிருந்தால், அவர் வலப்பக்கம் நகர அல்லது திரும்பப்போவதாகப் பொருள்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 69)*

**232. ஓட்டுநர் தெரிவிப்பது என்ன?**



(A) அவர் வேகத்தைக் குறைக்கவிருக்கிறார்.
(B) அவர் நிறுத்தப் போகிறார்.
(C) நீங்கள் முந்திச்செல்லவேண்டும் என்கிறார்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 69)*

**233. படத்தில், மோட்டார் சைக்கிளோட்டி என்ன செய்யவிருக்கிறார்?**



(A) இடப்பக்கம் நகர அல்லது திரும்பப் போகிறார்.
(B) சாலையின் ஓரத்திற்கு நகரப் போகிறார்.
(C) வேகத்தைக் குறைக்கப் போகிறார்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 69)*

**234. இருவழிச் சாலையில் செல்லும்போது உங்கள் வாகனம் எந்த நிலையில் இருக்கவேண்டும்?**




(A) நிலை 1.
(B) நிலை 2.
(C) நிலை 3.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 70)*






**235. இருவழிச் சாலையின் நடுக்கோட்டில் நீங்கள் எப்போது ஓட்டலாம்?**

(A) முன்னாலுள்ள வாகனம் உங்கள் பார்வையை மறைக்கும்போது.
(B) தெருவின் வேக வரம்புவரை நீங்கள் வேகத்தைக் கூட்ட விரும்பும்போது.
(C) உங்கள் பயணப் பாதை மறைக்கப்பட்டு, தெரு குறுகலாக இருக்கும்போது.

விடை: (C). *குறிப்பு: பாதுகாப்பான நிலையில் மட்டுமே நீங்கள் நடுக்கோட்டைத் தாண்டிச் செல்லவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 70)*

**236. படங்கள் 1 மற்றும் 2ல், உங்கள் வாகனம் எங்கிருக்கவேண்டும் என்பதைக் குறிப்பிடுக.**




*படம் A* *படம் B*

(A) படம் 1ல் நிலை 1, படம் 2ல் நிலை 4.
(B) படம் 1ல் நிலை 2, படம் 2ல் நிலை 5.
(C) படம் 1ல் நிலை 3, படம் 2ல் நிலை 6.

விடை: (C). *குறிப்பு: வளைவில், மேல்நோக்கிய மேட்டில் அல்லது எதிரிலுள்ள சாலை தெளிவாகத் தெரியாத மற்ற இடங்களில் நடுக்கோட்டைத் தாண்டிச் செல்வது பாதுகாப்பல்ல. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 70)*

**237. சாலையை உபயோகிக்கும் மற்றவர்களுக்குப் போதிய சமிக்ஞை காட்டாமல் திடீரென தடம் மாறுவது ஆபத்தான பழக்கம், ஏனெனில்,**

(A) பந்தயக் கார் ஓட்டுநர்களுக்கு மட்டுமே இந்த உத்தி கற்றுத் தரப்படுகிறது.
(B) உங்களுக்கும் சாலையை உபயோகிக்கும் மற்றவர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்துகிறது.
(C) குறைந்த வேகத்தில் செல்லும் ஓட்டுநர்களுக்கு அசௌகரியத்தைத் தருகிறது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 70)*

**238. பல தட போக்குவரத்தில், குறைந்த வேகத்தில் செல்லும் வாகனங்கள்**

(A) தாங்கள் எந்தத் தடத்தில் இருக்கிறோம் என்பதைக் கவனிக்கத் தேவையில்லை.
(B) வலக்கோடித் தடத்தில் இருக்கவேண்டும்.
(C) முந்திச் செல்வதாக இருந்தாலொழிய இடக்கோடித் தடத்தில் இருக்கவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 71)*

**239. நீங்கள் குறைந்த வேகத்தில் செல்கிறீர்கள். எப்போது வலக்கோடி தடத்திற்குள் செல்வீர்கள்?**

(A) இடக்கோடி தடத்தின் போக்குவரத்து உங்களைவிட சற்று குறைந்த வேகத்தில் செல்லும்போது.
(B) நீங்கள் எதிரில் வலப்பக்கம் திரும்பவிருக்கும்போது.
(C) குறைந்த வேகத்தில் தடங்கலின்றி பயணம் செய்ய விரும்பும்போது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 71)*

**240. வலக்கோடி தடத்தில் போக்குவரத்து இல்லை. நீங்கள் எப்போது அதில் செல்வீர்கள்?**

(A) உங்களுக்கு முன்னாலுள்ள வாகனத்தை முந்திச் செல்ல விரும்பும்போது.
(B) வாய்ப்பு கிடைக்கும்போது.
(C) மெதுவாகச் செல்லும் போக்குவரத்தின் அசௌகரியத்தைத் தவிர்க்க விரும்பும்போது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 71)*

**241. நீங்கள் இரு தடச் சாலையில் செல்லும்போது,**

(A) எந்த வேளையிலும் ஏதேனும் ஒரு தடத்தில் ஓட்டலாம்.
(B) வேக வரம்பில் சென்றால் மட்டுமே வெளித் தடத்தில் ஓட்டலாம்.
(C) முந்திச்செல்லும்போது தவிர்த்து, மற்ற வேளைகளில் உள் தடத்தில் ஓட்டவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 71)*

**242. உங்களுக்குப் பாதுகாப்பாகத் தோன்றும்போது சாலையில் எந்த இடத்திலும் நீங்கள் முந்திச்செல்லலாம்.**

(A) இந்த வாசகம் உண்மையானது.
(B) இந்த வாசகம் பொய்யானது.
(C) பருவநிலையைப் பொறுத்தது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 71)*





**243. பாதுகாப்பாக இருப்பதாக உங்களுக்குத் தோன்றினாலும், எப்போது நீங்கள் முந்திச் செல்லக்கூடாது?**

(A) நீங்கள் இரு தடச் சாலையில் செல்லும்போது.
(B) செங்குத்தான மேட்டில் மேல்நோக்கிச் செல்லும்போது.
(C) மருத்துவமனைக்கு அருகில் இருக்கும்போது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 72)*

**244. சாலையோரத்தில் காணப்படும் இந்தக் குறியை நீங்கள் அணுகுகிறீர்கள். இது எதையும் குறிக்கிறது?**



(A) நீங்கள் முந்திச் செல்லக்கூடாது.
(B) நீங்கள் மருத்துவமனைக்கு அருகில் இருப்பதால் எச்சரிக்கை ஒலி ஒலிக்கக்கூடாது.
(C) நீங்கள் முக்கிய சாலையை அணுகுகிறீர்கள்.

விடை: (A). *குறிப்பு: சாலை சந்திப்பு குறித்து இந்தக் குறி எச்சரித்தாலும், முந்திச் செல்லக்கூடாது என்றும் சொல்கிறது. முந்திச் செல்லக்கூடாது என்று பொருள்படும் மற்ற எச்சரிக்கை குறிகளும் உள்ளன. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 72)*

**245. நீங்கள் எப்போது இடப்பக்கமிருந்து முந்திச்செல்லலாம்?**

(A) பல தடம் கொண்ட ஒருவழிச் சாலையில் (இரு தடச் சாலையல்ல) செல்லும்போது.
(B) நெரிசலான சூழ்நிலையில், உங்கள் இடப்பக்கத் தடத்திலுள்ள வாகனங்கள் உங்களைவிட வேகமாகச் செல்லும்போது.
(C) மேற்காணும் (A) மற்றும் (B) இரண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 72)*

**246. எந்தச் சூழலில் வலப்பக்கமிருந்து முந்திச்செல்வது பாதுகாப்பற்றது?**

(A) உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனம், அதற்கு முன்னால் உள்ள வாகனத்தைத் தாண்டிச் செல்லவிருக்கும்போது.
(B) உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனம் இடப்பக்கம் திரும்பவிருக்கும்போது.
(C) உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனத்தின் ஓட்டுநர் வேகத்தைக் குறைக்கப்போவதாகச் சமிக்ஞை காட்டும்போது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 72)*

**247. உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனத்தை நீங்கள் முந்திச்செல்லவிருக்கும்போது அதன் ஓட்டுநர் வேகத்தைக் கூட்டுகிறார். நீங்கள்**

(A) முந்திச்செல்ல முடிவெடுத்து விட்டதால் இன்னும் அதிகமாக வேகத்தைக் கூட்டவேண்டும்.
(B) வேகத்தைக் குறைத்து, தடத்திற்குள் திரும்பச்சென்று முந்திச்செல்லாதிருக்கவேண்டும்.
(C) எச்சரிக்கை ஒலியை ஒலிக்கச்செய்து, நீங்கள் முந்திச்செல்வதாக அவரை எச்சரிக்கவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 72)*

**248. சிங்கப்பூரின் அனைத்து சாலைகளிலும் வேகக் கட்டுப்பாடு**

(A) வேறு விதமாகக் குறிப்பிடப்படாவிடில், மணிக்கு 50 கிலோமீட்டர்.
(B) வேறு விதமாகக் குறிப்பிடப்படாவிடில், மணிக்கு 60 கிலோமீட்டர்.
(C) வேறு விதமாகக் குறிப்பிடப்படாவிடில், மணிக்கு 70 கிலோமீட்டர்.


விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 73)*

**249. சாலை போக்குவரத்தை மட்டுப்படுத்துதல் (ரோட் ஹாக்கிங்) என்பது,**

(A) அதிக வேகத்தில் தடத்திற்குத் தடம் மாறிக்கொண்டே ஓட்டுதல்.
(B) காரணமின்றி மிகக் குறைந்த வேகத்தில் ஓட்டிச்சென்று, போக்குவரத்தைத் தடுப்பதாகும்.
(C) மேடான சாலையில் குறைந்த வேகத்தில் ஓட்டுதல்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 73)*

**250. வாகனம் 1 கட்டுப்பாடற்ற சாலை சந்திப்பில் இடப்பக்கம் திரும்பவிருக்கிறது. வாகனம் 2 நேராகச் செல்லவிருக்கிறது. எந்த வாகனம் வழி விடவேண்டும்?**



(A) வாகனம் 1.
(B) வாகனம் 2.
(C) இரண்டுமில்லை. எந்த வாகனம் முதலில் சந்திப்பை அடைந்தது என்பதைப் பொறுத்தது.

விடை: (A). *குறிப்பு: எப்போதும் உங்கள் வலப்பக்கமுள்ள போக்குவரத்துக்கு வழிவிடவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 74)*






**251. எந்த வாகனம்/வாகனங்கள், முறையே, வழி விடவேண்டும்?**



(A) வாகனம் 2க்கு வாகனம் 1ம், வாகனம் 3க்கு வாகனம் 2ம் வழி விடவேண்டும்.
(B) வாகனம் 1க்கு வாகனம் 2ம், வாகனம் 3க்கு வாகனம் 1ம் வழி விடவேண்டும்.
(C) வாகனம் 1, வாகனம் 2 ஆகியவற்றுக்கு வாகனம் 3 வழி விடவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 74)*

**252. எந்தக் கார்/கார்கள் வழி விடவேண்டும், எந்தக் கார்/கார்கள் செல்லலாம்?**



(A) கார் 3 வழி விடவேண்டும், கார்கள் 1, 2, 4 ஆகியவை எந்த நேரத்திலும் செல்லலாம்.
(B) கார்கள் 1, 2, 3 வழி விடவேண்டும், கார் 4 செல்லலாம்.
(C) கார் 3 மற்ற அனைத்திற்கும் வழி விடவேண்டும். கார் 4க்குப் பிறகு கார் 1 செல்லலாம்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 74)*


**253. வலப்பக்கம் திரும்பியபிறகு நீங்கள் எந்த நிலையில் இருக்கவேண்டும்?**




(A) நிலை 1.
(B) நிலை 2.
(C) நிலை 3.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 75)*


**254.** **நீங்கள் பல தட ஒருவழிச் சாலைக்குள் திரும்புகிறீர்கள். திரும்பியபிறகு உங்கள் வாகனம் எந்த நிலையில் இருக்கவேண்டும்?**




(A) நிலை 1.
(B) நிலை 2.
(C) நிலை 3.

விடை: (C). *குறிப்பு: பிற்பாடு பாதுகாப்பான சூழ்நிலையில் நீங்கள் மறுபடியும் இடத் தடத்திற்கு மாறலாம். (Mighty Minds அடிப்படை விளக்க நூல் 1 – பக்கம் 69) குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில், திருப்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட காத்திருக்கும் தடங்கள் இருந்தால் நீங்கள் நிலை 1 அல்லது 2ல் இருக்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 75)*

**255.** **இடப்பக்கம் திரும்ப எது சரியான வழி (அல்லது வலப்பக்கம்)?**




(A) பயணம் 1ன் பாதை.
(B) பயணம் 2ன் பாதை.
(C) பயணம் 3ன் பாதை.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 76)*

**256.** **வாகனம் திரும்பும்போதெல்லாம், அதன் பின் சக்கரம்**
(A) சாலை முனையிலிருந்து தள்ளிச் செல்லும்.
(B) சாலை முனைக்கு நெருக்கமாகச் செல்லும்.
(C) முன்சக்கரத்தின் அதே வளைவில் செல்லும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 76)*





**257.** **உங்கள் வாகனத்தின் பின் சக்கரங்கள் சாலை ஓரத்தடுப்பில் ஏறிவிட்டால், நீங்கள் என்ன செய்யவேண்டும்?**
(A) வாகனத்தை ஓரத்தடுப்பிலிருந்து வேறுபக்கம் திருப்பி, தொடர்ந்து ஓட்டிச் செல்லவும்.
(B) வாகனத்தை பின்பக்கமாக ஓட்டி, ஓரத்தடுப்பில் இருந்து இறங்கி, பிறகு தொடர்ந்து ஓட்டிச் செல்லவும்.
(C) வாகனத்தை ஒருபோதும் ஓட்டக்கூடாது. கீழே இறங்கி, வாகனத்தை மெதுவாகச் சாலைக்குள் தள்ளவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 76)*

**258.** **பாதுகாப்பாகத் திரும்புவது எப்படி?**
(A) திரும்புவதற்குமுன் சாலை ஓரத்தடுப்பிலிருந்து வேறுபக்கமாக ஒரு கோணத்தில் ஓட்டவேண்டும்.
(B) வாகனத்தை திரும்புவதற்குமுன் சாலை ஓரத்தடுப்பிலிருந்து நிலைநிறுத்திக் கொள்ளவும்.
(C) திரும்புவதற்குமுன் குறைந்தது 3 மீட்டர் நேராக ஓட்டவேண்டும்.

விடை: (B). *இதன்வழி உங்கள் வாகனத்தைத் திருப்பும்போது வாகனத்தின் பின் சக்கரம் சாலையின் ஓரத்தடத்தில் இடிக்காமல் தடுக்கலாம். வாகனம் திரும்பும் போது, பாதசாரிகள், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுடன் உரசாமல் இருக்கவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 76)*

**259.** **U-வளைவுகள்**
(A) சாலை நடுத்தடுப்பில் இடைவெளி இருந்தால் அனுமதிக்கப்படும்.
(B) மற்ற வாகனங்கள் திரும்புவது உங்களுக்குத் தெரிந்தால் அனுமதிக்கப்படும்.
(C) U-வளைவு குறி இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 77)*

**260.** **எந்த வாகனம் பாதுகாப்பான, முறையான U-வளைவு செய்யவிருக்கிறது?**




(A) வாகனம் 2.
(B) வாகனம் 1.
(C) வாகனங்கள் 1, 2 இரண்டுமே.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 77)*


**261. வட்டச்சுற்று வழியில் வலப்பக்கம் திரும்பிட சரியான நிலையில் இருக்கும் வாகனங்கள் யாவை?**




(A) வாகனங்கள் 1 & 2.
(B) வாகனங்கள் 1 & 3.
(C) வாகனங்கள் 2 & 3.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 78)*

**262. எந்த வாகனம் ஆபத்தான முறையில் ஓட்டப்படுகிறது?**




(A) வாகனம் 1.
(B) வாகனம் 2.
(C) வாகனம் 3.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 78)*

**263. X குறித்த வாகனம் எந்த நிலையில் காத்திருந்து வலதுபுறம் திரும்ப வேண்டும்?**





(A) 1
(B) 2
(C) 3

விடை: (B). *நீங்கள் மஞ்சள் பெட்டியில் காத்திருக்க முடியும் ஆனால் வந்துகொண்டிருக்கும் போக்குவரத்தை திரும்ப காத்திருக்கும்போது தடுக்க கூடாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 79)*





**264. விளக்குகள் பச்சையாக இருக்கின்றன. வாகனம் X வலப்பக்கம் திரும்பவிருக்கிறது. ஓட்டுநர் தனது வாகனத்தை எந்த நிலையில் வைத்திருக்கவேண்டும்.**




(A) அவர் இருக்கவேண்டிய நிலை 1.
(B) அவர் இருக்கவேண்டிய நிலை 2.
(C) அவர் இருக்கவேண்டிய நிலை 3.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 79)*

**265. சாலை சந்திப்பிலிருந்து குறைந்தபட்சம் எந்தத் தொலைவில் உங்கள் வாகனத்தை நீங்கள் நிறுத்தி வைக்கவோ வாகனத்தில் காத்திருக்கவோ அனுமதிக்கப்படும்?**

(A) 3 மீட்டர்.
(B) 6 மீட்டர்.
(C) 9 மீட்டர்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 80)*

**266. பேருந்து நிறுத்தத்தின் இரு நுனிகளில் இருந்தும் எந்தத் தொலைவில் உங்கள் வாகனத்தை நிறுத்தி வைக்கவோ அல்லது வாகனத்தில் காத்திருக்கவோ அனுமதிக்கப்படும்?**

(A) 3 மீட்டர்.
(B) 6 மீட்டர்.
(C) 9 மீட்டர்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 80)*

**267. தீயணைப்பு நீர்க்குழாயில் இருந்து ...... மீட்டர் தொலைவுக்குள் உங்கள் வாகனத்தை நிறுத்தி வைக்கக்கூடாது?**

(A) 3
(B) 6
(C) 9

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 80)*

**268.** **உங்கள் வாகனத்தைக் குறுகிய நேரம் நிறுத்தி வைப்பதாக இருந்தாலும், நீங்கள் எதை உறுதிப்படுத்தவேண்டும்?**

(A) உங்கள் வாகனத்தின் இன்ஜின் நிறுத்தப்பட்டிருப்பதை.
(B) உங்கள் வாகனத்தின் கை பிரேக் இழுத்து மற்றும் இயந்திரத்தை அணைக்க.
(C) உங்கள் வாகனத்தின் அபாய விளக்குகள் எரிவதை.

விடை: (B). *குறிப்பு: கை பிரேக் வாகனத்தை முன்னும் பின்னும் நகருவதை தடுக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 81)*

**269.** **மேல்நோக்கிய சாலையில் வாகனத்தின் கை பிரேக்கை இழுப்பதோடு, நீங்கள்**

(A) உங்கள் வாகனத்தை குறைந்த கியரில் வைக்கவேண்டும்.
(B) அபாய விளக்குகளைப் போடவேண்டும்.
(C) உங்கள் வாகனத்தின் குறி விளக்குகளைப் போடவேண்டும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 81)*

**270.** **இருக்கை வார்களை அணிய வேண்டியவர்கள்**

(A) அனைத்து முன் இருக்கை பயணிகளும் ஓட்டுநர்களும்.
(B) ஓட்டுநர்கள் மட்டும்.
(C) அனைத்து பயணிகளும் ஓட்டுநர்களும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 81)*

**271.** **1.35m உயரத்திற்கு கீழே உள்ள குழந்தைகள்**

(A) எந்தவகை இருக்கை வார்களும் பயன்படுத்தத் தேவையில்லை.
(B) இருக்கை வார் அணிந்த பெரியவர்கள் எப்போதும் பிடித்திருக்கவேண்டும்.
(C) அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாட்டு வார் சாதனங்களைப் பயன்படுத்தவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 81)*





**272.** **ஒரு வாகனத்தில் பயணம் செய்யும் போது, 1.35m உயரத்திற்கு கீழே உள்ள பெரியவர்கள் பயன்படுத்த வெண்டியது**

(A) அனுசரிப்பு இருக்கை வார்கள்.
(B) அனுசரிப்பு இருக்கை வார்கள் அல்லது பூஸ்டர் இருக்கை மெத்தைகள்.
(C) நிலையான இருக்கை வார்கள்.

விடை: (B). *குறிப்பு: அனுசரிப்பு இருக்கை வாரின் தோள் அங்கம் உடல் மேலாக போக வேண்டும் [முகம் அல்லது கழுத்துக்கு குறுக்கே அல்ல] மற்றும் மடி அங்கம் மடியின் குறுக்கே நீட்டி இருக்க வேண்டும் [வயிறின் குறுக்கே அல்ல]. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 81)*

**273.** **வாகனத்தின் "ஹெட்லைட்" மற்றும் "டெயில் லைட்" விளக்குகள் எப்போது எரியவேண்டும்?**

(A) இரவு 7.00 மணிக்குமேல், பிறகு காலை 7.00 மணிக்குமேல்.
(B) இரவு 7.00 மணிக்கும் காலை 7.00 மணிக்கும் இடையில்.
(C) சாலையில் செல்லும் போதெல்லாம்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 82)*

**274.** **எதிர்த்திசை வாகனங்களின் "ஹெட்லைட்" விளக்கொளி**

(A) உங்களை வாகனத்திற்குள் கீழ்நோக்கச் செய்யும்.
(B) தற்காலிகமாகப் பார்வையில் தடங்கல் ஏற்படுத்தும்.
(C) உங்கள் கண்களை மூடச் செய்யும்.

விடை: (B). *குறிப்பு: இந்தத் தற்காலிக நிலையால் உங்களுக்கும், மற்ற வாகனங்களுக்கும் சாலையிலுள்ள நடையர்களுக்கும் ஆபத்து உண்டாகக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 82)*

**275.** **வெளிச்சமான "ஹெட்லைட்" விளக்குகளுடன் எதிர்வரும் போக்குவரத்தைப் பார்த்தால், நீங்கள்**

(A) அவர்களை எச்சரிக்க உங்களது "ஹைபீம்" விளக்குகளைப் போடவேண்டும்.
(B) அவர்களை எச்சரிக்க எச்சரிக்கை ஹாரன் ஒலி ஒலிக்கவேண்டும்.
(C) கண்கள் கூசுவதைத் தவிர்க்க மேல்நோக்கி, போக்குவரத்துக்கு அப்பால், சற்றே இடப்பக்கமாகப் பார்க்கவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 82)*

**276. "ஹைபீம்" விளக்கின் துணையால் நீங்கள்**
(A) சற்று தொலைவாகப் பார்க்க முடியும்.
(B) நீங்கள் அணுகுவதை, குறிப்பாக மிகவும் இருட்டான இடங்களில், மற்ற வாகனங்களுக்கு எச்சரிக்கலாம்.
(C) இரவில் சாலை நிலவரத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 82)*

**277. "ஹைபீம்" விளக்குகளை நீங்கள் எப்போது போடவேண்டும்?**
(A) விளக்கொளி இல்லாத சாலைகளில் மற்ற வாகனங்களைக் கடந்து செல்லும்போது.
(B) உங்கள் ஓட்டுரிமையை மற்ற ஓட்டுநர்களிடம் காட்டுவதற்காக.
(C) விளக்கொளி இல்லாத சாலைகளில் ஓட்டும்போது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 82)*

**278. உங்கள் வாகனத்தின் "ஹைபீம்" விளக்குகளை நீங்கள் எப்போது தாழ்த்தவேண்டும்?**
(A) மற்றொரு வாகனத்தை 200 மீட்டர் தொலைவுக்குள் நீங்கள் அணுகும்போது.
(B) மற்றொரு வாகனத்தை 150 மீட்டர் தொலைவுக்குள் நீங்கள் அணுகும்போது.
(C) மற்றொரு வாகனத்தை 100 மீட்டர் தொலைவுக்குள் நீங்கள் அணுகும்போது.

விடை: (C). *குறிப்பு: நீங்கள் முன்னாலிருந்து (எதிர்த்திசை போக்குவரத்து) அல்லது பின்னால் இருந்து அணுகினாலும், உங்களுக்கு முன்னாலுள்ள வாகனத்தை நெருங்கும்போது, உங்களது "ஹைபீம்" விளக்குகளால் தற்காலிகமாகப் பார்வைத் தடை ஏற்படக்கூடும். உங்களுக்கு முன்னால் உள்ள வாகனத்தைப் பொறுத்தவரை, உங்களது "ஹைபீம்" விளக்குகள் வாகனத்தின் பின்பார்வை கண்ணாடி வழியாகப் பிரதிபலிக்கப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 82)*

**279. உங்கள் வாகனத்தின் "ஹைபீம்" விளக்குகளைப் சில விநாடிகள் போடுவதற்கு உகந்த தருணம் எது?**
(A) வளைவை அல்லது கட்டுப்பாடற்ற சந்திப்பை அணுகும்போது.
(B) உங்கள் ஓட்டுரிமையை மற்ற ஓட்டுநர்களுக்குத் தெரியப்படுத்தும்போது.
(C) சாலையைக் கடப்பது பாதுகாப்பல்ல என நடையர்களை எச்சரிக்கும்போது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 83)*





**280. பாதுகாப்பாக ஓட்டிட, வேறு எந்தச் சூழ்நிலையில் உங்கள் "ஹைபீம்" விளக்குகளைப் சில விநாடிகள் போடலாம்**
(A) சரிவுப் பாதையில் ஓட்டும்போது.
(B) ஒரு சாய்வு அல்லது மேட்டுப்பாதையில் ஓட்டும் போது.
(C) இரவில் குறுகிய சாலைகளில் முந்திச் செல்லும்போது.

விடை: (B). *குறிப்பு: இரவில் மேட்டுப்பாதையில் செல்லும் போது "ஹைபீம்" விளக்குகளை சில வினாடிகள் போடுவது முக்கிய உதவியாக அமையும். ஏனெனில், மற்ற வாகனங்களின் பார்வையில் நீங்கள் தென்படுவதற்கு முன்பே நீங்கள் வருவதை அவரிகளுக்கு எச்சரிக்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 83)*

**281. இரவு நேரம் தவிர்த்து, வேறு எப்போது "ஹெட்லைட்" விளக்குகளைப் போடலாம்?**
(A) வாகன ஊர்வலத்தில் ஓட்டிச் செல்லும்போது.
(B) மிக வேகமாக ஓட்டும்போது.
(C) மோசமான பருவநிலையில் ஓட்டும்போது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 83)*

**282. ஒளியில்லாத இடங்களில் வாகனத்தை நிறுத்தி வைக்கும்போது பக்கவாட்டு அல்லது வாகனம் நிறுத்திவைப்பு விளக்குகளை எரியவிடுவது ஏன் நல்லது?**
(A) உங்கள் காரை சட்டவிரோதமாக நிறுத்தி வைக்கவில்லை என்பதை போக்குவரத்து போலிசாருக்குக் காட்டும்.
(B) சாலையைப் பயன்படுத்தும் மற்றவர்களுக்கு உங்கள் வாகனம் தெரிவதை இது உறுதிப்படுத்தும்.
(C) மோட்டார் வாகனத் திருட்டைத் தடுக்கும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 83)*

**283. ஒளியில்லாத இடங்களில் ஓட்டும்போது வெளிப் பார்வையைப் பெரிதும் குறைப்பது எது?**
(A) "ஹைபீம் ஹெட்லைட்" விளக்குகள் கார் உற்பத்தியாளர் பரிந்துரைத்ததைவிட உயர்த்தப்பட்டிருந்தால்.
(B) உங்கள் "ஹெட்லைட்" விளக்குகளில் ஒன்று பழுதடைந்திருந்தால்.
(C) உங்கள் வாகனத்தின் உள் (கெபின்) விளக்கு எரிந்து கொண்டிருந்தால்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 83)*

**284. சாலை வேகக் கட்டுப்பாடுளை தவிர்.**

(A) குறிப்பிட்ட சிலவகை வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாடு உள்ளது.
(B) நகர்ப்பகுதி வேகக் கட்டுப்பாடு உள்ளது.
(C) பள்ளி வட்டார வேகக் கட்டுப்பாடு உள்ளது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 83)*

**285. இலகுரக சரக்கு வாகனம்**

(A) தொழிலாளர்களை ஏற்றிச் செல்லும்போது, மணிக்கு 60 கிலோமீட்டர் வேக வரம்புக்கு உட்படும்.
(B) வாகனத்தின் வேகக் கட்டுப்பாட்டுச் சாதனம் வகுக்கும் வேக வரம்புக்கு உட்படும்.
(C) எந்தச் சாலையில் பயணம் சென்றாலும் மணிக்கு 60 கிலோமீட்டர் வேக வரம்புக்கு உட்படும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 83)*

**286. மதுபானம்**

(A) உங்கள் கவனத்தைக் குலைக்கும்.
(B) சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படும் ஆற்றலையும் மதிப்பீட்டையும் குலைக்கும்.
(C) (A) மற்றும் (B) இரண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 84)*

**287. ஓட்டுநரின் இரத்தத்தில் மதுபானக் கலப்புக்கான சட்டபூர்வக் கட்டுப்பாடு**

(A) 100 மில்லிலிட்டர் இரத்தத்தில் 35 மைக்ரோகிராம் மது.
(B) 100 மில்லிலிட்டர் இரத்தத்தில் 80 மில்லிகிராம் மது.
(C) 100 மில்லிலிட்டர் இரத்தத்தில் 80 மைக்ரோகிராம் மது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 84)*

**288. உங்கள் சுவாசப் பரிசோதனையின் முடிவு எதுவாக இருந்தால் குடிபோதையில் வாகனம் ஓட்டியதாகக் குற்றம் சாட்டப்படும்?**

(A) 100 மில்லிலிட்டர் சுவாசத்தில் 35 மைக்ரோகிராம் மது.
(B) 100 மில்லிலிட்டர் சுவாசத்தில் 80 மைக்ரோகிராம் மது.
(C) 100 மில்லிலிட்டர் சுவாசத்தில் 80 மில்லிகிராம் மது.

விடை: (A). *குறிப்பு: குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவது மிகவும் மோசமான குற்றமாகும். முதல்முறை குற்றவாளிக்கு $1000 முதல் $5,000 வரை அபராதம் அல்லது 6 மாதம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். மேலும், குறைந்தது 16 மாதங்களுக்கு வாகனம் ஓட்டத் தடையும் விதிக்கப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 84)*





**289. நீங்கள் வாகனம் ஓட்டும்போது கைத்தொலைபேசியில் அவசர அழைப்பை எதிர்பார்க்கிறீர்கள். அழைப்பு வந்தால், நீங்கள்**

(A) உடனடியாக நின்று, பதிலளிக்கவேண்டும்.
(B) கைகள் தேவைப்படாத மைக்ரோபோன் இருந்தால் பதிலளிக்கவேண்டும்.
(C) வாகனம் ஓட்டுவதே முக்கியம் என்பதால், அழைப்பைப் புறக்கணிக்கவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 85)*

**290. கைத்தொலைபேசி அழைப்புக்குப் பதிலளிக்க உங்களிடம் கைகள் தேவைப்படாத மைக்ரோபோன் இல்லை. சாலையில் செல்லும்போது அழைப்பு வருகிறது. நீங்கள் என்ன செய்யவேண்டும்?**

(A) அழைப்பைப் புறக்கணிக்கவும். சாலையில் ஒருபோதும் பதிலளிக்கக்கூடாது.
(B) சாலையோரத்தில் பாதுகாப்பாக நிறுத்தவும். அபாய விளக்குகளைப் போட்டுவிட்டு, அழைப்புக்குப் பதிலளிக்கவும்.
(C) சாலையின் மெதுத் தடத்திற்கு மாறி, அழைப்புக்குப் பதிலளிக்கவும்.

விடை: (B). *குறிப்பு: விரைவுச்சாலைகளில் வாகனத்தை நிறுத்தக்கூடாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 85)*

**291. ஓட்டும்போது கைத்தொலைபேசி பயன்படுத்துவதற்கான தண்டனை**

(A) $5,000 வரை அபராதம் அல்லது ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனை.
(B) $3,000 வரை அபராதம் அல்லது 6 மாதச் சிறைத் தண்டனை அல்லது இரண்டும்.
(C) $1,000 வரை அபராதம் அல்லது 6 மாதம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது இரண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 85)*

**292. வாகனம் __________ உயரத்திற்கு அதிகமாக இருந்தால் போலீஸ் துணை ஓட்டும்போது அவசியம்.**

(A) 4m
(B) 4.5m
(C) 4.9m

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 85)*

**293.** **எப்பொழுது நீங்கள் இருக்கை வார் அணிந்து, பின்பார்வை மற்றும் பக்கவாட்டு கண்ணாடிகளைச் சரிபார்க்க வேண்டும்.**

(A) புறப்பட்டுச் சென்றபிறகு.
(B) புறப்பட்டுச் செல்லும்போது.
(C) புறப்பட்டுச் செல்வதற்குமுன்.

விடை: (C). *குறிப்பு: வாகனம் நகரும்போது ஒருபோதும் இருக்கை வார் அணியவோ கண்ணாடிகளைச் சரிசெய்யவோ முயற்சிக்கக் கூடாது. உங்கள் வாகனத்தைப் பாதுகாப்பாகவும் முறையாகவும் ஓட்டுவதிலிருந்து உங்கள் கவனம் திசை திரும்பிவிடக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 86)*

**294.** **நீங்கள் சட்டப்படி பொதுச் சாலையில் வாகனத்தை நிறுத்தி வைக்கிறீர்கள். இருக்கை வார் அணிந்து, கண்ணாடிகளைச் சரிபார்த்தாகிவிட்டது. புறப்பட்டுச் செல்வதற்குமுன் நீங்கள் என்ன செய்யவேண்டும்?**

(A) புறப்பட்டுச் செல்லும் எண்ணத்தை சமிக்ஞையில் காட்டவேண்டும்.
(B) உங்களைச் சுற்றி நடையர்கள் அல்லது இதர போக்குவரத்து உள்ளதா என கவனிக்கவேண்டும்.
(C) (A) மற்றும் (B) இரண்டும் செய்யவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 86)*

**295.** **ஓட்டும்போது, எந்த இடைவெளியில் உங்கள் கண்ணாடிகளைப் பார்ப்பதைப் பழக்கமாக்கிக் கொள்ளவேண்டும்?**

(A) அவ்வப்போது.
(B) ஒவ்வொரு 5 முதல் 10 விநாடிகளில்.
(C) நிமிடத்திற்கு ஒருமுறை போல.

விடை: (B). *குறிப்பு: கண்ணாடிகளை அடிக்கடி பார்ப்பதால் சாலையில் நடப்பதை நீங்கள் தெரிந்துகொள்ள முடியும். நடப்பது தெரிந்தால், தேவையானபோது தகுந்த செயல்களை மேற்கொள்ள நேரமும் இடமும் கிடைக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 86)*





**296.** **ஒரு வாகனத்தின் "பார்வையில் தெரியாத இடங்கள்" எங்குள்ளன? அவ்விடங்கள்**

(A) வாகனத்தின் ஓட்டுநர் இருக்கையில் இருக்கும்போது உங்களால் பார்க்கமுடியாத வாகனத்தின் இருபக்கமும் (இடமும் வலமும்) உள்ளன.
(C) வாகனத்தின் பக்கவாட்டு கண்ணாடிகளிலும் பின் பார்வை கண்ணாடியிலும் தெரியாமல் வாகனத்தின் இருபக்கமும் (இடமும் வலமும்) உள்ளன.
(C) வாகனத்தின் பின்பார்வைக் கண்ணாடியில் தெரியாமல் வாகனத்தின் இருபக்கமும் (இடமும் வலமும்) உள்ளன.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 86)*

**297.** **பார்வையில் தெரியாத இடங்களை (ப்லைன்ட் ஸ்பாட்ஸ்) சமாளிக்க, நீங்கள்**

(A) தலையைத் திருப்பிப் பார்க்கவேண்டும்.
(B) மற்ற வாகன பிரயாணிகளிடம் கேட்கவும்.
(C) "சென்ஸர்" எனும் கருவிகளை பக்கவாட்டுகளில் பொருத்தவும்.

விடை: (A). *குறிப்பு: பார்வையில் படாத இடங்களைப் பார்க்க வலது மற்றும் இடது தோளுக்குப் பின்னால் திரும்பிப் பார்க்கவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 87)*

**298.** **உங்கள் எண்ணத்தைத் தெரிவிக்க சரியான சமிக்ஞைகள் காட்டுவது மட்டும் போதாது, நீங்கள்**

(A) மற்ற ஓட்டுநர்கள் ஒத்துழைக்க நேரம் தரவேண்டும்.
(B) உங்கள் எச்சரிக்கை ஒலியை ஒலிக்கவேண்டும்.
(C) கை சமிக்ஞைகள் காட்டவேண்டும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 87)*

**299.** **வேகக் கட்டுப்பாட்டுக்குக் குறைவான வேகத்தில் ஓட்டுவது எப்போது விவேகமானது?**

(A) உங்கள் காரின் சமிக்ஞை விளக்குகள் செயல்படாதபோது.
(B) மோசமான பருவநிலையில் பாதை சரியாகத் தெரியாதபோது.
(C) விரைவுச்சாலைகளில் பயணம் செல்லும்போது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 87)*

**300. நெருங்கிப் பின்தொடர்தல் (டெயில்கெடிங்) என்றால்**

(C) பூட்டை திறந்து கொண்டு உங்கள் வாகனத்தை ஓட்டுவது.

(B) இன்னொரு வாகனத்திற்குப் பின்னால் வெகு அருகில் செல்லுதல்.

(C) தடத்துக்குத் தடம் மாறிக் கொண்டே இருப்பது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 88)*

**301. நெருங்கிப் பின்தொடர்தல் ஆபத்தானது, ஏனெனில்**

(A) நீங்கள் நெருங்கிப் பின்தொடரும் வாகனம் திடீரென நின்றால், அவ்வாகனத்தின்மீது நீங்கள் மோதிவிடுவீர்கள்.

(B) அடிக்கடி பிரேக் போடுவதால் உங்கள் வாகனத்தின் பிரேக் திடீரென பழுதாகிவிடும்.

(C) உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனத்தின் ஓட்டுநர் அனுபவமற்றவராக இருக்கக்கூடும்.

விடை: (A). *குறிப்பு: நீங்கள் நெருங்கிப் பின்தொடரும் வாகனத்தின் ஓட்டுநர் பதற்றமடைந்து, கவனம் குலைந்து, விபத்து நேரக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 88)*

**302. உங்களைச் சுற்றியுள்ள வாகனங்கள் கிட்டத்தட்ட ஒரே வேகத்தில் சென்று கொண்டிருந்தால், நீங்கள்**

(A) வேகத்தைக் கூட்டி, அங்கிருந்து வெளியேற தடத்துக்குத் தடம் மாறவேண்டும்.

(B) மற்றவர்களை வழிவிடச் செய்ய எச்சரிக்கை ஒலியை ஒலிக்கவேண்டும்.

(C) அதே வேகத்தில் ஓட்டவேண்டும்.

விடை: (C). *குறிப்பு: தனிப்பட்ட வாகனங்கள் கிட்டத்தட்ட ஒரே வேகத்தில் செல்வதை சரளமான போக்குவரத்து என்போம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 88)*

**303. உங்களை மற்ற ஓட்டுநர் நெருங்கி பின்தொடர்தல் (டெயில்கெடெட்) என்றால்,**

(A) நீங்கள் நிச்சயமாக மிகவும் மெதுவாக ஓட்டுகிறீர்கள்.

(B) நீங்கள் பெரும்பாலும் முந்தி செல்லும் விரைவுதடத்தில் மெதுவாக ஓட்டி தடை ஏற்படுத்துகிறீர்கள்.

(C) 'டெயில்கெடெர்' ஓட்டுநர் பெரும்பாலும் ஒரு அவசரத் தேவைக்கு செல்கிறார்.

விடை: (B). *குறிப்பு: ஓட்டுநர்கள் சாலை போக்குவரத்தை மட்டுப்படுத்துவதால், நெருங்கிப் பின்தொடர்தல் ஏற்படுகிறது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 88)*





**304. நீங்கள் நெருங்கிப் பின்தொடரப்பட்டால், நீங்கள்**

(A) வேகத்தைக் கூட்டவேண்டும்.

(B) உடனடியாகப் பிரேக் போடவேண்டும்.

(C) தடம் மாறவேண்டும்.

விடை: *(C). குறிப்பு: தடம் மாறுங்கள் அல்லது உங்களைத் தாண்டிச் செல்லுமாறு பின்னாலுள்ள வாகனத்திற்குச் சமிக்ஞை காட்டுங்கள். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 88)*

**305. உங்கள் வேகம் மணிக்கு 60 கிலோமீட்டராக இருந்தால், உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனத்திற்கும் உங்களுக்கும் இடையில் என்ன இடைவெளி விடவேண்டும்?**

(A) மூன்றரை கார் நீள இடைவெளி.

(B) நான்கு கார் நீள இடைவெளி.

(C) நாலரை கார் நீள இடைவெளி.

விடை: (B). *குறிப்பு: உங்கள் வேகத்தின் ஒவ்வொரு 16 கி.மீ/மணி வேகத்திற்கும் குறைந்தது ஒரு கார் நீளம் இடைவெளி விடுவது எளிய வழிகாட்டி. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 88)*

**306. ஒன்று மற்றதன் பின்னால் செல்லும் இரண்டு வாகனங்களுக்கு இடையில் பாதுகாப்பான இடைவெளியை உறுதிப்படுத்தும் மற்றொரு வழிகாட்டி**

(A) இரண்டு-விநாடி விதிமுறை.

(B) இரண்டு-விநாடி வேக விதிமுறை.

(C) இரண்டு-விநாடி வேக-தொலைவு விதிமுறை.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 89)*

**307. இரண்டு-விநாடி விதிமுறை என்பது**

(A) குறிப்பிட்ட வேகத்தில் இரண்டு விநாடிகளில் உங்கள் வாகனம் செல்லக்கூடிய பாதுகாப்பான தூரமாகும்.

(B) இரண்டு விநாடிகளில் இரு வாகனங்களின் வேகத்தால் நிர்ணயிக்கப்படும் அவற்றுக்கு இடையிலான பாதுகாப்பான தூரமாகும்.

(C) முன்னாலுள்ள வாகனத்திற்குப் பின்னால் வரும் உங்கள் வாகனத்தின் வேகத்தின் அடிப்படையில் 2 விநாடிகளில் நிர்ணயிக்கப்படும் பாதுகாப்பான தூரத்தை சாலையின் ஒரு குறியை வைத்து கணிப்பதாகும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 89)*

**308. உங்களுக்கு முன்னாலுள்ள வாகனத்தின் பிரேக் விளக்குகள் திடீரென எரிந்தால், நீங்கள்**
(A) பிரேக் மிதிகட்டையை சடாரென அழுத்தவேண்டும்.
(B) உடனடியாகத் தாண்டிச் செல்லவேண்டும்.
(C) உடனடியாக வேகத்தைக் குறைத்து, கவனமாகச் செல்லவேண்டும்.

விடை: *(C).குறிப்பு: எப்போதும் முன்னாலுள்ள வாகனத்திலிருந்து நல்ல தொலைவைக் கட்டிக்காக்கவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 89)*

**309. எந்த நிலையில் நீங்கள் பாதுகாப்பான தொலைவில் பின்தொடர்வதாகக் கருதப்படும்?**
(A) முன்னாலுள்ள வாகனத்தின் எண் தகடை உங்களால் படிக்க முடியாத நிலையில்.
(B) இரண்டு விநாடி விதிமுறை சரியான முறையில் பயன்படுத்தப்படும் நிலையில்.
(C) உங்கள் வேகத்தின் ஒவ்வொரு 16 கிலோமீட்டருக்கும் இரண்டு கார் நீளத் தொலைவு இருக்கும் நிலையில்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 89)*

**310. நீங்கள் மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில் சென்றால், உங்கள் வாகனத்திற்கும் முன்னாலுள்ள வாகனத்திற்கும் இடையில் இருக்கவேண்டிய தொலைவு என்ன?**
(A) மூன்று கார் நீளம்.
(B) நான்கு கார் நீளம்.
(C) ஐந்து கார் நீளம்.

*விடை: (A). குறிப்பு: வேகத்தின் ஒவ்வொரு 16 கிலோமீட்டருக்கும், உங்கள் வாகனத்திற்கும் முன்னாலுள்ள வாகனத்திற்கும் இடையில் ஒரு கார் நீளத்தை நிலைநாட்டவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 88)*

**311. முன்னாலுள்ள வாகனம் ஓர் அடையாளப் பொருளைக் கடக்கும் நேரத்திற்கும் நீங்கள் அதைக் கடக்கும் நேரத்திற்கும் இடையில் எத்தனை விநாடிகள் இருக்கவேண்டும்?**
(A) குறைந்தது இரண்டு விநாடிகள்
(B) ஐந்து விநாடிகள்
(C) நேர வரையறை கிடையாது, சூழ்நிலையைப் பொறுத்தது.

*விடை: (A). குறிப்பு: முன்னாலுள்ள வாகனத்தை நீங்கள் பாதுகாப்பான தொலைவில் பின்தொடர்கிறீர்கள் என்பதற்கு இரண்டு விநாடி விதிமுறை நம்பகமான குறியீடு. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 89)*





**312. எந்த வாகனத்திற்கு இரண்டு விநாடி விதிமுறை பொருந்தும்?**
(A) ஒரே வேகத்தில் செல்லும் வாகனங்களுக்கு மட்டும்.
(B) எந்த வேகத்திலும் செல்லும் வாகனங்களுக்கும்.
(C) மணிக்கு 60 கிலோமீட்டருக்கும் அதிக வேகத்தில் செல்லும் வாகனங்களுக்கு.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 89)*

**313. உங்களுக்கும் முன்னாலுள்ள வாகனத்திற்கும் இடையிலான நல்ல இடைவெளி தூரம்**
(A) ஒவ்வொரு 16 கிலோமீட்டர் வேகத்திற்கும் குறைந்தது ஒரு கார் நீளம்.
(B) ஒவ்வொரு 20 கிலோமீட்டர் வேகத்திற்கும் அரை கார் நீளம்.
(C) வேகம் எதுவாக இருந்தாலும் ஒரு கார் நீளம்.

விடை: (A). *குறிப்பு: இந்த பாதுகாப்பான தூரம் தகுந்த எதிர்ச்செயல் எடுக்க நேரம் தந்து மோதலைத் தவிர்க்க உதவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 86)*

**314. "துரிதமாக நிறுத்துவதற்குரிய தூரம்" எந்த செயல்களுக்கு எடுக்கப்படும் தொலைவைக் கணக்கில் கொள்கிறது?**
(A) எதிர்ச்செயல் நேரமும் பிரேக் போடும் நேரமும்.
(B) வேகத்தைக் கூட்டும் நேரமும் வேகத்தைக் குறைக்கும் நேரமும்.
(C) வேகத்தைக் கூட்டும் நேரமும் எதிர்ச்செயல் நேரமும்.

விடை: (A). *குறிப்பு: "துரிதமாக நிறுத்துதல்" என்பது அவசரமாக பிரேக் போடுவதல்ல. எனவே, பாதுகாப்புக் காரணங்களுக்காக நிறுத்துவதற்குரிய தூரத்தைத் தெரிந்து வைத்திருப்பது நல்லது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 90)*

**315. மது அருந்திய ஓட்டுநரின் எதிர்ச்செயல் தூரம் ______.**
(A) குறையும்.
(B) பாதிக்கப்படாது.
(C) அதிகரிக்கும்.

விடை: (C). *குறிப்பு: மிகக் குறைந்த அளவில் மது உட்கொண்டாலும், ஓட்டுநரின் எதிர்ச்செயல் நேரம் பாதிக்கப்படும். அதே போல, ஓட்டுநர் சோர்வாக இருந்தால், மிதமான மருந்து மயக்கத்தில் இருந்தால் அல்லது பழக்கப்படாத வாகனத்தை ஓட்டினாலும் எதிர்ச்செயல் நேரம் பாதிக்கப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 90)*

**316.** **உலர்வான சாலையோடு ஒப்பிடுகையில் ஈரமான சாலையில் நீங்கள் பிரேக் போடும் தூரம் ---------------- இருக்கும்.**

(A) குறைவாக
(B) நீளமாக
(C) அதே போல

விடை: (B). *குறிப்பு: வாகனத்தின் டயர்கள் தேய்ந்து போயிருந்தால் அல்லது கனமான பாரம் ஏற்றப்பட்டிருந்தாலும் பிரேக் போடும் தூரம் அதிகரிக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 90)*

**317.** **உங்கள் வாகனத்தை நிறுத்த முழு பிரேக் போடப்படுகிறது. பிரேக் போடும் தூரம்**

(A) வாகனத்தின் வேகம் அதிகமாக இருந்தால் குறைவாக இருக்கும்.
(B) வாகனத்தின் வேகம் குறைவாக இருந்தால் அதிகமாக இருக்கும்.
(C) வாகனத்தின் வேகம் அதிகமாக இருந்தால் அதிகமாக இருக்கும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 90)*

**318.** **பின்பக்கம் ஓட்டுவதற்குமுன், எப்போதும்**

(A) பின்னால் தடையற்ற வழி இருப்பதை உறுதிப்படுத்தவும்.
(B) பின்பார்வை கண்ணாடியில் பார்க்கவும்.
(C) ஓட்டுநர் பக்கமுள்ள பக்கவாட்டுக் கண்ணாடியைப் பார்க்கவும்.

விடை: (A). *குறிப்பு: கண்ணாடிகளுக்கு "பார்வையில் தெரியாத இடங்கள்" இருக்கும். எனவே பிள்ளைகள், நடையர்கள், சைக்கிளோட்டிகளை நீங்கள் இவ்விடங்களில் கவனிக்கவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 91)*

**319.** **உங்கள் வாகனத்தைப் பின்பக்கம் ஓட்டுவது எப்போது சட்டத்திற்குப் புறம்பானது?**

(A) துணைச் சாலையில் இருந்து முக்கிய சாலைக்குள் செல்லும்போது.
(B) முக்கிய சாலையில் இருந்து துணைச் சாலைக்குள் செல்லும்போது.
(C) துணைச் சாலையில் இருந்து துணைச் சாலைக்குள் செல்லும்போது.

விடை: (A). *குறிப்பு: இது ஆபத்தானதும் கூட. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 91)*





**320.** **நீங்கள் பின்பக்கம் ஓட்டவிருக்கும்போது, உங்கள் பார்வை தடைபடுகிறது. நீங்கள்**

(A) நின்று, உதவிக்காகக் காத்திருக்கவேண்டும்.
(B) நின்று, உதவக்கூடிய யாரிடமாவது உதவி கேட்கவேண்டும்.
(C) நின்று, காத்திருந்து, கவனமாகச் செல்லவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 91)*

**321.** **நீங்கள் தவறுதலாக முக்கிய சாலையில் இருந்து தொடராத துணைச் சாலைக்குள் திரும்பி விட்டீர்கள்.**

(A) நீங்கள் பாதுகாப்பான முறையில் முக்கிய சாலைக்குள் பின்பக்கம் ஓட்டலாம்.
(B) துணைச் சாலையின் உள்ளே சென்று, U-வளைவு செய்து, மீண்டும் முக்கிய சாலைக்குத் திரும்பலாம்.
(C) முக்கிய சாலையின் போக்குவரத்தை யாராவது நிறுத்தச் செய்து, நீங்கள் பின்பக்கமாக ஓட்டலாம்.

விடை: (B). *குறிப்பு: முக்கிய சாலைக்குள் பின்பக்கமாக ஓட்டுவது ஆபத்தானது, சட்டத்திற்குப் புறம்பானது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 91)*

**322.** **கால்நடையாகச் செல்வோர் மட்டுமல்லாது, இவர்களும் நடையர்களே.**

(A) மிதிவண்டி ஓட்டுவோர்.
(B) சக்கர நாற்காலியில் செல்வோர்.
(C) மோட்டார் மிதிவண்டிகளில் செல்வோர்.

விடை: (B). *குறிப்பு: சறுக்குப் பலகை, சறுக்குக் காலணி மற்றும் மிதிவண்டியிலிருந்து இறங்கி அதைத் தள்ளிச் செல்வோர் ஆகியோரும் நடையர்களே. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 91)*

**323.** **நடையர் கடப்பை அணுகும்போது, நீங்கள் எப்போதும்**

(A) கடந்துசெல்லும் நடையர்களை எச்சரிக்க எச்சரிக்கை ஒலியை எழுப்பவேண்டும்.
(B) துரிதமாகக் கடப்பைத் தாண்டிச்செல்ல வேகத்தைக் கூட்டவேண்டும்.
(C) வேகத்தைக் குறைத்து, நிறுத்தத் தயாராகவேண்டும்.

விடை: (C). *குறிப்பு: வேகத்தைக் குறைத்தால் நீங்கள் பாதுகாப்பாக நிறுத்த முடியும். நீங்கள் வேகமாக ஓட்டினால் வாகனத்தை நிறுத்த அதிக தூரம் தேவைப்படும் என்பதை நினைவில் கொள்ளவும். சாலை ஈரமாக இருந்தால் நிறுத்துவதற்குரிய தூரம் இன்னும் அதிகமாகும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 91)*

**324. சமிக்ஞை கட்டுப்பாடுள்ள கடப்பில் நடையர் ஒருவர் சாலையைக் கடக்கவிருக்கும்போது, நீங்கள் ஓட்டிச் செல்வதற்காக விளக்குகள் பச்சையாக மாறுகின்றன. நீங்கள்**

(A) வாகனத்தை நிறுத்தி, நடையர் கடக்க அனுமதிக்கவேண்டும்.
(B) வேகத்தைக் கூட்டி, உங்கள் ஓட்டுரிமையைக் காட்டி ஓட்டிச் செல்லவும்.
(C) எச்சரிக்கை ஒலியை எழுப்பி அவரை எச்சரித்துவிட்டு வாகனத்தை ஓட்டிச் செல்லவும்.

விடை: (A). *குறிப்பு: அந்த நடையர் முதியவராக அல்லது ஏதேனும் உடற்குறையுள்ளவராக இருக்கலாம். அவர் தாண்டிச் செல்ல நேரமும் வாய்ப்பும் தருவது பணிவன்பான, பாதுகாப்பான செயலாகும். உங்கள் ஓட்டுரிமையை ஒருபோதும் நிலைநாட்டாதீர்கள். இதனால் விபத்து நேரக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 91)*

**325. மெதுவாகச் செல்லும் வாகனம் "வரிக்குதிரை கடப்பை" அணுகுவதைப் பார்க்கிறீர்கள். நீங்கள்**

(A) பாதுகாப்பான முறையில் வாகனத்தைத் தாண்டிச் செல்லலாம்.
(B) அவர் கை அசைத்ததால் தாண்டிச் செல்லலாம்.
(C) பாதுகாப்பு காரணங்களுக்காகத் தாண்டிச் செல்லக்கூடாது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 91)*

**326. தேங்கிக் கிடக்கும் தண்ணீரை அணுகும்போது**

(A) தெறிக்கும் தண்ணீர் கார் டயர்களைக் கழுவும் என்பதற்காக வேகத்தைக் கூட்டவும்.
(B) உங்கள் வாகனத்தின் அடிப்பகுதியைத் தண்ணீர் சுத்தப்படுத்தும் என்பதற்காக தற்போதைய வேகத்தில் தொடர்ந்து செல்லவும்.
(C) நடையர்கள், சைக்கிளோட்டிகள் மீது தண்ணீர் தெறிப்பதைத் தவிர்க்க வேகத்தைக் குறைக்கவும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 92)*

**327. வாகனம் ஓட்டும்போது, பள்ளிகள் மற்றும் பேருந்து நிறுத்தங்களுக்கு அருகில் கூடுதல் கவனம் தேவை. ஏனெனில் பிள்ளைகள்**

(A) உருவம் சிறியதாக இருப்பதால் அவர்களைக் காண்பது சிரமம்.
(B) தூரத்தையும் வாகனத்தின் வேகத்தையும் கணிப்பதில் ஆற்றல் குறைந்தவர்கள்.
(C) (A) மற்றும் (B) இரண்டும்.

விடை: (C). *குறிப்பு: பிள்ளைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களுக்கு இடையிலிருந்து அடிக்கடி நடப்பார்கள் அல்லது ஓடுவார்கள். இதனால் அவர்களைப் பார்ப்பதும் அவர்களது செயல்களை ஊகிப்பதும் சிரமம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 92)*





**328. பள்ளிக்கு அருகில் நீங்கள் கூடுதலாக என்ன முன்னெச்சரிக்கை எடுக்கலாம்?**

(A) வேகத்தைக் குறைத்து, "STOP-CHILDREN" குறியைத் தாங்கியிருக்கும் பள்ளி வார்டனைக் கவனிக்கவும்.
(B) வேகத்தைக் குறைத்து, யாராவது கையை உயர்த்துகிறார்களா என கவனிக்கவும்.
(C) வேகத்தைக் குறைத்து, தெளிவான சமிக்ஞை எதுவும் இல்லாவிட்டால் செல்லவும்.

விடை: (A). *குறிப்பு: பள்ளியைச் சுற்றிலும் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த வார்டன் அல்லது தொண்டூழியரிடம் பள்ளி பொருத்தமான குறியைத் தரும். இருந்தாலும், பள்ளி எத்தனை கூடுதல் நடவடிக்கைகளை எடுத்தாலும், ஓட்டுநர் எப்போதும் கூடுதல் கவனத்துடன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 92)*

**329. ஈரமான சாலைகளில் ஓட்டும்போது வேகத்தைக் குறைப்பது நல்ல பழக்கம். தேங்கிக் கிடக்கும் தண்ணீரில் ஓட்டும்போது,**

(A) வாகனத்தின் டயர் தேய்ந்துபோவதைத் தவிர்க்க உதவும்.
(B) நடையர்கள்மீது தண்ணீர் தெறிப்பதைத் தவிர்க்க உதவும்.
(C) வாகனத்தின் பிரேக்கை அடிக்கடி பயன்படுத்துவதைத் தவிர்க்க உதவும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 92)*

**330. உங்களுக்குப் பின்னால் அம்புலன்ஸ் வண்டியின் எச்சரிக்கை ஒலி கேட்டால், நீங்கள்**

(A) வேகத்தைக் கூட்டி, அதன் வழியிலிருந்து விலகிச் செல்லவேண்டும்.
(B) வேகத்தைக் குறைத்து, நின்று, வழிவிட வேண்டும்.
(C) சாலையின் இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் சென்று, வழிவிட வேண்டும்.

விடை: (C). *குறிப்பு: தீயணைப்பு வண்டி போன்ற மற்ற அவசரகால வாகனங்களும் ஒலி எழுப்பக்கூடும். அவற்றுக்கு வழிவிட்டால், அவசரநிலையைச் சமாளிக்க அவை விரைவாகச் செல்லமுடியும். உங்கள் ஒத்துழைப்பால் உயிர்களையும் உடமைகளையும் காப்பாற்ற முடியும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 92)*

**331. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளில் ஓட்டும்போது**

(A) வாகனத்தின் இன்ஜின் நின்றுவிடக்கூடும்.
(B) வாகனத்தின் பிரேக் சரியாகச் செயல்படாமல் போகக்கூடும்.
(C) வாகனத்தின் செயலாற்றலைச் சோதிக்க வாய்ப்பு கிடைக்கும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 93)*

**332. சீரான வேகத்தில் உங்களைச் சுற்றி போக்குவரத்துடன் ஓட்டுவது அறிவுறுத்தப்படுகிறது ஏனென்றால்**

(A) உங்கள் பின்னால் போக்குவரத்து வேகத்தை நீங்கள் கட்டுப்படுத்தவில்லை.
(B) பாதைகள் மாற்ற எளிதாக இருக்கும்.
(C) முந்திச் செல்ல எளிதாக இருக்கும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 93)*

**333. பகலில் ஹெட்லைட்டுகளை போட்டால்**

(A) பேட்டரியின் வலிமை குறையும்.
(B) இயந்திரத்தின் சக்தி குறையும்.
(C) உங்கள் வாகனத்தை நன்றாக தெரியபடுத்துங்கள்

விடை: (C). *குறிப்பு: மோசமான பார்க்க முடியாத நிலை அல்லது மோசமான வானிலையின் காரணமாக ஹெட்லைட்டுகளை போட்டால் உங்கள் வாகனத்துக்கு தெளிவாக தெரியும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 93)*

**334. ஏன் நீங்கள் முன்கூட்டியே சமிக்ஞை காட்டவேண்டும்?**

(A) மற்ற சாலை பயணிகள் உங்கள் நோக்கங்களுக்கு செயல்பட போதுமான நேரம் கொடுக்க.
(B) அது ஒரு குற்றமாகும் என்பதால்.
(C) நீங்கள் சமிக்ஞை விளக்குகள் வேலை செய்கின்றதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 93)*

**335. நீங்கள் உங்கள் முன் வாகனத்துக்கு போதுமான இடைவெளியை பராமரிக்க வேண்டும் ஏனென்றால்**

(A) நீங்கள் தடம் மாற்ற போதுமான இடைவெளி வேண்டும்.
(B) தேவைப்பட்டால், உங்களுக்கு பாதுகாப்பாக நிறுத்த போதுமான இடைவெளி இருக்கும்.
(C) உங்களை முந்திச் செல்லும் வாகனங்கள் பாதுகாப்பாக வெட்டி செல்ல முடியும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 94)*





**336. மற்றொரு வாகனம் உங்களை முந்திச் செல்லும் போது, நீங்கள்**

(A) உங்கள் வேகத்தை அதிகபடுத்துங்கள், பின்னால் வரும் வாகனத்தின் வேகத்தை குறைக்க செய்யாதீர்கள்.
(B) உங்கள் வேகத்தை அதிகபடுத்துங்கள் அதனால் மற்ற வாகனங்களின் வேகத்தோடு தக்க வைத்துக் கொள்ளமுடியும்.
(C) வேகத்தை குறைத்து முந்தி செல்லும் வாகனங்களை விரைவாக கடந்து செல்ல அனுமதிக்கவும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 94)*

**337. ஒரு சந்திப்பில் நீங்கள், உங்கள் வாகனத்தை நிறுத்த வேண்டும்**

(A) நிறுத்த கோடுகளுக்கு அருகில் ஆனால் அதை தாண்டி அல்ல.
(B) நிறுத்த கோட்டில் இருந்து இரண்டு மீட்டர் தூறம்.
(C) நிறுத்த கோட்டில் முன் டயர்கள் படுமாறு.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 95)*

**338. உங்கள் எச்சரிக்கை ஒலியை (ஹொர்ன்) எழுப்புவது எப்போது குற்றமாகும்?**

(A) மருத்துவமனைக்கு அருகில்
(B) "நோ ஹொர்னிங்" குறி இருக்குமிடத்தில்.
(C) (a) மற்றும் (B) இரண்டும் பொருந்தும்.

விடை: (C). *குறிப்பு: முற்றிலும் அவசியமானால் மட்டுமே ஒலி எழுப்பவும். உதாரணமாக, விபத்தைத் தடுத்திட. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 95)*

**339. சாக்கடைக்குழி மூடிகளும் தோண்டும் பணிகள் நடைபெறும் இடங்களில் பயன்படுத்தப்படும் தற்காலிகத் தகடுகளும் உலோகத்தில் செய்யப்பட்டவை. இவற்றின்மீது ஓட்டும்போது என்ன கவனம் எடுக்கவேண்டும்?**

(A) இந்த மூடிகள் வழுக்கும் என்பதால் வேகத்தைக் குறைத்து கவனமாக ஓட்டவேண்டும்.
(B) இந்த மூடிகள் விழக்கூடும் என்பதால் அவற்றின்மீது மெதுவாக ஓட்டவேண்டும்.
(C) ஈரமாக இருந்தாலொழிய எந்த கவனமும் எடுக்கத் தேவையில்லை.

விடை: (A). *குறிப்பு: உலோகத் தகடுகளும் மூடிகளும் அவற்றின்மீது செல்லும் வாகனங்களின் எடையைத் தாங்கக்கூடிய வகையில் வலுவானவை. உலோகத்தின்மீது சறுக்காத பூச்சு பூசப்பட்டிருந்தாலும், சில காலத்திற்குப் பிறகு அவை தேய்ந்து போய்விடும். வழுக்கலான அவை, ஈரமானபோது மேலும் வழுக்கலாக இருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 93)*

**340. உங்கள் பாதையில் விலங்கு தென்பட்டால், நீங்கள்**

(A) வேகத்தைக் குறைக்கவும் அல்லது விபத்து நேரும் ஆபத்தில்லாவிட்டால் பிரேக் போடவும்.
(B) விலங்கைத் தவிர்த்து வளைந்து செல்லவும்.
(C) மோதலைத் தவிர்க்க வேகமாக பிரேக் போடவும்.

விடை: (A). *குறிப்பு: எந்தவொரு ஓட்டுநரும் வேகமாக பிரேக் போடுவார் என்றே எதிர்பார்க்கப்படும். இது முற்றிலும் அவசியமாகவும், சாலையை உபயோகிக்கும் மற்றவர்களுக்கு ஆபத்தில்லாமலும் இருந்தால், இவ்வாறு செய்யலாம். விலங்கைத் தவிர்க்கும் செயலைவிட வாகனத்தின் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதே முக்கியம் என்பதை நினைவில் கொள்ளவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 93)*

**341. வாகனம் ஓட்டும்போது கவனம் திசைதிரும்பாமல் இருக்க, ஓட்டுநர் எதைத் தவிர்க்கவேண்டும்?**

(A) வாகனத்திலுள்ள மற்ற பயணிகளுடன் பேசுவதை.
(B) கைத்தொலைபேசி பயன்படுத்துவதை அல்லது வரைபடம் பார்ப்பதை.
(C) வாகனத்தின் கண்ணாடிகளில் பலமுறை பார்ப்பதை.

விடை: (B). *குறிப்பு: பின் இருக்கை பயணிகளுடன் பேச ஒருபோதும் பின்னால் திரும்பக்கூடாது அல்லது ஹெட்லைட், சமிக்ஞை விளக்குகள் போன்ற தேவையான விசைகளை அழுத்துதல் தவிர வேறு செயல்களைச் செய்ய உங்கள் கையைப் பயன்படுத்தக்கூடாது. ஒலிவட்டுச் சாதனம் அல்லது வானொலியை ஒருபோதும் இயக்கக்கூடாது. ஒரே ஒரு பொத்தான் அல்லது விசையை அழுத்துவதாக இருந்தால் மட்டுமே அவற்றை இயக்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 93)*

**342. பயணிகளை ஏற்றி அல்லது இறக்கி விடும் போது சிறந்த**

(A) சாலை தடுப்பு அருகில் நிறுத்தவும் அதனால் மற்றவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாது.
(B) சாலை தடுப்பு அருகில் இருந்து குறைந்தது அரை மீட்டர் தூரத்தில் நிறுத்தவும் அதனால் மற்றவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாது.
(C) சாலை தடுப்பு அருகில் நிறுத்தவும் அதனால் உங்கள் பயணிகளுக்கு வசதியாக இருக்கும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 94)*

**343. மற்றவர்களுக்கு சிரமம் தரும் விதத்தில் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளில் எங்கே உங்கள் வாகனத்தை நிறுத்த கூடாது.**

(A) நிறுத்த கோட்டின் முன்
(B) நிறுத்த கோட்டின் முன் ஒரு கார் நீளம் நிழல் உள்ள பகுதியில் நிறுத்துவது.
(C) சமிக்ஞை விளக்குகள் அம்பர் நிறத்திற்கு மாறும் போது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 95)*





**344. வாகனம் நிறுத்துமிடத்தில், எப்போதும் உங்கள் வாகனத்தை நிறுத்த வேண்டிய இடம்**

(A) நிறுத்துமிடத்தின் மையத்தில்
(B) நீங்களும், பயணிகளும் ஏற அல்லது இறங்க எளிதான நிலைமையில் இருக்கவேண்டும்.
(C) அருகில் இருக்கும் வாகனத்தின் ஓட்டுநரும், பயணிகளும் ஏற அல்லது இறங்க எளிதான நிலைமையில் இருக்கவேண்டும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 95)*

**345. பொறுமை சாலையில் அவசியம், ஏனெனில்**

(A) பெரும்பாலான ஓட்டுனர்கள் அனுபவத்தில் முதிர்ச்சியானவர்கள்.
(B) பெரும்பாலான ஓட்டுனர்கள் இளைஞர்கள்.
(C) நாம் மற்றவர்கள் தவறான தீர்ப்பு எடுப்பார்கள் என்று எதிர்பார்க்க வேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 95)*

**346. எந்த அறிக்கை உண்மை?**

(A) பெரும்பாலான ஓட்டுநர்கள் மன்னிப்பவர் அல்ல அதனால் ஒரு தவறுக்கு மன்னிப்பு கேட்டு எந்த பயனும் இல்லை.
(B) பெரும்பாலான ஓட்டுநர்கள் மன்னிப்பவர்கள் அதாவது அசந்தர்ப்பமாக செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டால்.
(C) பெரும்பாலான ஓட்டுநர்கள் மன்னிப்பவர்கள் அதாவது தவறு செய்த ஓட்டுநர் ஒரு சோதனை கால ஓட்டுநராக இருப்பின்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 95)*

**347. பின்வருபவற்றை அறிந்திருப்பது, பாதுகாப்பாக வாகனம் ஓட்ட உதவியாக இருக்கும்.**

(A) பருவநிலை மற்றும் விளக்கு நிலவரங்கள்
(B) சாலை மற்றும் போக்குவரத்து நிலவரங்கள்
(C) மேற்காணும் இரண்டும்.

விடை: (C). *எதிர்பார்த்து, பகுத்தறிந்து, விபரீத சூழ்நிலைகளிலும் நம்பிக்கையுடன் செயல்பட முடியும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 96)*

**348. நீங்கள் பாதுகாப்பாக ஓட்ட முடியும் என்று நிர்ணயிக்கப்படுவது**

(A) உங்கள் உடல் நலன் மூலம்
(B) உங்கள் மன நலன் மூலம்
(C) மேலே உள்ள இரண்டும்

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 96)*

**349. பெரும்பாலான ஓட்டுநரின் முடிவுகளுக்கு அடிப்படை,**

(A) அவரால் எதை பார்த்தது மற்றும் அதை எப்போது பார்த்தது என்பதைக் கொண்டு.
(B) மற்ற ஓட்டுநர்கள் என்ன பார்த்தார்கள் மற்றும் செய்தார்கள் என்பதைக் கொண்டு.
(C) சாலை மற்றும் வானிலை நிலைமைகள் கருத்தில் கொண்டு.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 96)*

**350. களைப்பு ________________________________**

(A) உங்கள் எதிர்வினை நேரத்தை பாதிக்கிறது ஆனால் உங்கள் முடிவு எடுக்கும் திறனை அல்ல.
(B) உங்கள் எதிர்வினை நேரத்தையும், முடிவு எடுக்கும் திறனையும் பாதிக்கிறது.
(C) உங்கள் எதிர்வினை நேரத்தை பாதிக்காது ஆனால் உங்கள் முடிவு எடுக்கும் திறனை பாதிக்கிறது.

விடை: (B). *குறிப்பு: நீங்கள் களைத்தோ, மயக்கமாகவோ, காயப்பட்டோ, உடல் சுகவீனமற்று இருந்தாலோ ஓட்டுவதை தவிர்க்கவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 96)*

**351. கோபம் ஒரு மன உணர்ச்சி அது,,**

(A) உங்கள் பழக்கத்தை பாதிக்கும் ஆனால் நீங்கள் ஓட்டுவதை பாதிக்காது
(B) நீங்கள் ஓட்டுவதை பாதிக்கும்
(C) உங்கள் பழக்கத்தை பாதிக்கும்

விடை: (B). *குறிப்பு: நீங்கள் கோபமாக இருக்கும் போது, ஓட்ட கூடாது, இது விபத்துக்கள் ஏற்பட வழிவகுக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 96)*





**352. நீங்கள் மருந்து எடுத்துக்கொண்டிருந்தாலும்கூட,**

(A) மருந்தை ஒரு மருத்துவர் பரிந்துரைத்தது என்றால், நீங்கள் இன்னும் ஓட்ட முடியும்.
(B) பகல் நேரமாக இருக்குமெனில் உங்களால் ஓட்ட முடியும்.
(C) நீங்கள் மேலும் ஓட்ட முடியுமா என்று உங்கள் மருத்துவரிடம் சரிபார்த்து உங்கள் திறனை பாதிக்குமா என்பதை தெரிந்துக்கொண்டு ஓட்ட முடியும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 97)*

**353. வாகனம் ஓட்டும்போது, உங்கள் கண்ணாடிகளை எப்போது பயன்படுத்தவேண்டும்?**

(A) ஒவ்வொரு விநாடியும்
(B) ஒவ்வொரு 5-10 விநாடிகளும்.
(C) சில நிமிடங்களுக்கு ஒருமுறை.

*விடை: (B). குறிப்பு: 5-10 விநாடிகள். உங்களைச் சுற்றியுள்ள சூழ்நிலையை நீங்கள் உணர்ந்திருக்க இது உதவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 96)*

**354. வாகனம் ஓட்டும்போது மயக்கமாக இருந்தால், இவ்வாறு செய்வது முக்கியம்**

(A) பாதுகாப்பான இடத்தில் நிறுத்தி, சற்று நேரம் ஓய்வெடுத்தல்.
(B) செல்லவேண்டிய இடத்தைச் சீக்கிரமாகச் சென்றடைய வேகத்தைக் கூட்டுதல்.
(C) ஓட்டுவதை நிறுத்திவிட்டு, அபாய விளக்குகளைப் போட்டுவிட்டு, குட்டித்தூக்கம் போடுதல்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 96)*

**355. உங்கள் எதிர்ச்செயல் நேரத்தையும் தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும் கூடுதலாக பாதிக்கக்கூடிய உடல்நலப் பிரச்சனைகளில் ஒன்றைக் குறிப்பிடுக.**

(A) பசி
(B) பல் வலி
(C) சோர்வு

*விடை: (C). குறிப்பு: நீங்கள் சோர்வாக இருக்கும்போது, மதிப்பிடும் ஆற்றல் பாதிக்கப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 96)*

**356.** **வாகனம் ஓட்டும்போது, இரத்தத்தில் மதுபான அளவு (BAC) 100 மில்லிலிட்டர் இரத்தத்திற்கு ------------------ மேல் இருக்கக்கூடாது.**
(A) 60 மில்லிகிராமுக்கு
(B) 70 மில்லிகிராமுக்கு
(C) 80 மில்லிகிராமுக்கு

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 97 & 84)*

**357.** **பின்வரும் சூழ்நிலையில் மதுபோதையில் ஓட்டலாம்,**
(A) குறுகிய தூரம் ஓட்டுவதாக இருந்தால்.
(B) பயணிகள் யாரும் உடனில்லாவிட்டால்.
(C) மேற்காணும் (A), (B) இரண்டுமே தவறு.

*விடை: (C). குறிப்பு: மது போதையில் வாகனம் ஓட்டுவது குற்றமாகும். குடித்துவிட்டு வாகனம் ஓட்டவேண்டாம். மதுபானம் உங்கள் கவனத்தையும் மதிப்பீட்டையும் எதிர்ச்செயல் நேரத்தையும் பாதித்து, கிட்டத்தட்ட எப்போதும் விபத்துகளில் சிக்க வைக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 97)*

**358.** **பாதுகாப்பாக ஓட்டும் திறனை எது பாதிக்கும்?**
(A) மது அருந்துதல்
(B) மனப்போக்கு
(C) ஓட்டும் திறனின் நிலை

*விடை: (A). குறிப்பு: மது அருந்தினால் உங்கள் செயலாற்றலும் தெளிவான முடிவுகள் எடுக்கும் ஆற்றலும் வெகுவாகப் பாதிக்கப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 97)*

**359.** **வாகனம் ஓட்டும் திறனைப் பாதிக்கக்கூடிய மிகவும் சக்திவாய்ந்த உணர்வுகளில் ஒன்று**
(A) மனத்தளற்ச்சி
(B) கோபம்
(C) மகிழ்ச்சி

*விடை: (B). குறிப்பு: கோபமான ஓட்டுநர் சாலையில் சீற்றத்துடன் நடந்துகொள்ளக்கூடும். இதனால் அவர் தவறுகள் செய்து, விபத்துகளுக்கு இட்டுச்செல்லக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 96)*





**360.** **ஓர் ஓட்டுநரின் கவலையும் கலக்கமும்**
(A) மற்ற சாலை உபயோகிகளைத் தவறுகள் செய்ய வைக்கக்கூடும்.
(B) யோசனையற்ற தீர்மானங்கள் எடுக்க வைக்கும்.
(C) இரத்த அழுத்தத்தைக் குறைக்கும்.

*விடை: (B). குறிப்பு: யோசனையற்ற தீர்மானங்கள் எடுத்தால் கவனமின்றி வாகனம் ஓட்ட நேரிடலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 97)*

**361.** **சாதகமற்ற பருவநிலைகளால் சாலை நிலவரம் சவால்மிக்கதாகி,**
(A) உங்களுடைய, மற்ற சாலை உபயோகிகளுடைய பார்வை ஆற்றல் குறையும்.
(B) எப்போதும் பல வாகன விபத்துகளில் முடியும்.
(C) ஓட்டுநரின் விழிப்புணர்வு குறையும்.

*விடை: (A). குறிப்பு: மோசமான பார்வையாற்றலால், உங்களால் பார்க்க முடிவதும் நீங்கள் பார்க்கப்படுவதும் குறையும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 97)*

**362.** **உலர்வான சாலையைவிட ஈரமான சாலையில் நிறுத்துதற்குரிய தொலைவு -------.**
(A) ஒரே அளவுதான்.
(B) பாதிதான்.
(C) மிகவும் அதிகம்.

*விடை: (C). குறிப்பு: ஈரமான சாலைக்கும் டயர்களுக்கும் இடையில் பிடிமானம் குறைவு. முன்னாலுள்ள வாகனத்தை நெருங்கிப் பின்தொடராமல் இருந்தால், எதிர்பாராத சூழ்நிலைகளில் நீங்கள் எதிர்ச்செயல் மேற்கொள்ள போதிய நேரம் கிடைக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**363.** **டயர்கள் நல்ல நிலையில் இருந்தால்**
(A) ஈரமான சாலையில் நல்ல பிடிமானத்தை உறுதிப்படுத்தும்.
(B) மட்டும் ஈரமான சாலையில் நல்ல பிடிமானம் உறுதியாகிவிடாது.
(C) அவை புதிதாக இருந்தால் மட்டுமே ஈரமான சாலையில் நல்ல பிடிமானம் கிடைக்கும்.

*விடை: (B). குறிப்பு: நல்ல டயர்களும் பிடிமானமின்றி நீரில் சறுக்கக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**364. ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு இடையிலான தொலைவு**
(A) ஈரமான அல்லது உலர்வான சாலைகளில் ஒரே அளவே இருக்கவேண்டும்.
(B) ஈரமான சாலைகளில் செல்லும்போது உலர்வான சாலைகளைவிட அதிகமாக இருக்கவேண்டும்.
(C) ஈரமான சாலைகளில் செல்லும்போது குறைவாக இருக்கவேண்டும்.

*விடை: (B). குறிப்பு: உலர்வான சாலைகளைவிட ஈரமான சாலைகளில் தொலைவு அதிகமாக இருக்கவேண்டும். தொலைவு சுமார் இருமடங்கு அதிகமாக இருக்கவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**365. மோசமான பருவநிலையில் ஓட்டும்போது தெளிவாகப் பார்க்க முடியாது, அதனால்**
(A) உங்களால் நன்றாகப் பார்க்க முடியும் தொலைவைவிடக் கூடுதலாக ஓட்டக்கூடாது.
(B) உங்களால் நன்றாகப் பார்க்க முடியும் தொலைவைவிடக் கூடுதலாக ஓட்டவேண்டும்.
(C) கண்ணாடியின் படரும் பனியை அகற்ற "demister" பயன்படுத்தவேண்டும் (பனி அகற்றும் இயக்கி).

*விடை: (A). குறிப்பு: நீங்கள் எப்போதும் பார்வையில் படும் தொலைவுக்குள் ஓட்டவேண்டும். கண்ணாடியில் படரும் பனியை அகற்ற "demister" பயன்படுத்தவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**366. ஈரமான சாலையில் உங்கள் வாகனம் சறுக்கி முன்னே சென்றால், நீங்கள்**
(A) பிரேக்கை மிதிக்கவேண்டும்.
(B) வேகத்தைக் கூட்டி, கூடுமானவரை வாகனத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும்.
(C) வாகனத்தின் வேகத்தை இடைவிட்டுக் குறைத்து, ஸ்டியரிங் வீலைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும்.

*விடை: (C). குறிப்பு: சாலை மேற்பரப்புக்கும் டயர்களுக்கும் இடையில் திரண்டுள்ள மெல்லிய நீரோட்டத்தால் வாகனம் சறுக்கக்கூடும். ஈரமான சாலைகளில் எப்போதும் குறைவான வேகத்தில் ஓட்டவும். குறைந்த வேகத்தில் ஓட்டினால், நீரோட்டத்தில் வாகனம் சறுக்குவதைத் தவிர்க்க முடியும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**367. உங்களது வழக்கமான வேகத்தை ஈரமான சாலைகளில் -------------.**
(A) சுமார் 10% குறைக்கவேண்டும்.
(B) குறைந்தது 50% குறைக்கவேண்டும்.
(C) குறைந்தது 25% குறைக்கவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*





**368. சாதகமற்ற பருவநிலைகளில் ஓட்டும்போது தெளிவாகப் பார்க்க முடியாவிட்டால், நீங்கள் கடைப்பிடிக்கவேண்டிய நல்ல விதிகளில் ஒன்று:**
(A) அருகிலுள்ள கார்ப்பேட்டைக்குச் சென்று வாகனத்தை நிறுத்தவேண்டும்.
(B) பாதுகாப்பான இடத்திற்குச் சென்று, வாகனத்தை நிறுத்தி, அபாய விளக்குகளைப் போடவேண்டும்.
(C) அபாய விளக்குகளைப் போட்டு, கவனமாக ஓட்டிச் செல்லவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**369. மழையால் சாலை மேற்பரப்பு வழுக்கலாகும். எனவே**
(A) புதிய டயர்கள் அவசியம்.
(B) விலையுயர்ந்த டயர்கள் முக்கியம்.
(C) டயரின் பிடிமானம் குறையும்.

*விடை: (C). குறிப்பு: ஈரத்தால் டயரின் பிடிமானம் குறையும். தேய்ந்து போன டயர்களின் பிடிமானம் மேலும் மோசமாக இருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**370. வழுக்கலான சாலை மேற்பரப்புகளில்,**
(A) வேகத்தைக் குறைத்து வாகனத்தை நிறுத்த நேரமும் தொலைவும் எடுத்துக் கொள்ளவும்.
(B) அடிக்கடி பிரேக் போடவும்.
(C) வாகனத்தின் வேகத்தைக் குறைத்து அபாய விளக்குகளைப் போடவும்.

*விடை: (A). குறிப்பு: வழுக்கலான சாலையில் எதிர்ச்செயல் எடுக்க ஓட்டுநருக்கு அதிக நேரமும் தொலைவும் தேவைப்படும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**371. ஈரமான சாலைகளில் அவசியமாக பிரேக் போட்டாக வேண்டிய நிலையில்,**
(A) சமர்த்தாக பிரேக்கில் மிதிக்கவும்.
(B) இடைவிட்டு பிரேக் போடவும்.
(C) பிரேக் போட்டு, கை பிரேக்கை இழுக்கவும்.

*விடை: (B). குறிப்பு: வாகனம் சறுக்குவதை அல்லது வழுக்குவதைத் தவிர்க்க இது உதவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**372. "அகுவாப்லனிங்" என்றால் என்ன?**
(A) சக்கரம் சுழல்வது
(B) பிரேக் பூட்டிக் கொள்வது
(C) டயர் சறுக்குவது

*விடை: (C). குறிப்பு: ஈரமான மேற்பரப்பில் டயர்கள் பிடிமானத்தை இழந்து, மெல்லிய நீரோட்டத்தில் சறுக்குவதை "அக்குவாப்பிலனிங்" என்போம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**373. உங்கள் வாகனம் எப்போது "அகுவாப்லென்" செய்யக்கூடும்.?**
(A) பிரேக்குகள் சரியாக வேலை செய்யாதபோது.
(B) டயர்களில் காற்றில்லாத போது.
(C) வாகனத்தின் வேகம் அதிகரிக்கும்போது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**374. ஈரமான மேற்பரப்பில் அதிவேகத்தில் சென்றால்**
(A) டயர்களிலிருந்து அதிக தண்ணீர் தெறிக்கும்.
(B) அது குற்றமாகக் கருதப்படும்.
(C) நீங்கள் செல்லவேண்டிய இடத்தைச் சீக்கிரமாக அடைந்துவிடலாம்.

*விடை: (A). குறிப்பு: டயர்களிலிருந்து தெறிக்கும் தண்ணீர், மற்ற வாகனங்களின் துடைப்பான்களால் அகற்ற முடியாத அளவுக்கு அதிகமாக இருக்கக்கூடும். இதனால் அந்த ஓட்டுநர்களால் பார்க்க இயலாது போய்விடக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 99)*

**375. வெள்ளம் நிறைந்த சாலைப்பகுதியைக் கடந்து சென்றபிறகு, நீங்கள்**
(A) பிரேக் மிதிகட்டையை சிலமுறை "பம்ப்" செய்யவேண்டும்.
(B) கை பிரேக்கை இழுத்து, பிரேக் உலரும்வரை காத்திருக்கவேண்டும்.
(C) ஈரமில்லாத இடத்தில் நிறுத்தி பிரேக்கை உலர்வாக்கவேண்டும்.

*விடை: (A). குறிப்பு: இடது பாதத்தால் பிரேக் மிதிகட்டையை லேசாக மிதித்து, அதே வேளையில் வலது பாதத்தால் அக்சலரேட்டரை மிதித்தும் பிரேக்கை உலர்வாக்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 99)*





**376. வெள்ளம் நிறைந்த சாலைப்பகுதியை அணுகும்போது,**
(A) வேகத்தைக் குறைத்து, நியூட்ரல் கியருக்கு மாறவும்.
(B) வேகத்தைக் கூட்டி, உயர் கியருக்கு மாறவும்.
(C) வேகத்தைக் குறைத்து, குறைந்த கியருக்கு மாறவும்.

*விடை: (C). குறிப்பு: எப்போதும் வேகத்தைக் குறைத்து, கவனமாகச் செல்லவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 99)*

**377. வெள்ளம் நிறைந்த சாலைகளில் செல்வதைத் தவிர்க்க முடியாவிட்டால்,**
(A) வாகனத்தை நிறுத்தி, எப்படி கடந்து செல்வது என்று திட்டமிடவும்.
(B) முடிந்தவரை துரிதமாகக் கடந்து செல்லவும்.
(C) வாகனத்தை நிறுத்தி, நீர் ஆழத்தைக் கணிக்கவும்.

*விடை: (C). குறிப்பு: கடந்து செல்ல முடியுமானால், குறைந்த கியரைப் பயன்படுத்தி, மெதுவாக ஓட்டிச் செல்லவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 99)*

**378. ஈரமான பிரேக் செயலாற்றல் அற்றது, எனவே**
(A) பிரேக் உலர்வாவதற்குமுன் வாகனத்தை ஒருபோதும் ஓட்டக்கூடாது.
(B) மெதுவாக ஓட்டி, சிலமுறை "பம்ப்" செய்து உலர்வாக்கவும்.
(C) கூடிய விரைவில் அவற்றை மாற்றிவிடவும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 99)*

**379. வெள்ள நீரின் ஆழம் உறுதியாகத் தெரியாவிட்டால்,**
(A) நீங்கள் செல்வதற்குமுன், மற்ற சாலை உபயோகிகள் கடந்து செல்லும்வரை காத்திருக்கவும்.
(B) மாற்றுப் பாதையில் செல்லவும்.
(C) உங்கள் வாகனத்தை சாலையோரத்திற்கு ஓட்டிச் சென்று, வெள்ளம் வடியும்வரை காத்திருக்கவும்.

*விடை: (B). குறிப்பு: உறுதியாகத் தெரியாவிட்டால், உங்கள் வாகனம் வெள்ளத்தில் நின்றுபோவதைத் தவிர்த்திட, எப்போதும் மாற்றுப் பாதையில் செல்லவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 99)*

**380. வெள்ள நீர் தவிர, வேறென்ன பருவநிலை நிலவரங்களால் சாலை மேற்பரப்புகள் பாதிக்கப்படக்கூடும்?**

(A) பலத்த குறுக்குக்காற்று
(B) மேகமூட்டம்
(C) வெப்பநிலை

விடை: (A). குறிப்பு: பலத்த குறுக்குக்காற்றால் உங்கள் வாகனம் மற்ற வாகனங்களின் பாதைக்குள் "இழுக்கப்படக்கூடும்". *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 99)*

**381. மோசமான பருவநிலையால் பார்வையாற்றல் மோசமாக இருக்கும்போது, நீங்கள்**

(A) வாகனத்தின் அனைத்து விளக்குகளையும் போடவேண்டும்.
(B) அடிக்கடி எச்சரிக்கை ஒலி எழுப்பவேண்டும்.
(C) பாதுகாப்பான இடத்தில் நிறுத்திவிட்டு, பார்வையாற்றல் மேம்பட்டபிறகு ஓட்டிச் செல்லவேண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 98)*

**382. சூரியனின் பிரகாசத்தால் கண்கள் கூசும்போது, நீங்கள்**

(A) ஒளித்தடுப்பு தகட்டை இறக்கவேண்டும்.
(B) காற்றுத்தடுப்புக் கண்ணாடியில் ஒளித்தடுப்பு வலையை பாடவேண்டும்.
(C) உடனடியாகச் சூரிய ஒளியைத் தவிர்த்து திரும்பிவிடவேண்டும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*

**383. இரவு ஏழு மணிக்கும் காலை ஏழு மணிக்கும் இடையில் ஓட்டும்போது,**

(A) போதிய வெளிச்சம் இருந்தால் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளைப் போடத் தேவையில்லை.
(B) உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளைப் போடவேண்டும்.
(C) இருட்டான இடங்களில் மட்டும் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளைப் போடவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*





**384. எதிர்த்திசை வாகனத்தின் ஹெட்லைட் விளக்கொளியால் உங்கள் கண்கள் கூசினால், நீங்கள்**

(A) வேகத்தைக் குறைத்து, விளக்கின் சுடரைத் தவிர்த்திட இடப்பக்கமாகப் பார்க்கவேண்டும்.
(B) வேகத்தைக் கூட்டி, கண் கூசாதிருக்க வாகனத்தைக் கடந்து செல்லவேண்டும்.
(C) பிரேக் போட்டு, உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளைப் பயன்படுத்தி எதிர்த்திசை வாகனங்களுக்கு சமிக்ஞை காட்டவேண்டும்.

விடை: (A). குறிப்பு: தேவையானபோது, உங்கள் வாகனத்தை நிறுத்திவிட்டு, பாதுகாப்பான பிறகு தொடர்ந்து ஓட்டிச் செல்லவும். *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*

**385. மிகக் குறைவான ஒளி உங்கள் பார்வையைப் பாதிக்கும்,**

(A) அதே போல மிக அதிகமான ஒளியும் பாதிக்கும்.
(B) எனவே நீங்கள் வாகனத்தின் உட்புற விளக்கைப் போடவேண்டும்.
(C) எனவே உங்கள் வாகனத்தின் அனைத்து விளக்குகளையும் போடவேண்டும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**386. வாகனம் ஓட்டும்போது எப்போது ஹெட்லைட் விளக்குகளைக் கட்டாயமாக எரியவிடவேண்டும்?**

(A) காலை 7 மணி முதல் மறுநாள் காலை 7 மணி வரை
(B) இரவு 7 மணி முதல் காலை 7 மணி வரை
(C) காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*

**387. எதிர்த்திசை வாகனத்தின் ஹெட்லைட் விளக்கொளியால் உங்கள் கண்கள் கூசினால்,**

(A) உங்கள் வாகனத்தின் ஹைபீம் விளக்கைப் போட்டு எதிர்த்திசை வாகனத்தின் ஓட்டுநருக்குச் சமிக்ஞை காட்டவும்.
(B) அந்த வாகனத்தின் கவனத்தை ஈர்க்க உங்கள் ஹெட்லைட் விளக்கை மின்னவும்.
(C) மேல்நோக்கி, விளக்குக்கு அப்பால் லேசாக இடப்பக்கமாகப் பார்க்கவும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*

**388. இரவில் எதிர்த்திசை போக்குவரத்தை அணுகும்போது, நீங்கள்**
(A) ஹைபீம் விளக்கைப் மின்னவும்.
(B) எச்சரிக்கை ஒலி எழுப்பவேண்டும்.
(C) உங்கள் வாகனத்தை ஹெட்லைட் விளக்குகளைக் கீழ்நோக்கச் செய்யவேண்டும்.

*விடை: (C). குறிப்பு: உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளைக் கீழ்நோக்கச் செய்வதால், எதிர்வரும் ஓட்டுநர்களின் கண்கள் கூசுவதைத் தவிர்க்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*

**389. இரவில் ஓட்டும்போது,**
(A) வாகனத்தின் உட்புற விளக்குகளைப் போடவும்.
(B) வாகனத்தின் அபாய விளக்குகளைப் போடவும்.
(C) வாகனத்தின் உட்புற விளக்குகளைப் போடவேண்டாம்.

*விடை: (C). குறிப்பு: வாகனத்தின் உட்புற விளக்குகளை எரியவிட்டால், உங்களது வெளிப்புற பார்வையாற்றல் குறைந்து, விபத்து நேரும் வாய்ப்பு அதிகரிக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**390. வளைவுகளையும் கட்டுப்படுத்தப்படாத "T" சந்திப்புகளையும் இரவில் அணுகும்போது, நீங்கள்**
(A) உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளை மின்னி, மற்ற வாகனமோட்டிகளை எச்சரிக்கவேண்டும்.
(B) உங்கள் ஹெட்லைட் விளக்குகளைக் கீழ்நோக்கச் செய்து, எதிர்த்திசை வாகன ஓட்டுநரின் கண்கள் கூசுவதைத் தவிர்க்கவேண்டும்.
(C) எச்சரிக்கை ஒலியை சிலமுறை எழுப்பி, மற்ற வாகனமோட்டிகளை எச்சரிக்கவேண்டும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**391. உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளை எப்போது கீழ்நோக்கச் செய்யவேண்டும்?**
(A) மருத்துவமனைகளை அணுகும்போது.
(B) செங்குத்தான சரிவுப்பாதையில் செல்லும்போது.
(C) மற்றொரு வாகனத்திற்குப் பின்னால் ஓட்டும்போது

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*





**392. உங்கள் வாகனத்தின் ஹைபீம் விளக்குகளை எப்போது பயன்படுத்தவேண்டும்?**
(A) மற்றொரு வாகனத்தை நெருக்கமாகப் பின்தொடரும்போது
(B) எதிர்த்திசை போக்குவரத்தைச் சந்திக்கும்போது
(C) வளைவுகளை அணுகும்போது

*விடை: (C). குறிப்பு: நீங்கள் சாலையில் இருப்பதை எதிர்த்திசை போக்குவரத்துக்கு இது தெரிவிக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**393. நீங்கள் மற்றொரு வாகனத்திற்குப் பின்னால் ஓட்டும்போது,**
(A) உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளை மின்னவேண்டும்.
(B) உங்கள் வாகனத்தின் அபாய விளக்குகளைப் போடவேண்டும்.
(C) உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளைக் கீழ்நோக்கி வைத்திருக்கவேண்டும்.

*விடை: (C). குறிப்பு: உங்கள் வாகனத்தின் விளக்குகள் கீழ்நோக்கியிருந்தால், முன்னாலுள்ள ஓட்டுநர் தனது பின்பார்வை கண்ணாடியில் பார்க்கும்போது அவர்களது கண்கள் கூசுவதைத் தவிர்க்க முடியும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*

**394. இரவில் உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளைக் கீழ்நோக்கி வைத்திருந்தால்,**
(A) மின்கலத்தின் ஆயுட்காலம் நீடிக்கும்.
(B) ஹைபீம் விளக்கு தீர்ந்துபோவதைத் தவிர்க்கும்.
(C) முன்னாலுள்ள ஓட்டுநரின் கண்கள் கூசுவதைத் தவிர்க்கலாம்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*

**395. சுற்றுப்புற பர்வையாற்றல் மோசமாக இருக்கும் நிலையில், வளைவுகலை அணுகும்போது நீங்கள் என்ன சேய்யவேண்டும்?**
(A) எச்சரிக்கை ஒலியை இடைவிட்டு எழுப்பவேண்டும்.
(B) ஹைபீம் விளக்கைப் பயன்படுத்தவேண்டும்.
(C) வாகனத்தின் அனைத்து விளக்குகளையும் போடவேண்டும்.

*விடை: (B). குறிப்பு: நீங்கள் அணுகுவதை மற்ற வாகனங்களிடம் எச்சரிக்க இது உதவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**396. மற்றொரு வாகனத்திற்குப் பின்னால் ஓட்டும்போது, உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் விளக்குகளை ஏன் கீழ்நோக்கி வைத்திருக்கவேண்டும்?**

(A) உங்கள் ஹெட்லைட் விளக்கொளி முன்னாலுள்ள ஓட்டுநரின் பின்பார்வை கண்ணாடியில் பிரதிபலிப்பதைத் தவிர்த்திட.
(B) நீங்கள் பின்தொடர்வதாக முன்னாலுள்ள ஓட்டுநரிடம் தெரிவித்திட.
(C) பாதுகாப்பான தொலைவைக் கட்டிக்காக்க உங்களுக்கு வழிகாட்டிட.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*

**397. உங்கள் வாகனத்தின் ஹைபீம் விளக்கை எப்போது பயன்படுத்தவேண்டும்**

(A) அனைத்து வளைவுகளையும் அணுகும் போது
(B) பார்வை தெளிவில்லாத வளைவுகளை அணுகும்போது
(C) நீங்கள் தென்பட விரும்பும்போது.

*விடை: (B). குறிப்பு: எதிர்த்திசையில் வரும் மற்ற சாலை உபயோகிகள் நீங்கள் அணுகுவதை முன்கூட்டியே அறிந்திட இது உதவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**398. இவ்வாறு செய்வது நல்லது**

(A) இரவில் குறைந்த வேகத்தில் ஓட்டுவது.
(B) இரவோ பகலோ எப்போதும் ஒரே வேகத்தில் ஓட்டுவது.
(C) பகலைவிட இரவில் சற்றுக் கூடுதல் வேகத்தில் ஓட்டுவது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 100)*

**399. உங்கள் ஹெட்லைட் விளக்கொளியின் ஒளியூட்டும் தொலைக்கு அப்பல் ஓட்டுவது ஆபத்தானது அதாவது நீங்கள் ஓட்டும் வேகத்தில்,**

(A) வாகனத்தை நிறுத்துவதற்கான தொலைவைவிட உங்களுக்குத் தெரியும் தொலைவு அதிகம்.
(B) வாகனத்தை நிறுத்துவதற்கான தொலைவைவிட உங்களுக்குத் தெரியும் தொலைவு குறைவு.
(C) வாகனத்தை நிறுத்துவதற்கான தொலைவைவிட உங்கள் எதிர்ச்செயல் தொலைவு அதிகம்.

*விடை: (B). குறிப்பு: வெவ்வேறு வேகங்களில் நிறுத்துவதற்கான தொலைவுகளை நீங்கள் எப்போதும் அறிந்திருக்கவேண்டும். உங்களுக்குத் தெரியும் தொலைவைவிட நிறுத்துவதற்கான தொலைவு அதிகமாக இருக்கும் வேகத்தில் ஒருபோதும் ஓட்டக்கூடாது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*





**400. உங்கள் ஹைபீம் ஹெட்லைட் விளக்கின் உத்தேச ஒளித்தொலைவு என்ன?**

(A) 150 மீட்டர்
(B) 100 மீட்டருக்கும் 150 மீட்டருக்கும் இடையில்
(C) 100 மீட்டர்

*விடை: (C). குறிப்பு: வாகன உற்பத்தியாளர் நிர்ணயித்ததிலிருந்து உங்கள் ஹெட்லைட் விளக்குகளில் மாற்றம் செய்யப்படாத நிலையில். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**401. சீரில்லாத மேற்பரப்புகளில், எது நல்லது?**

(A) உங்கள் வாகனத்தைக் முழுவதும் ஒடுத்து திருப்புவதைத தவிர்ப்பது நல்லது.
(B) வேகத்தைக் கூட்டி, துரிதமாகக் கடந்து செல்வது நல்லது.
(C) ஸ்டியரிங்கை இளகலாகப் பிடித்திருப்பது நல்லது.

*விடை: (A). குறிப்பு: மணல், கூழாங்கற்கள் போன்ற மேற்பரப்புகளில் மெதுவாக ஓட்டவும். திடீரென பிரேக் போடுவதையும் வேகத்தைக் கூட்டுவதையும் தவிர்க்கவும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**402. மணல் அல்லது கூழாங்கற்கள் பதித்த மேற்பரப்புகளில் பக்கவாட்டில் வழுக்குவதைத் தவிர்த்திட, நீங்கள்**

(A) உயர் கியருக்கு மாறி வேகத்தைக் கூட்டவேண்டும்.
(B) இடைவிட்டு பிரேக் போடும் உத்தியைப் பயன்படுத்தவேண்டும்.
(C) ஸ்டியரிங் வீலை வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் திருப்பவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**403. மணலான மேற்பரப்பில் ஓட்டும்போது, நீங்கள்**

(A) உயர் கியருக்கு மாறவேண்டும்.
(B) குறைந்த கியருக்கு மாறவேண்டும்.
(C) எப்போதும் கை பிரேக் பயன்படுத்தவேண்டும்.

*விடை: (B). குறிப்பு: வேகத்தைக் குறைத்து, கவனமாக ஓட்டினால், வாகனத்தின் கட்டுப்பாட்டை நிலைநாட்டலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**404. மேற்பரப்பு இல்லாத, சீரில்லாத சாலைகளில், வாகனங்களுக்கு இடையிலான தொலைவு, மேற்பரப்புள்ள, சீரான சாலைகளில் ஓட்டும்போது இருக்கும் தொலைவைவிட -------------------------- இருக்கவேண்டும்.**
(A) அதிகமாக
(B) குறைவாக
(C) ஒரே அளவு

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**405. உங்கள் வாகனத்தின் வேகத்தை மாற்றும் தீர்மானம் எதை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்?**
(A) சாலையின் வடிவமும் அகலமும்.
(B) சாலை மேற்பரப்பு, எழக்கூடிய அபாயங்கள் மற்றும் ஆபத்துகள்
(C) மேற்காணும் (A), (B) இரண்டும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**406. நீங்கள் ஓட்டிச் செல்லும் சாலையின் மாறுபடும் மேற்பரப்பை அறிந்திருப்பது முக்கியம். அதற்குக் காரணம்**
(A) வெவ்வேறு சாலை மேற்பரப்புகளின் இழுப்பு மாறுபடும்.
(B) வெவ்வேறு சாலை மேற்பரப்புகளில் உங்கள் வாகனம் ஒழுங்காக இயங்கமுடியாது.
(C) நீங்கள் அறியாமலேயே உங்கள் டயர்கள் தேய்ந்துபோய் இருக்கக்கூடும்.

*விடை: (A). குறிப்பு: மணல் அல்லது கூழாங்கற்கள் போன்ற இளகலான பொருட்களால் மேற்பரப்பு போடப்பட்ட சாலைகளில் சறுக்கும் அல்லது வழுக்கும் ஆபத்து அதிகரிக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 101)*

**407. சீரில்லாத மேற்பரப்புகளில், நீங்கள்**
(A) வேகத்தைக் கூட்டவேண்டும்.
(B) வேகத்தைக் குறைக்கவேண்டும்.
(C) கை பிரேக்கைப் பயன்படுத்தவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*





**408. உங்கள் வாகனத்தின் பின்பகுதி பக்கவாட்டில் சறுக்கினால், நீங்கள் என்ன செய்யவேண்டும்?**
(A) சறுக்கிய திசைக்கு எதிர்த்திசையில் ஸ்டியரிங் செய்யவும்.
(B) சறுக்கிய திசையில் ஸ்டியரிங் செய்யவும்.
(C) ஸ்டியரிங் வீலை உறுதியாகப் பிடித்துக்கொண்டு, பிரேக் போடவும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**409. வளைவைச் சுற்றிச் செல்லும்போது உங்கள் வாகனத்தை வெளிப்பக்கம் இழுக்கும் சக்தி என்ன?**
(A) சரிநிகர் சக்தி
(B) புவிஈர்ப்புச் சக்தி
(C) சேன்ட்ரிஃபூகல் சக்தி (மையத்திலிருந்து தள்ளப்படுகிற சக்தி).

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**410. உங்கள் வாகனத்தின் பின்பகுதி பக்கவாட்டில் சறுக்கினால்,**
(A) சறுக்கிய திசைக்கு எதிர்த்திசையில் ஸ்டியரிங் செய்யவும்.
(B) சறுக்கிய திசையில் ஸ்டியரிங் செய்யவும்.
(C) ஸ்டியரிங் வீலைப் பிடித்துக்கொண்டு, கடுமையாக பிரேக் போடவும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**411. செண்ட்ரிஃபூகல் சக்தி எதைப் பாதிக்கும்?**
(A) கார்களை மட்டும்.
(B) கனரக வாகனங்களை மட்டும்.
(C) அனைத்து வகை வாகனங்களையும்.

*விடை: (C). குறிப்பு: வளைவுகளில் செல்லும் அனைத்து வாகனங்களையும் செண்ட்ரிஃபூகல் சக்தி பாதிக்கும். இது ஒரு வாகனத்தை அதன் பயணப் பாதையிலிருந்து தள்ளும். வளைவு எவ்வளவு கூராகவும் வாகனத்தின் வேகம் எவ்வளவு அதிகமாகவும் இருக்கிறதோ, அந்த அளவுக்கு செண்ட்ரிஃபூகல் சக்தியும் அதிகமாக இருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**412. சென்ட்ரிஃபூகல் சக்தியின் விளைவால்**
(A) திரும்பும் அரைவிட்டம் சிறியதாகும்.
(B) உங்கள் பயணப்பாதையை நிலைநாட்ட முடியும்.
(C) திரும்பும் அரைவிட்டம் அகலமாகும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**413. சென்ட்ரிஃபூகல் சக்தி எப்போது வலுவிழக்கும்?**
(A) கிளட்ச்சை அழுத்தும்போது.
(B) உயர் வேகத்தில் ஓட்டும்போது
(C) குறைந்த வேகத்தில் ஓட்டும்போது

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**414. வளைவில் அல்லது சாலை முனையில் உயர்ந்த வேகத்தில் ஓட்டும்போது சேன்ட்ரிஃபூகல் சக்தி**
(A) வலுவடையும்.
(B) வலுவிழக்கும்.
(C) எவ்வித பாதிப்பும் உண்டாக்காது.

*விடை: (A).குறிப்பு: வலுவடையும் சக்தி வாகனத்தை சாலைக்கு அப்பால் இழுத்துவிடக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**415. வளைவில் அல்லது முனையில் ஓட்டும்போது, சென்ட்ரிஃபூகல் சக்தியின் பாதிப்பைத் தவிர்த்திட நீங்கள்-------------------- .**
(A) வேகத்தைக் கூட்டவேண்டும்.
(B) வேகத்தைக் குறைக்கவேண்டும்.
(C) இடைவிட்டு பிரேக் போடவேண்டும்.

*விடை: (B).குறிப்பு: குறைந்த வேகத்தில் சென்ட்ரிஃபூகல் சக்தியின் பாதிப்பு குறையும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*





**416. சாலையுடனான காரின் இழுப்பைவிட சென்ட்ரிஃபூகல் சக்தியின் பாதிப்பு அதிகமாக இருக்கும்போது என்னவாகும்?**
(A) ஒன்றும் நடக்காது. வழக்கம்போல ஓட்டவும்.
(B) ஓட்டுநருக்கு வாகனத்தின்மீது அதிக கட்டுப்பாடு இருக்கும்.
(C) ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்து, வாகனம் சுழலக்கூடும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**417. வளைவில் செல்லும்போது உங்கள் வாகனத்தை வெளிப்பக்கம் இழுக்கும் சக்தியை மட்டுப்படுத்த, நீங்கள்**
(A) வேகத்தைக் கூட்டவேண்டும்.
(B) வேகத்தைக் குறைக்கவேண்டும்.
(C) உயர் கியருக்கு மாறவேண்டும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**418. பத்து மீட்டர் அரைவிட்டம் உள்ள வளைவில் செல்வதற்குரிய பாதுகாப்பான வேகம் என்ன?**
(A) மணிக்கு 15 கிலோமீட்டர்.
(B) மணிக்கு 25 கிலோமீட்டர்.
(C) மணிக்கு 30 கிலோமீட்டர்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 102)*

**419. போக்குவரத்து அதிகமாகவோ அல்லது லேசாகவோ இருந்தால், நீங்கள்,**
(A) வேக வரம்பை மீறக்கூடாது.
(B) உங்கள் வாகனத்துக்கு ஏற்ற வேகத்தில் ஓட்டவும்.
(C) உங்கள் வேகத்தை பொது போக்குவரத்து ஓட்டத்துக்கு சரி செய்யவும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 103)*

**420. போக்குவரத்து நிலவரங்கள்**

(A) எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும், குறிப்பாக உச்ச நேரங்களில்.
(B) ஒரே மாதிரியான சூழ்நிலைகளில் ஒரே மாதிரியாக இருக்கும்.
(C) சூழ்நிலைகள் மாறிக்கொண்டே இருப்பதால் ஒருபோதும் ஒரே மாதிரியாக இருக்காது.

*விடை: (C). குறிப்பு: போக்குவரத்து நிலவரங்கள் எப்போதும் மாறுபடும். நேரம், பருவநிலை ஒரே மாதிரியாக இருந்தாலும், போக்குவரத்து நிலவரம் ஒரே மாதிரியாக இருக்காது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 103)*

**421. எப்போதும் போக்குவரத்தின் சரளம், சாலை நிலவரம் ஆகியவற்றுக்கு ஏற்ப உங்கள் வேகத்தை நிர்ணயிக்கவேண்டும். இதற்குக் காரணம்**

(A) சூழ்நிலைகளும் போக்குவரத்து நடைமுறைகளையும் எந்நேரமும் மாறுபடும்.
(B) அவ்வாறு செய்யாவிட்டால் உங்களுக்கு ஆபத்தாகிவிடும்.
(C) நீங்கள் எப்போதும் நீக்குப்போக்குடன் சூழ்நிலைக்கேற்ப செயல்படவேண்டும்.

*விடை: (A). குறிப்பு: நீங்கள் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குச் செல்கையில், சூழ்நிலைகளும் மாறும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 103)*

**422. வாகனத்தைச் சுமுகமாக நிறுத்திட, நல்ல ஓட்டுநர்கள்**

(A) முன்கூட்டியே நிறுத்தங்களைப் பார்த்து, அடிக்கடி வாகனத்தின் கண்ணாடிகளைக் கவனித்து, முன்கூட்டியே பிரேக் போடுவார்.
(B) வாகனத்தின் பிரேக் இயக்கத்தை நன்கு தெரிந்து வைத்திருப்பார்.
(C) முடிந்தவரை பிரேக் போட்டுப் பழகுவார்.

*விடை: (A). குறிப்பு: நல்ல ஓட்டுநர்கள் தங்கள் வாகனத்தைத் திடீரென நிறுத்தவேண்டிய சூழ்நிலைகளைத் தவிர்ப்பார்கள். விபத்தைத் தவிர்க்க முற்றிலும் அவசியமானபோது மட்டுமே அவர்கள் அவ்வாறு செய்வார்கள். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 104)*





**423. உங்கள் வாகனத்தை எப்போது நிறுத்துவது நல்ல பழக்கம்?**

(A) பாதுகாப்புக்காக நிறுத்தக் கோட்டிற்கு வெகு முன்பாக.
(B) பாதுகாப்பானபோது துரிதமாக ஓட்டிச் செல்வதற்காக நிறுத்தக் கோட்டின்மீது.
(C) நிறுத்தக் கோட்டிற்கு முன்பாக, மிக அருகில்.

*விடை: (C). மற்ற வாகனங்களுக்கும், நடையர்களுக்கும் தடையில்லாமல் உங்கள் வாகனத்தை நிறுத்தக்கூடிய பாதுகாப்பான இடத்தை நிறுத்தக் கோடு காட்டுகிறது. நிறுத்தக் கோட்டிற்குப் பிறகு அல்லது அதன்மீது வாகனத்தை நிறுத்தினால், மற்ற வாகனங்களின் ஓட்டுநர்கள் உங்கள் வாகனத்தைச் சுற்றிவந்து, தங்கள் பாதுகாப்புக் கோட்டிலிருந்து வெளியேறி, தங்களுக்கும் சாலையை உபயோகிக்கும் மற்றவர்களுக்கும் ஆபத்தை உண்டாக்கக்கூடும். நடையர்களும் தங்களது பாதையிலிருந்து வெளியேறி வாகனங்களின் பாதையில் செல்வது ஆபத்தானது. நிறுத்தக் கோட்டிலிருந்து வெகு முன்பாக நிறுத்துவதால் மற்ற வாகனங்கள் பின்தங்கிவிடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 104)*

**424. நிறுத்தும்போது, முன்னாலுள்ள வாகனத்திற்கும் உங்கள் வாகனத்திற்கும் இடையில் இருக்கவேண்டிய பாதுகாப்பான தூரம்**

(A) 2 மீட்டருக்குக் குறையக்கூடாது.
(B) 4 மீட்டருக்குக் குறையக்கூடாது.
(C) குறிப்பிட்டதல்ல. எவ்வளவு துரிதமாகப் புறப்படமுடியும் என்பதைப் பொறுத்தது.

*விடை: (A). குறிப்பு: முன்னாலுள்ள வாகனத்திற்கு மிக அருகில் இருந்தால், இரு வாகனங்களும் புறப்படும்போது அதன் ஓட்டுநர் திடீரென பிரேக் போட்டால் மோதல் ஏற்படக்கூடும். மேலும், வாகனம் பழுதடைந்தால், நீங்கள் வெளியேற உங்களுக்கு இடமும் இருக்கும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 104)*

**425. ஏதேனும் போக்குவரத்துச் சூழ்நிலையில் வழக்கத்தைவிட அதிக நேரம் நீங்கள் நிறுத்துவதாக இருந்தால், கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கையாக**

(A) வாகனத்தின் இன்ஜினை அடைத்துவிடவும்.
(B) கைபிரேக்கை இழுக்கவும்.
(C) பிரேக் மிதிகட்டையை அழுத்தவும்.

*விடை: (B). குறிப்பு: கைபிரேக்கை இழுப்பதால், வாகனம் தற்செயலாக முன்னே அல்லது பின்னே ஓடுவதைத் தவிர்க்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 104)*

**426. விளக்கு சமிக்ஞை பச்சையாக மாறுவதற்காகக் காத்திருக்கும்போது, ஓட்டுதல் தொடர்பில்லாத எதையாவது செய்வதற்குப் பதிலாக நீங்கள் ------------------------.**

(A) கைகளையும் பாதங்களையும் ஓய்வெடுக்கவேண்டும்.
(B) சாலை நிலவர அறிவிப்புக்காக வானொலி கேட்கவேண்டும்.
(C) சுற்றுமுற்றும் பார்த்து, போக்குவரத்து நிலவரத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

விடை: (C). *குறிப்பு: படிக்கவும், இசையைச் சரிசெய்யவும், கைத்தொலைபேசியில் யாரையேனும் அழைக்கவும், பின் இருக்கையைத் திரும்பிப் பார்க்கவும் அல்லது இன்ஜின் பொறியை இயக்கி சூடேற்றவும் காத்திருக்கும் நேரத்தைப் பயன்படுத்தவேண்டாம். சில நொடிகளில் கவனம் திசைதிரும்பினால், நீங்கள் கவனமிழக்கலாம் அல்லது ஆபத்தான போக்குவரத்து நிலவரத்தைக் கவனிக்கத் தவறலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 104)*

**427. நீங்கள் செல்லும் தடத்தின் நடுவில் வாகனத்தை ஓட்டுவதால்**

(A) மற்ற வாகனங்கள் பாதுகாப்பான முறையில் உங்கள் வாகனத்தை தாண்டிச்செல்ல முடியும்.
(B) போக்குவரத்து சரளமாக இருக்கும்.
(C) மற்ற போக்குவரத்துக்குத் தடங்கல் ஏற்படாது.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 104)*

**428. பச்சை விளக்குக்காகக் காத்திருக்கும்போது, கொஞ்சம் கொஞ்சமாக முன்னே நகர்வது**

(A) ஏற்றுக் கொள்ளப்படும் உத்தி.
(B) ஆபத்தானது.
(C) புறப்பட்டுச் செல்லும் நேரத்தை மிச்சப்படுத்தும்.

விடை: (B). *குறிப்பு: இந்தப் பழக்கத்தால் விபத்துகள் நேரக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 105)*

**429. விளக்கு பச்சையாக மாறிவிட்டது. நீங்கள் புறப்பட்டுச் செல்ல வேகத்தைக் கூட்டுவதற்குமுன் ------------------------.**

(A) இடமும் வலமும் அணுகும் வாகனங்களைக் கவனிக்கவேண்டும்.
(B) சாலையை உபயோகிக்கும் மற்றவர்களின் சமிக்ஞைக்காகக் காத்திருக்கவேண்டும்.
(C) கூடுதலாக 5 விநாடிகள் தரவேண்டும்.

விடை: (A). *குறிப்பு: அணுகும் வாகனத்தின் ஓட்டுநர், அவரது பாதையின் சிவப்பு விளக்கைக் கடந்து செல்ல முயற்சிக்கக்கூடும். தற்காப்பு எண்ணத்துடன் நீங்கள் ஓட்டினால் விபத்தைத் தடுக்கலாம். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 105)*





**430. பச்சை விளக்கு மாறியதும் புறப்பட்டுச் செல்வதற்குமுன், சாலையை இன்னும் கடந்து கொண்டிருக்கும் நடையர்களைக் கவனித்து, வழிவிடவேண்டும். ஏனெனில்**

(A) அவர்கள் விளக்கைக் கவனிக்கவில்லை.
(B) அவர்கள் மெதுவாக நடக்கிறார்கள்.
(C) அவர்கள் குறித்த நேரத்தில் உங்களுக்கு முன்னால் கடந்து செல்ல இயலாமல் போகலாம்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 105)*

**431. உங்களுக்கு முன்னால் புறப்பட்டுச் செல்லும் வாகனத்திற்கும் நீங்கள் ஓட்டும் வாகனத்திற்கும் இடையில் இருக்கவேண்டிய பாதுகாப்பான இடைவெளி என்ன?**

(A) 2 விநாடி இடைவெளி.
(B) 5 விநாடி இடைவெளி.
(C) பாதுகாப்பான இடைவெளி தேவையில்லை. வாகனங்கள் இரண்டும் நின்றபோதே அவற்றுக்கு இடையில் பாதுகாப்பான இடைவெளி இருந்தது.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 105)*

**432. சாலையில் செல்லும் தகுதி உள்ள வாகனம்**

(A) நல்ல மறுவிற்பனை மதிப்புள்ளது.
(B) அடிக்கடி பழுதடையாது.
(C) பரிசோதனைக்காக அனுப்ப தேவைப்படாதது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 105)*

**433. உங்கள் வாகனத்தின் பிரேக் விளக்குகள் செயல்படவில்லை,**

(A) நீங்கள் வாகனத்தை ஓட்டவே கூடாது.
(B) நீங்கள் பகலில் ஓட்டலாம், இரவில் ஓட்டக்கூடாது.
(C) நேரம் கிடைக்கும்போது பட்டறைக்கு ஓட்டிச் செல்லவேண்டும்.

விடை: (A). *குறிப்பு: மற்ற சமிக்ஞை விளக்குகள் ஏதேனும் பழுதடைந்திருந்தால், உங்கள் வாகனத்தை நீங்கள் ஓட்டக்கூடாது. அவ்வாறு ஓட்டினால், உங்கள் எண்ணத்தை அறிய முடியாத மற்ற ஓட்டுநர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடும். விபத்துகளும் நிகழும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 105)*

**434.** **உங்கள் வாகனங்களின் டயர்கள் தேய்ந்துவிட்டதை எப்படி தெரிந்துகொள்வீர்கள்?**
(A) ஈரமான சாலையில் பிரேக் போடும்போது டயர் சறுக்கினால்.
(B) டயர் சரடுகளின் ஆழம் 1.6 மில்லிமீட்டர் அல்லது அதைவிடக் குறைவாக இருந்தால்.
(C) டயரைத் தொடும்போது வழுக்கையாக இருந்தால்.

விடை: (B). *குறிப்பு: தேய்ந்துபோன அல்லது வழுக்கையான டயர்கள் உங்களுக்கும் சாலையை உபயோகிக்கும் மற்றவர்களுக்கும் ஆபத்தானவை. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 106)*

**435.** **தேய்ந்துபோன அல்லது வழுக்கையான டயர்கள்**
(A) ஈரமான சாலைகளில் மட்டுமே சறுக்கும்.
(B) எண்ணெய் பிசுக்கான சாலைகளில் மட்டுமே சறுக்கும்.
(C) கடுமையாக பிரேக் போட்டால் உலர்வான சாலைகளிலும் சறுக்கும்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 106)*

**436.** **பழுதடைந்த, தேய்ந்துபோன அல்லது அழுக்கான காற்றுத்தடுப்பு கண்ணாடி துடைப்பான்கள்**
(A) மழை பெய்யும்போது உங்கள் பார்வைக்கு இடையூறாக இருக்கும்.
(B) சூரிய ஒளியில் தெளிவாகப் பார்க்க உதவாது.
(C) மேற்காணும் (A) மற்றும் (B) இரண்டும்.

விடை: (C). *குறிப்பு: துடைப்பான்கள் பழுதடைந்து, தேய்ந்துபோய் அல்லது அழுக்காக இருந்தால் காற்றுத்தடுப்பு கண்ணாடியிலிருந்து அழுக்கையும் கறைகளையும் முழுமையாக நீக்கமுடியாது. தற்காலிகமாகப் பார்வை தடைபடுவதோடு, காற்றுத்தடுப்பு கண்ணாடியிலுள்ள அழுக்கும் கறைகளும் சூரிய ஒளியைப் பரப்பி, உங்கள் பார்வையைப் பாதிக்கக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 106)*

**437.** **உங்கள் பிரேக்குகள் "பஞ்சுபோல" இருக்கின்றன. இதற்கான காரணம் என்ன?**
(A) பிரேக் மிதி தேய்ந்துவிட்டது.
(B) பிரேக் திரவம் ஒழுகுகிறது.
(C) கைபிரேக் சற்றே மேலே இழுக்கப்பட்டுள்ளது.

விடை: (B). *குறிப்பு: பிரேக் திரவ அளவை அடிக்கடி சோதிக்கவும். படிப்படியான ஒழுகலால் முடிவில் பிரேக்குகள் செயல்படாமல் போய்விடக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 106)*





**438.** **ரேடியேட்டர் கூலன்ட் அளவை எப்போது சோதிக்கவேண்டும்?**
(A) வாகனத்தைப் பரிசோதனைக்கு அனுப்பும்போது.
(B) உங்கள் வாகனத்தின் இன்ஜின் சூடு ஆறியபிறகு.
(C) பெட்ரோல் நிலையத்தில் எரிபொருள் போடுவதற்கு முன்பு.

விடை: (B). *குறிப்பு: வாகனத்தின் இன்ஜின் சூடாக இருக்கும்போது ரேடியேட்டர் மூடியைக் கழற்றினால், ரேடியேட்டரில் உள்ள நீர் கொதித்து தெறிக்கக்கூடும். நீங்கள் அடிக்கடி ரேடியேட்டரின் தண்ணீரையும் கூலன்ட் அளவையும் கவனிக்கவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 106)*

**439.** **உங்கள் வாகனத்தின் இன்ஜின் எண்ணெய் அளவை எப்போது சோதிக்கவேண்டும்?**
(A) உங்களால் முடிந்த போது.
(B) வாகனத்தைப் பராமரிப்புக்கு அனுப்பும்போது மட்டும்.
(C) வழக்கமான இடைவெளியில்.

விடை: (C). *குறிப்பு: இன்ஜின் எண்ணெய் அளவு குறைவாக இருந்தால், இன்ஜினுக்குப் போதிய தொய்வு கிடைக்காது. இதனால் இன்ஜின் செயல்பாடு நிற்கக்கூடும். வாகனத்தின் உற்பத்தியாளர் பரிந்துரைத்தபடி எண்ணெய்யை மாற்றவேண்டும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 107)*

**440.** **உங்கள் வாகனத்தின் வழித்திருப்பும் சக்கர இயக்கம் இளகலாக இருந்தால் என்னவாகும்?**
(A) நீங்கள் ஓட்டும்போது வாகனம் ஆடும்.
(B) உங்கள் வாகனம் மேடுகளில் குலுங்கும்.
(C) உங்கள் வாகனம் சறுக்கும்.

விடை: (A). *குறிப்பு: வாகனத்தின் வழித்திருப்பும் சக்கர இயக்கத்தை அடிக்கடி சோதிக்கவும். ஏதேனும் குறைபாடு, எவ்வளவு சிறியதாக இருந்தாலும், வாகனத்தை ஓட்ட வேண்டாம். வாகனத்தின் வழித்திருப்பும் சக்கர இயக்கம் பழுதடைந்திருந்தால், உங்களுக்கு முழு கட்டுப்பாடு இருக்காது. இதனால் விபத்து நேரக்கூடும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 107)*

**441.** **வேலை மண்டலங்களை அணுகும் போது, நீங்கள் பார்க்க வேண்டியது,**
(A) சிறப்பு தகவல் மற்றும் எச்சரிக்கை அறிகுறிகள்.
(B) கட்டுமான தொழிலாளர்கள்.
(C) சைக்கிள் ஓட்டுபவர்கள் இவர்கள் மிகவும் பாதுகாப்பற்ற சாலை பயணர்கள்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 107)*

**442. வேலை மண்டல அறிகுறிகள் சிறப்பானவை, ஏனெனில்**
(A) ஆரஞ்சு மற்றும் பிற அறிகுறிகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டது
(B) சாலை பணி ஒப்பந்ததாரர் மூலம் போடப்பட்டது.
(C) ஏற்கனவே உள்ள அறிகுறிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். எ.கா., வேக வரம்பு.

விடை: (C). *வேலை மண்டல அறிகுறிகள் தற்காலிகமானது மற்றும் அது புதிய சாலை சூழ்நிலை காரணமான சுற்றுவழிகள், சந்து மூடல், போன்ற உங்கள் பாதுகாப்புக்காக போடபட்டது. (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 107)*

**443. வேலை மண்டலங்களில் ஓட்டுநர் கவனிக்கவேண்டியது.**
(A) தொழிலாளர்கள் என்ன செய்கிறார்கள் என்று கண்காணிக்கவும்.
(B) வேலை நடவடிக்கையில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக சாலையில் கவனம் செலுத்தவும்.
(C) வேலை தளத்தில் நுழையும் வாகனங்கள் மேல் கவனம் செலுத்தவும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 107)*

**444. பள்ளி மண்டலங்களில் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது, ஏனெனில்**
(A) குழந்தைகள் பாதுகாப்பு அம்சங்களை அறியாதவர்கள் மற்றும் அவர்களுக்கு சரியான தீர்ப்பு தெரியாது.
(B) பள்ளிக்கு வெளியே பல வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.
(C) குழந்தைகள் எப்போதும் தங்கள் கை தொலைபேசியில் விளையாடுவதில் மூழ்கியுள்ளனர்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 108)*

**445. பின்வரும் போக்குவரத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் பள்ளி மண்டலங்களில் பாதுகாப்பை அதிகரிக்க செயல்படுத்தப்பட்டுள்ளன:**
(A) நிறைய கண்காணிப்பு செயல்படுத்தும் அதிகாரிகள், சாலையில் 'ஜெவாக்கிங்'யெ அத்துமீறி நடப்பதை தடுக்க பிடிமானங்கள் மற்றும் சிவப்பு நடைபாதை.
(B) மிகவும் மோசமான குற்றங்களுக்காக கூடுதல் 'டிமெரிட்' புள்ளிகள் 'ஜெவாக்கிங்'யெ தடுக்க பிடிமானங்கள் மற்றும் சாலையில் சிவப்பு நடைபாதை.
(C) கூடுதல் பள்ளி பேருந்து காத்திருக்கும் பகுதிகள், போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் குற்றங்களுக்காக கூடுதல் "டிமெரிட்" புள்ளிகள்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 108)*





**446. சுரங்கங்களில் ஓட்டும் போது உங்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள்:**
(A) உங்கள் வாகனத்தின் ஹெட்லைட்டுகளை மற்றும் ரேடியோவை இயக்கவும்
(B) உங்கள் வாகனத்தின் ஹெட்லைட்டுகளை மற்றும் கீழே காற்று ஜன்னல்கள் இரக்கவும்
(C) நிறுத்தும் விளக்குகள் மற்றும் ரேடியோவை இயக்கவும்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 109)*

**447. பின்வரும் கூற்றுகளில் எது உண்மை இல்லை?**
(A) டயர் பழுதடைந்துவிட்டால் உங்கள் வாகனத்தை சுரங்கப்பாதையில் நிறுத்த முடியும்.
(B) உங்கள் கை தொலைபேசி பதிலளிக்க சுரங்கப்பாதையில் உங்கள் வாகனத்தை நிறுத்த முடியும்.
(C) சுரங்கப்பாதையில் உங்கள் டயரை மாற்ற முடியாது.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 109)*

**448. பின்வருவனவற்றில் எது சுரங்கங்களில் அனுமதி இல்லை?**
(A) 4.5m கீழே உயரம் உள்ள வாகனங்கள்.
(B) 2m அகலம் கொண்ட வாகனங்கள்.
(C) 40kmh வேக வரம்பு மற்றும் அதற்கு கீழே உள்ள வாகனங்கள்

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 109)*

**449. பின்வரும் வாகனங்களில் எது சுரங்கங்கத்தில் அனுமதியில்லை?**
(A) மோட்டார் வாகனத்துடன் இணைக்கப்பட்ட விளிம்பு வண்டிகள்
(B) கான்கிரீட் லாரிகள்
(C) இழுவை லாரிகள்

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 110)*

**450. சுரங்கங்களில் ஓட்டும் போது, வேகம் வரம்பு ______ மற்றும் அதற்கு கீழே உள்ள வாகனங்கள் கட்டாயமாக தீவிர இடது தடத்தில் பயணிக்க வேண்டும்.**
(A) 50 kmh
(B) 60 kmh
(C) 70 kmh

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 111)*

**451.** **தடத்தில் பயன்படுத்தும் அறிகுறிகள் (LUS) பெருபாலும் கொடுக்கும் தகவல்கல்**
(A) ஒரு சுரங்கப்பாதையில் இருக்கும் தடங்களின் எண்ணிக்கை.
(B) சுரங்கப்பாதையில் கார்கள் மட்டுமே பயன்படுத்த முடியும் தடங்கள்.
(C) சுரங்கப்பாதையில் போக்குவரத்துக்கு தடங்கள் மற்றும் தவிர்க்க வேண்டிய தடங்கள்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 111)*

**452.** **மாறுபடும் செய்தி அறிகுறிகள் போக்குவரத்து நிலைமைகள் பற்றி வாகன ஓட்டுநர்களுக்கு தெரிவிக்க பயன்படுத்தப்படுகிறது. இவை நெடுகிலும் காணப்படுகின்றன**
(A) விரைவு நெடுஞ்சாலைகள், மற்றும் விரைவு நெடுஞ்சாலைக்கு செல்லும் முக்கிய நெடுஞ்சாலைகள்.
(B) முக்கிய நெடுஞ்சாலைகள்.
(C) விரைவு நெடுஞ்சாலைகள்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 111)*

**453.** **சுரங்கப்பாதையில், ஒரு சிவப்பு வட்டம் இல்லாமல் தோன்றும் ஒரு மின்விளக்கு வேக வரம்பு அறிகுறி**
(A) அந்த சுரங்கப்பாதையின் இடப்பட்ட வேக வரம்பு.
(B) சுரங்கப்பாதையில் நெரிசல் இருக்கும் போது பரிந்துரைக்கப்பட்ட குறைந்த வேகம்.
(C) சுரங்கப்பாதையில் சரக்கு வாகனங்களின் வேக வரம்பு.


விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 111)*

**454.** **சுரங்கப்பாதையில் உங்கள் வாகனம் பழுதடைந்து விட்டால், நீங்கள்**
(A) அருகில் உள்ள SOS தொலைபேசியை பயன்படுத்தி செயல்பாடுகள் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் வாகனத்தை அருகில் உள்ள வாகன நிறுத்துமிடத்துக்கு இழுத்துச் செல்லவும்.
(B) அருகில் உள்ள SOS தொலைபேசியை பயன்படுத்தி செயல்பாடுகள் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டு உங்களுக்கு உதவ ஒரு மெக்கானிக்கை அனுப்ப கேட்பது.
(C) உங்கள் காப்பீட்டாளருடன் தொடர்பு கொண்டு 24 மணி நேர இயந்திர கோளாறு சேவை அனுப்பி வாகனத்தை இழுத்துச் செல்ல கேட்பது.

விடை: (A). *உங்கள் பழுதுப்பட்ட வாகனத்தை LTA மீட்பு குழுவினர் மூலம் இழுத்துச் செல்ல அனுமதிக்காவிடில் அது குற்றமாகும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 113)*









**455.** **மேற்காணும் படத்தில், 1, 2, 6 குறியிடப்பட்ட பாகங்கள் என்ன?**
(A) ஹெட்லைட், இன்ஜின் மூடி, முன்பக்க முட்டுத்தாங்கி.
(B) ஹெட்லைட், பொதி வைப்பிடம், முன்பக்க முட்டுத்தாங்கி.
(C) திசைகாட்டி விளக்குகள், இன்ஜின் மூடி, முன்பக்க முட்டுத்தாங்கி.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 116)*

**456.** **அதே படத்தில், 3, 4, 5 குறியிடப்பட்ட பாகங்கள் என்ன?**
(A) காற்றுத்தடுப்பு கண்ணாடி, பக்கவாட்டுக் கண்ணாடி, முன்பக்க முட்டுத்தாங்கி.
(B) காற்றுத்தடுப்பு கண்ணாடி, பக்கவாட்டுக் கண்ணாடி, கம்பியமைவு.
(C) காற்றுத்தடுப்பு கண்ணாடி, பின்பார்வை கண்ணாடி, கம்பியமைவு.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 116)*




**457.** மேற்காணும் படத்தில், 3, 4, 5 குறிமிடப்பட்ட பாகங்கள் என்ன?
(A) பிரேக் விளக்கு, பின்புற விளக்கு, பின்பக்க முட்டுத்தாங்கி.
(B) பின்புற விளக்கு, பிரேக் விளக்கு, பின்பக்க முட்டுத்தாங்கி.
(C) பிரேக் விளக்கு, பின்செல்லும் அடையாள விளக்கு, பின்பக்க முட்டுத்தாங்கி.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 116)*

**458.** அதே படத்தில், 1, 2, 6 குறிமிடப்பட்ட பாகங்கள் என்ன?
(A) திசைகாட்டி விளக்கு, பின்புற விளக்கு, பொதி வைப்பிடம்.
(B) திசைகாட்டி விளக்கு, பின்செல்லும் அடையாள விளக்கு, பின்பக்க முட்டுத்தாங்கி.
(C) திசைகாட்டி விளக்கு, பின்செல்லும் அடையாள விளக்கு, பொதி வைப்பிடம்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 116)*








**459.** மேற்காணும் படத்தில் 1, 2, 3 குறிமிடப்பட்ட பாகங்கள்
(A) எரிபொருள் அளவை, பயணத்தொலைவு அளவை, எச்சரிக்கை ஒலிகாட்டி.
(B) வெப்பநிலை அளவை, மொத்தத்தொலைவு அளவை, சமிக்ஞை காட்டி.
(C) எரிபொருள் அளவை, மொத்தத்தொலைவு அளவை, "ஹைபீம்" காட்டி.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 117)*

**460.** மேற்காணும் படத்தில் 4, 5, 6 குறிமிடப்பட்ட பாகங்கள்
(A) கை பிரேக் காட்டி, சமிக்ஞை காட்டி, விசைமானி.
(B) எரிபொருள் அளவை, மொத்தத்தொலைவு அளவை, சமிக்ஞை ஒளிகாட்டி.
(C) கை பிரேக் காட்டி, சமிக்ஞை காட்டி, வேக மானி.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 117)*

**461.** மேற்காணும் படத்தில் 7, 10, 11 குறிமிடப்பட்ட பாகங்கள்
(A) மொத்தத்தொலைவு அளவை, பேட்டரி எச்சரிக்கை ஒளி, காலி எரிபொருள் தொட்டி எச்சரிக்கை ஒளி.
(B) பயணத்தொலைவு அளவை, பேட்டரி எச்சரிக்கை ஒளி, காலி எரிபொருள் தொட்டி எச்சரிக்கை ஒளி.
(C) பயணத்தொலைவு அளவை, கியர்பாக்ஸ் எச்சரிக்கை ஒளி, காலி எரிபொருள் தொட்டி எச்சரிக்கை ஒளி.


விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 117)*

**462.** 123 ஆம் பக்கத்தில் உள்ள வரைபடத்தில் பகுதி 13ல் குறிப்பது
(A) கையேடு கியர் நிலையை காண்பிக்கும் காட்சி.
(B) தானியங்கி கியரை தேர்வை காண்பிக்கும் காட்சி.
(C) வேக நிலை தேர்வை காண்பிக்கும் காட்சி.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 117)*

**463.** பக்கம் 123ல் உள்ள படத்தில், 8, 9, 12 குறியிடப்பட்ட பாகங்கள்
(A) எரிபொருள் அளவை, கதவு திறந்திருப்பதை எச்சரிக்கும் ஒளி, வேக மானி.
(B) வெப்பநிலை அளவை, கதவு திறந்திருப்பதை எச்சரிக்கும் ஒளி, மொத்தத்தொலைவு அளவை.
(C) வெப்பநிலை அளவை, கதவு திறந்திருப்பதை எச்சரிக்கும் ஒளி, வேக மானி.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 117)*








**464.** 124 ஆம் பக்கத்தின் உள்ள படத்தில், 1, 9, 5 குறியிடப்பட்ட பாகங்கள்
(A) கை பிரேக், கியர் விசைக்கோல், துடைப்பான் விசை.
(B) கியர் விசைக்கோல், கை பிரேக், அபாய விளக்கு விசை.
(C) கியர் விசைக்கோல், கை பிரேக், துடைப்பான் விசை.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 118)*

**465.** பக்கம் 84ல் உள்ள படத்தில், 7, 4, 2 குறியிடப்பட்ட பாகங்கள்
(A) பிரேக் மிதிகட்டை, அக்சலரேட்டர் மிதிகட்டை, கிளட்ச் மிதிகட்டை.
(B) கிளட்ச் மிதிகட்டை, பிரேக் மிதிகட்டை, அக்சலரேட்டர் மிதிகட்டை.
(C) பிரேக் மிதிகட்டை, அக்சலரேட்டர் மிதிகட்டை, கியர் மிதிகட்டை.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 118)*

**466.** அதே படத்தில், 3, 6, 8 குறியிடப்பட்ட பாகங்கள்
(A) அபாய விளக்கு விசை, திசைகாட்டி விசை, வாகன இயக்கக் கம்பி.
(B) அபாய விளக்கு விசை, திசைகாட்டி விசை, வாகன இயக்கச் சக்கரம்.
(C) பின்செல்லும் விளக்கு விசை, திசைகாட்டி விசை, வாகன இயக்கச் சக்கரம்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 118)*

**467.** கீழ்க்காணும் படத்தில், 1, 2, 3 குறியிடப்பட்ட மிதிகட்டைகள்




(A) பிரேக் மிதிகட்டை, கிளட்ச் மிதிகட்டை, அக்சலரேட்டர் மிதிகட்டை.
(B) கிளட்ச் மிதிகட்டை, அக்சலரேட்டர் மிதிகட்டை, பிரேக் மிதிகட்டை.
(C) கிளட்ச் மிதிகட்டை, பிரேக் மிதிகட்டை, அக்சலரேட்டர் மிதிகட்டை.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 118)*

**468. வாகன பாதுகாப்பின் பொறுப்பாளிகள்**
(A) வாகன உரிமையாளர்கள்.
(B) போலீசார்.
(C) கார் நிறுத்தும் நடத்துபவர்கள்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 119)*

**469. பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?**
(A) ஒரு இருண்ட பகுதியில் வாகனத்தை நிறுத்துவதால் திருடர்கள் எளிதாக உங்கள் வாகனத்தை கண்டுபிடிக்க முடியாது அதனால் பிற தெரியும் வாகனங்களை தேர்ந்தெடுப்பார்கள்.
(B) மின்விளக்கு உள்ள பகுதியில் வாகனத்தை நிறுத்துவதால் திருடர்களை தடுக்க முடியும்.
(C) மின்விளக்கு உள்ள பகுதியில் வாகனத்தை நிறுத்துவது நல்லதல்ல ஏனென்றால் திருடர்கள் உள்ளே விலைமதிப்புடைய பொருட்களை பார்க்க முடியும்.

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 121)*

**470. இரவில் உங்கள் வாகனத்தில் திருட்டை தடுக்க பின்வரும் எந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்?**
(A) வாகனத்தின் உட்புற விளக்குகளை அணைத்துவிடுங்கள் அப்போது வாகனத்தில் உள்ள உடமைகளை பார்க்க முடியாது.
(B) வாகனத்தின் உட்புற விளக்குகளை எரிய விடுங்கள் அப்போது திருடர்கள் வாகனத்தை உடைத்தால், அவர்களை எளிதில் காண முடியும்.
(C) உட்புற விளக்குகளை அணைத்து உங்கள் விலைமதிப்புடைய மற்றும் பொருட்களை (பொதிவைப்பிடம்) பூட்டில் வைத்து பூட்டுங்கள்.

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 120)*

**471. பார்க்கிங் கூப்பன்கள் காண்பிக்கப்பட வேண்டும்**
(A) பொருள்கள் தாங்கி இருக்கும் முன்பலகை மீது வெளியில் இருந்து பார்த்தால் தெரியவேண்டும்.
(B) ஓட்டுநர் ஜன்னல் அல்லது பின்புற கால் ஜன்னல்.
(C) பின்பக்க கண்ணாடியில்.

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 123)*





**472. பார்க்கிங் கூப்பன் தாவல்கள் (டெப்ஸ்)**
(A) மடித்திருக்க வேண்டும்
(B) ‘X’ குறிக்கப்பட்டிருக்கும்.
(C) முற்றிலும் கிழிக்கப்பட்டிருந்தது

விடை: (C). *குறிப்பு: முறைகேடுள்ள பார்க்கிங் கூப்பன்களை காட்டினால் குற்றமாகும். (Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 123)*

**473. வாகனம் நிறுத்தும் இடங்களில் இருக்கும் சிவப்பு குறி**
(A) அவசர உதவி வாகனங்கள்.
(B) சீசன் நிறுத்தம் சீட்டு வைத்திருப்பவர்கள்.
(C) ஊனமுற்ற ஓட்டுநர்கள்

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 125)*

**474. வெள்ளை நிற வாகனம் நிறுத்தும் இடங்கள் காணப்படுவது**
(A) தடை செய்யப்பட்ட மண்டலத்திற்கு வெளியே.
(B) வணிக கட்டிடங்களில்
(C) தடை மண்டலத்தில்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 125)*

**475. மஞ்சள் நிற குறியிடப்பட்ட வாகனம் நிறுத்தும் இடங்கள் காணப்படுவது**
(A) தடை செய்யப்பட்ட மண்டலத்திற்கு உள்ளே உள்ள வாகனம் நிறுத்தும் இடங்கள்
(B) பல அடுக்கு வாகனம் நிறுத்தும் இடங்கள்
(C) சாலையோர வாகனம் நிறுத்தும் இடங்கள்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 126)*

**476. சிவப்பு மற்றும் வெள்ளை குறிக்கப்பட்ட வாகனம் நிறுத்தும் இடங்கள்**
(A) கண்டிப்பாக சீசன் வாகன நிறுத்தத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.
(B) ஊனமுற்றவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன
(C) சீசன் வாகன நிறுத்தத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன ஆனால் கூப்பன் நிறுத்தத்துக்காக சில நேரங்களில் ஒதுக்கப்படும்

விடை: (C). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 126)*

**477. மோட்டார் கோரிக்கை கட்டமைப்பு மோட்டார் வாகனஓட்டுநர் அவசியம் செய்ய வேண்டியது**

(A) விபத்து பற்றிய அறிக்கையை காப்பீட்டாளருக்கு உங்கள் வாகனம் சேதம் அடைந்தாலும் இல்லாவிட்டாலும் அதை பொருட்படுத்தாமல் தெரியப்படுத்த வேண்டும்

(B) போக்குவரத்து போலீஸ்க்கு விபத்து பற்றிய எல்லா அறிக்கைகளையும் குறைந்தது ஒரு வாகனமாவது.

(C) காயங்கள் சம்பந்தப்பட்ட சேதமடைந்திருந்தால் தெரியப்படுத்தவும் எந்தவொரு விபத்தையும் காப்பீட்டாளருக்கு அறிக்கை செய்யவும்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 127)*

**478. விபத்து பற்றிய எந்தவொரு அறிக்கையும் செய்யப்பட வேண்டியது**

(A) 12 மணி நேரத்திற்குள்

(B) 24 மணி நேரத்திற்குள்

(C) 48 மணி நேரத்திற்குள்

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 127)*

**479. விபத்து குறித்து உங்கள் காப்பீட்டாளருக்கு அறிக்கை கொடுக்க தவறினால்**

(A) காப்பீட்டாளர் உடனடியாக உங்கள் கொள்கையை ரத்து செய்யகூடும்

(B) காப்பீடு கொள்கையை மீறுகின்றதாக கருதப்படும்.

(C) நீங்கள் கோரும் தொகையிலிருந்து 50% செலுத்த வேண்டும் என்று அர்த்தம்

விடை: (B). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 127)*

**480. மோட்டார் காப்பீட்டு கொள்கையை ஓட்டுநர் செயல் மீறுகின்றது என்று இருந்தால்**

(A) காப்பீட்டாளர் எந்தக் கோரிக்கைக்கும் பொறுப்பு ஏற்காது.

(B) நீங்கள் உங்கள் (NCD) எப்போதும் இழக்க நேரிடும்.

(C) உங்கள் உரிமம் ரத்து செய்யப்படும்

விடை: (A). *(Mighty Minds புதிய நெடுஞ்சாலை விதிகள் நூல் 1 - பக்கம் 127)*